SAPTHAGIRI
(TAMIL)
SPIRITUAL ILLUSTRATED
MONTHLY
Volume:3, Issue:1,
Pages:56
AUGUST - 2023,
Price Rs.20/-

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

ஆகஸ்ட் 2023

விலை ரூ.20/-



திருமலையப்ப ஸ்வாமி பவித்ரோத்ஸவம்

27-08-2023 முதல் 29-08-2023 வரை

# திருமலை திருப்பதி தேவஸ்தானம்

ஸப்தகிரி இதழுக்கு தாங்கள் அளித்து வரும் ஆதரவு தன்னிகரற்றது!
தி.தி.தேவஸ்தானத்திற்கும் வாசகர்களுக்குமிடையே ஒரு பாலமான "ஸப்த வர்ண"
சமய மாத இதழ் "ஸப்தகிரி"யின் விலையில் மாற்றம்!!

**உங்கள் இல்லங்களுக்கே அலர்மேல் மங்கை உறை மார்பன்**
**மாதாமாதம் எழுந்தருளும் அனுபூதியைப் பெறுங்கள்**

ஸப்தகிரி
சமய
மாத இதழுக்கு
சந்தா
செலுத்துங்கள்...



திருமலையப்பனின்
அக்ஷர பிரசாதமான
"ஸப்தகிரி"யை
திங்கள்தோறும்
பெற்றிடுங்கள்



# ஸப்தகிரி
## சமய மாத இதழ்



(தெலுங்கு, தமிழ், கன்னடம், ஹிந்தி, ஆங்கிலம், சமஸ்கிருதம்)

.....சந்தா விவரங்கள்.....

தனிப்பிரதி : ரூ.20/-
வருடச் சந்தா: ரூ.240/-
ஆயுள் சந்தா(12 வருடங்கள்) : ரூ.2,400/-
அயல்நாட்டு வருடச்சந்தா : ரூ.1,030/-

**விவரங்களுக்கு :**

பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தே. அச்சக வளாகம், கே.டி. சாலை, தி.தி.தே. திருப்பதி - 517 507.
தொலைபேசி எண்கள் : 0877-2264363, 2264543



*க்லைப்$_{3}$யம் மா ஸ்ம க$_{3}$ம: பார்த$_{2}$*
*நைதத்த்வய்யுபபத்$_{3}$யதே।*
*க்ஷுத்$_{3}$ரம் ஹ்ருத$_{3}$யதெ$_{3}$ளர்ப$_{3}$ல்யம்*
*த்யக்த்வோத்திஷ்ட$_{2}$ பரந்தப ॥*

அர்ஜுனா! அலியின் தன்மையை அடையாதே; உனக்கு இது பொருத்தமானதன்று. பரந்தபா! (எதிரிகளை வாட்டுபவனே!) இழிந்த உள்ளத்தின் தளர்ச்சியை விடுத்துப் போருக்காக எழுந்து நில்.

*– ஸ்ரீமத் பகவத் கீதை 2–3*



*மாணிக்கம்கட்டி*
*வயிரம்*
*இடைகட்டி*
*ஆணிப்பொன்னால்*
*செய்த*
*வண்ணச்*
*சிறுத்தொட்டில்*
*பேணி*
*உனக்குப்*
*பிரமன்*
*விடுதந்தான்*
*மாணிக்குறளனே!*
*தாலேலோ*
*வையமளந்தானே!*
*தாலேலோ*

நவரத்தினங்களில் தலைசிறந்த மாணிக்கத்தைக் கட்டியும், இடையிடையே வைரக்கற்களைப் பதித்தும், மாற்றுக் குறையாத சுத்தமானப் பொன்னால் செய்யப்பட்ட, அழகிய சிறிய தொட்டில் நான்முகக் கடவுள் பிரம்மா, விரும்பி உனக்கு அனுப்பி இருக்கிறான். முன்னொரு சமயம், அந்தணச் சிறுவனாக வாமன அவதாரம் எடுத்தவனே உனக்குத் தாலாட்டு. ஓங்கி உலகளந்த உத்தமனாய் திரிவிக்கிரம அவதாரம் எடுத்தவனே உனக்குத் தாலாட்டு.

*- பெரியாழ்வார் திரு.1:3:1*

# உபமாக ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 17-09-2023 | ஞாயிறு | | சேனாதிபதி உத்ஸவம், அங்குரார்ப்பணம் |
| 18-09-2023 | திங்கள் | வைரகவச ஆபரணத்துடன் தங்கத்திருச்சி உத்ஸவம், துவஜாரோஹணம். | பெரிய சேஷ வாகனம் |
| 19-09-2023 | செவ்வாய் | சிறிய சேஷ வாகனம் | ஹம்ஸ வாகனம் |
| 20-09-2023 | புதன் | சிம்ம வாகனம் | முத்துப்பந்தல் வாகனம் |
| 21-09-2023 | வியாழன் | கல்ப விருக்ஷ வாகனம் | சர்வ பூபால வாகனம் |
| 22-09-2023 | வெள்ளி | பல்லக்கில் மோகினி அவதாரம் | கருட சேவை |
| 23-09-2023 | சனி | ஹனுமத் வாகனம்-மாலை வஸந்தோத்ஸவம் | யானை வாகனம் |
| 24-09-2023 | ஞாயிறு | சூரியப்பிரபை வாகனம் | சந்திரப்பிரபை வாகனம் |
| 25-09-2023 | திங்கள் | ரதோத்ஸவம் | குதிரை வாகனம் |
| 26-09-2023 | செவ்வாய் | பல்லக்கு உத்ஸவம், தீர்த்தவாரி அவப்ருதோத்ஸவம், சக்ரஸ்நானம் | திருச்சி உத்ஸவம் துவஜாவரோஹணம் |

உபமாகா ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி திருத்தலம் விசாகப்பட்டிணம் மாவட்டத்தில் நக்க பள்ளி வட்டத்தில் உள்ளது. இந்த ஆலயத்தில் பாஞ்சராத்ர ஆகமப்படி ஸ்வாமிக்கு பூஜைகள், வருடாந்திர கல்யாணோத்ஸவம் (5 நாட்கள்), பிரம் மோத்ஸவம், அத்யயனோத்ஸவம், திருக்கல்யாணம், ஆழ்வார்கள் திருநட்சத்திரங்கள், ஸ்ரீராமரின் அத்யயனோத்ஸவம், வைகாச சுத்த ஏகாதசி நாளில் ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி வருடாந்திர கல்யா ணோத்ஸவம், தனுர் சங்கரமணம் போன்றவைகளும் வாகன சேவைகளில் ஸ்ரீவேங்க டேஸ்வர ஸ்வாமி தனித்தும், உபய நாச்சிமார்களுடனும் கிராம திருவீதி வலம் வந்து அருள் புரிகின்றார். வடக்கு வாயில் தரிசனம் இந்த ஆலயத்தின் சிறப்பாகும். இம்மலை கருட வடிவில் உள்ளதால் "கருடாத்திரி" என்பர்.

குழந்தையில்லாதவர்கள், ஸ்வாமிக்கு அபிஷேகம் நடை பெறும்போது வழங்கும் பஞ்சாம்ருதத்தை பிரசாதமாக அருந்தினால் குழந்தை பாக்கியம் நிச்சயம் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

2015 ஆம் ஆண்டிலிருந்து, திருமலை திருப்பதி தேவஸ் தான மேலாண்மையின் கீழ் இவ்வாலயம் செயல்பட்டு வருகின்றது.






வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

ஆகஸ்ட் 2023

மலர் 03 இதழ் 01


## உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| திங்கள் தோறும் ஒரு திருவேங்கடப்பாசுரம் **திருவேங்கடவனை எங்கே தேட வேண்டும் தெரியுமா?** -பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி. | 07 |
| கல்வி வரமருளும் ஸ்ரீஹயக்ரீவ பெருமான் -நெய்வாசல் நெடுஞ்செழியன், சிதம்பரம். | 10 |
| வரம் தரும் வரலக்ஷ்மி -திரு. கே. இராமநாதன், சேலம். | 13 |
| ஜோதிட சாஸ்திரம் : **வேத ஜோதிடத்தில் 12 வீடுகள்** - முனைவர். ஆ.முத்து கிருஷ்ண ஆச்சாரி, சென்னை. | 16 |
| நாகசதுர்த்தியும் கருட பஞ்சமியும் -முனைவர் பா. காயத்ரி, அம்பத்தூர். | 18 |
| அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை: **அகஸ்தியர்** - திரு.எஸ்.ஸ்ரீதுரை, காஞ்சிபுரம். | 22 |
| ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் - டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர். | 25 |
| ஸ்ரீசுதர்சன சக்கரம் - திரு. ஏ.கே. கோபி, கள்ளக்குறிச்சி. | 31 |
| 108 திவ்வியதேச வைபவம் : **திருவேளுக்கை** - உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை. | 34 |
| அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும் : **திருவரங்கப்பெருமாள் அரையர்** - ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை. | 37 |
| பதஞ்சலியின் யோக சூத்திரங்கள் -திரு.எம்.எஸ்.சுகுமார், சென்னை. | 39 |
| ஏகாதசி - திரு. துளசி கிருஷ்ணா, சென்னை. | 40 |
| தரணி போற்றும் தணிகைவேலன் - திரு. ப.சரவணன், திருக்குடந்தை. | 42 |
| ஆயுர்வேதம் : **பீட்ரூட்** - திருமதி வி. உஷா, திருப்பதி. | 44 |
| ராசிபலன்கள் : **ஆகஸ்ட் 2023** -டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம். | 45 |
| நீதிக்கதை : **மகிழ்ச்சி பொங்கும்** -திரு. ரா. அருண்குமார், புதுச்சேரி. | 47 |
| சித்திரக்கதை : **பகாசுரன் வதம்** | 52 |



*சிறப்பு ஆசிரியர் :*
**திரு. A.V. தர்மா ரெட்டி,** ஐ.டி.இ.எஸ்.,
செயலாட்சித் தலைவர்(F.A.C.), தி.தி.தே.

*வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :*
Dr. K. **ராதாரமணா,** எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,

ஆசிரியர் :
Dr. V.G.**சொக்கலிங்கம்,** எம்.ஏ., பி.எச்டி.,

அச்சிடுபவர் :
**திரு. பி.ராமராஜு,** எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.

டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.

*புகைப்படங்கள் :*
**திரு.** P.N. **சேகர்**
**திரு.** B. **வெங்கடரமணா**



*பிரதிகளுக்கு:*
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360

நீங்கள் ஸப்தகிரி இதழை
www.tirumala.orgயில் பார்த்து,
படித்து மகிழலாம். ஆலோசனைகள்/
கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri.helpdesk@tirumala.org



| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |



இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்


### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : *உபயநாச்சிமார்களுடன் திருமலையப்ப ஸ்வாமி, திருமலை.*
பின்னட்டை : *ஸ்ரீபத்மாவதி தாயார், திருச்சானூர்.*



# சனாதன தர்மத்தின் பாதையில் பயணிப்போம்!

வேதங்கள், உபநிடதங்கள், புராணங்கள், மந்திர சாஸ்திரங்கள், ஸ்தோத்திரங்கள், சனாதன தர்மத்தின் தூண்களாக விளங்குகின்றன. அவற்றின் மேன்மையினை எப்போதும் நினைவில் நிறுத்துவதே வாழ்க்கையின் நோக்கம். இவை வாழ்க்கைக்கு அப்பாற்பட்டவை என எண்ணாமல், இவை வாழ்க்கையை சரிப்படுத்தக் கூடியவை எனும் உண்மையை ஏற்றுக்கொண்டால் வாழ்க்கை ஆனந்தமாக அமையும்.

காலம் காலமாகப் பின்பற்றப்பட்டு வரும் ஒரு தர்மம் சனாதன தர்மம் மட்டுமே. *''ஏகம் சத் விப்ரா பஹுதாவஸந்தி''* என ருக்வேதம் கூறுவதுபோல், சனாதன தர்மத்தின் பல செயல் முறைகள், சாதனைகள், சாதனையை தேடுபவர்களின் வசதிக்காகக் காட்டப்படுகின்றன. பல்வேறு சக்திகளைக் கொண்ட பல தேவதைகள், அவைகளுக்கான வழிபாட்டு முறைகள், பல்வேறு விரதங்கள், அவற்றினைக் கடைபிடிப்பதற்கான வழிமுறைகள் சனாதன தர்மங்களாகக் கூறப்படும் வழிமுறையாகும்.

நித்தியம் வாழ்க்கையில் நாள்தோறும் தர்மத்தை தொடர்ந்து கடைபிடிப்பது என்பது அமைதியான வாழ்க்கைக்கு வழிவகுப்பதோடு மட்டுமின்றி அத்தர்மமே நம்மை காக்கும் கவசமாகவும் விளங்குகின்றது.

இது குறித்தே ''தர்மோ ரக்ஷதி: ரக்ஷித:'' எனக் குறிப்பிடப்படுகிறது. புராண இதிகாசங்களிலும், சாஸ்திரங்களிலும் உள்ள அனேக அற்புதமான விஷயங்கள் நம் அன்றாட வாழ்க்கையை நடைமுறைப்படுத்தப் பயன்படுகின்றன. பரம்பொருளானவர் தாம் படைத்த அனைத்து உயிர்களும் ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட கட்டமைப்பிற்குள் செயல்பட வேண்டும் என விதிக்கிறார். இவ்வாறு பிரபஞ்சமே ஒரு சீராக இயங்கச் செய்த பரபிரம்மா மனித மனதிற்கும் முழுசுதந்திரம் அளித்தார். மனிதனின் அறிவுத் திறனும் சரியான பாதையில் செல்ல தர்மத்தைக் கற்பிக்கும் வேதவடிவான சாஸ்திரங்களையும் பரம்பொருளானவர் வழங்கியுள்ளார்.

நாம் சனாதன தர்மத்தைச் சேர்ந்தவர்கள். தர்மம் என்பது கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்று காலங்களுக்கும், அனைத்து தேசம் மற்றும் எல்லா பகுதிகளுக்கும் பொருந்தக்கூடிய அத்தர்மத்தை கடைபிடிப்பதே தர்மமாகும். வேதங்கள் சாதாரண மக்களால் அனுக முடியாததால் நாட்டின் காலங்களுக்கு ஏற்ப வேதங்களுக்கு முரணான நடைமுறைகளை மகரிஷிகள் தம் ஸ்மிருதிகளில் இணைத்தனர். இவ்வகையில் திருவேங்கடமுடையானுக்கான அனேக ஆசாரங்கள், சம்ப்ரதாயங்கள், சமய சிறப்புகள் போன்றவற்றை பரப்புவதில் சிறப்பான பணி செய்தவர்களில் ஸ்ரீமத் இராமானுஜரும், ஸ்ரீமத் சங்கரரும் போற்றப்படுகின்றனர்.

ஆனால் தற்போது மாறிவரும் காலத்திற்கேற்ப கூட்டுக்குடும்ப முறை சீர்குலைந்து, வேலை வாய்ப்பிற்காக குழந்தைகள் வெளிநாடு செல்வது, வேறு மாநிலங்களுக்குச் செல்வது, மேற்கத்திய நாகரிகம், பெரியவர்கள் செய்வதும், சொல்பதும் அர்த்தமற்றவை எனும் உணர்வு இத்தலைமுறையினரிடையே அதிகரித்து, நல்லொழுக்கங்களும் மறைந்து வருகின்றன. எனவே நாம் என்ன செய்கின்றோம், என்ன செய்தல் வேண்டும் என்பதை தெரிவிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இவ்வகையில் சனாதன தர்மத்தினை பரப்புவதின் ஒரு பகுதியாக தி.தி.தேவஸ்தானம் இந்து தர்ம பிரசார பரிஷத் எனும் பெயரில் பல பண்பாட்டு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றது. நாடு முழுவதும் பல பெரிய சிறிய கோயில்கள், பஜனைக் கூடங்கள் கட்டப்பட்டிருப்பது பெரிய விஷயமே என்று சொல்லலாம். இவையாவும் இந்துக்களை குறிப்பாக இளைஞர்கள் நம் பாரம்பரியத்தின் முக்கியத்துவத்தை அறிந்து, அவற்றை கடைபிடித்து, வழிகாட்டியாகவும் இருத்தல் வேண்டும் எனும் லட்சயத்துடன் செயல்பட்டு வருகின்றது. நாம் அனைவரும் சனாதன தர்மத்தை கடைபிடித்து ஒழுக்க நெறிக்கு கட்டுப்பட்டு சனாதன தர்ம பாதையில் பயணித்து நம் வாழ்வுதனை நிலையானதாக்குவோம்.

திங்கள் தோறும் ஒரு திருவேங்கடப் பாசுரம்



# திருவேங்கடவனை எங்கே தேட வேண்டும் தெரியுமா?

– பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி, 94434 39963.

பொய்கை ஆழ்வார் திருவேங்கடவன் மீது ஒரு அருமையான பாசுரம் பாடியிருக்கிறார். அந்தப் பாசுரம் இது தான்

*உளன் கண்டாய் நன்னெஞ்சே! உத்தமன் என்றும்*
*உளன் கண்டாய், உள்ளுவார் உள்ளத்து -*
*உளன் கண்டாய்*
*வெள்ளத்தின் உள்ளானும் வேங்கடத்து மேயானும்*
*உள்ளத்தின் உள்ளான் என்று ஓர்*

ஒரு விஷயத்தை மூன்று முறை சொல்வது வேத மரபு. “சாந்தி சாந்தி சாந்தி” என்று மூன்று முறை சொல்லுகின்றோம். இதை ஒட்டி ஆழ்வாரும் “பொலிக பொலிக பொலிக” என்று மூன்று முறை சொன்னார். *“சத்தியம் சத்யம் புன சத்யம், யதிர் அஜோ ஜகத் குரு”* என்பது போல பொய்கையாழ்வாரும் இந்தப் பாசுரத்தில் “உளன் உளன் உளன்” என்று மூன்று முறை சொல்லி இருக்கிறார்.

இதை மற்றவர் உணர்வது இருக்கட்டும். சொல்வது எல்லோருக்கும் எளிது தானே... அதனால் பெரியவர்கள் முதலில் தங்கள் மனத்துக்குச் சொல்வார்கள். அப்படியே பொய்கையாழ்வாரும் மனதுக்குச் சொல்லுகின்றார். என் மனமே, பாற்கடலில் பள்ளி கொண்டு லோக வியாபாரத்தை செய்து கொண்டிருக்கும் அந்தப் பெருமாள் திருவேங்கட மலையில் நின்று கொண்டு அருளாட்சி புரிந்து கொண்டிருக்கிறான். அவனுடைய நோக்கம் ஒரு சேதனன் மனதிலே இருந்து கொண்டு, அவனை இரட்சிப்பதுதான், நீ அதை அறியாமல் இருக்கலாமா? பாற்கடலில் உள்ளவனும், திருவேங்கடத்தில் நிற்பவனும், உன் உள்ளத்தில் இருப்பவன் என்று யோசிக்க ஏன் மறுக்கிறாய்?

திருப்பாற்கடல், திருவேங்கடம் முதலிய இடங்கள் எம்பெருமானுக்கு உகந்த தலங்களானாலும் அவ்விடங்களில் எம்பெருமான் இருப்பது சமயம் பார்த்து ஞானிகளின் மனத்திலே (விலக்காதார் நெஞ்சில் வந்து) புகுவதற்காகவேயாம். ஸ்ரீவசநபூஷனத்தில் – திருமாலிருஞ்சோலை மலையே என்கிறபடியே உகந்தருளின நிலங்களெல்லாவற்றிலும் பண்ணும் விருப்பத்தை இவனுடைய உள்ளத்திலும் பண்ணும் – அங்குத்தை வாஸம் ஸாதநம், இங்குத்தை வாஸம் ஸாத்யம்.

இறைவன் எல்லோருடைய உள்ளத்திலும் உறைகின்றான். ஒவ்வொரு ஜீவாத்மாவுக்குள்ளும் இருப்பது அந்தப் பேருயிரல்லவா? அர்த்த பஞ்சகத்தில் முதலிரண்டு விஷயம் மிக்க இறை நிலையும் மெய்யாம் உயிர் நிலையும் தானே... ஆனால் அவன் உறைவது பலருக்கும் உரைக்க வில்லை என்பது தான் பிரச்சனை.

அவன் கண்விழி புகுந்து, நம்முடைய இதயத்தில் உறைவதை உள் பக்கமாகப் பார்க்க மறுக்கின்றோம். ஒரு புகைப்படக் கருவி இருக்கிறது. அந்த கருவி ஒரு



நொடிக்குள் அத்தனைப் படங்களையும் பிடித்து அடக்கிக் கொள்வது போல நம்முடைய ஊனக் கண்ணின் வழியே அவன் புகுந்து நமக்கு ஞான தரிசனம் தந்து கொண்டிருப் பதை நம்முடைய மனம் உணரவில்லையே.

சரி, நாம் அவனைப் பார்ப்பது இருக்கட்டும். அவன் நம் எல்லோரையும் ஒரு நொடிக்குள் பார்த்து விடுவானே. அப்படிப் பார்த்து தனக்குரிய சேதனன் யார்? (சர்வம் இதி ச மகாத்மா ஸுதுர் லப:) தனக்காகவே யாராவது ஒரு பக்தன் இருக்கிறானா என்பதைக் கண்டுபிடிப்பதற்கு தானே அவன் திருவேங்கட மலையில் நின்று கொண்டு தினம் ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு தரிசனம் தந்து கொண்டிருக்கிறான்.

ஒரு பக்தனும் பகவானும் எப்படி இருக்க வேண்டும் என்று நம்மாழ்வார் திருக்காட்கரை பாசுரத்தில் காட்டிக் கொடுக்கிறார்.

*"வாரிக் கொண்டு உன்னை விழுங்குவன் காணில் என்று*
*ஆர்வுற்ற என்னை ஒழிய என்னில் முன்னம்*
*பாரித்துத்தான் என்னை முற்றப் பருகினான்*
*கார் ஒக்கும் காட் கரை அப்பன் கடியனே".*

ஒருவரை ஒருவர் உண்டு விட வேண்டும் என்ற ஆர்வத்தோடு இருந்தார்களாம். பெருமாள் ஸ்வாதந்த்ரியன் அல்லவா! பர தந்த்ரனான என்னை தன் குணங்களையும் செயல்களையும் காட்டி நீராக்கி குறை சிறிதும் இல்லாதபடி பருகினான் என்கிறார் (திடமாக உண்பதை விட நீராகக் கரைத்துப் பருகுவது எளிதல்லவா).

அந்த உணர்வு இருந்து விட்டால் அவன் நம்முடைய உள்ளத்தில் இருப்பதை உணர வைத்து விடுவான்.

பொய்கை ஆழ்வார் "உள்ளத்தில் உள்ளான்" என்ற பதத்தால் அவன் நான் அறியாமலேயே இருந்து கொண்டு இருக்கிறான் என்பதை புரிய வைக்கிறார். நாம் அவனைக் காணும் ஆவலோடு ஒரு கணம் பார்த்தாலும் நம் உள்ளத்தை ஆக்கிரமித்து, உணர்வோடு கலந்து, தான் இருப்பதை உணர வைத்து விடுவான்.

திருவேங்கடவனைக் காணும் போது அந்த உணர்வு வேண்டும். ஒவ்வொரு பக்தர் களுக்கும் இந்த உணர்வு இருக்க வேண்டும். ஆனால் நாம் வெளியிலே எங்கோ அவனைத் தேடுகிறோமே தவிர, மறந்து போய் கூட நம்முடைய உள்ளத்திலே தேடுவதில்லை.

எல்லா திவ்ய தேசங்களிலும் எம்பெருமான் எழுந்தருளுவதன் நோக்கமே ஒரு சேதனன் உட்புக வேண்டும் என்பதால் தான்.

அதனால் தான் திருமங்கை ஆழ்வாரும்,

*"வந்தாய் என் மனம் புகுந்தாய் மன்னி நின்றாய்*
*நந்தாத கொழுஞ் சுடரே எங்கள் நம்பீ!*
*சிந்தாமணியே திருவேங்கடம் மேய எந்தாய்!*
*இனி யான் உனை என்றும் விடேனே".*

என்று தனது திருவேங்கடப் பதிகத்தில் பாடுகின்றார். வடநாட்டிலிருந்து ஒருவர் ரயில் ஏறி சென்னைக்கு வந்து கொண்டிருந்தார். அவர் அமர்ந்திருந்த பெட்டியிலே வேறு யாரும் இல்லை. அவருக்கு எதிரில் ஒருவன் அமர்ந்திருந்தான்.

அவன் எப்படியாவது எதிர் சீட்டிலே அமர்ந்திருந்த அவருடைய பணத்தை, ரயில் பயணம் முடிவதற்குள் எடுத்து விட வேண்டும் என்ற எண்ணத்தோடு அமர்ந்து இருந்தான். அன்று இரவு எதிரிலே உட்கார்ந்து இருந்தவர் தூங்கி விட்டார் என்பதை நிச்சயித்துக் கொண்டு, மெல்ல அவருடைய பைகளில் துளாவினான். ஆனால் எந்தப் பணமும் கிடைக்கவில்லை.

இவர் பணம் ஏதும் எடுத்து வரவில்லை போலிருக்கிறது என்று நினைத்து அமர்ந்து இருந்த பொழுது, அடுத்த நாள் அவர் பல்வேறு

பொருட்களை வாங்குவதைக் கண்டான். நேற்று இவருடைய கையிலே இல்லாத பணம் இன்று எப்படி வந்தது என்பதை யோசித்துக் கொண்டிருந்த அவன், “சரி பரவாயில்லை நாம் சரியாக இவருடைய பையைப் பார்க்க வில்லை போலிருக்கிறது என்று நினைத்துக் கொண்டு இன்று எடுத்துவிடலாம் என முடிவெடுத்தான். இரவு வெகு நேரம் விழித்திருந்து அவருடைய பையை சோதனை செய்தான். எதுவும் கிடைக்கவில்லை. வெறுத்து விட்டான்.

அதற்குள் இறங்க வேண்டிய இடம் வந்து விட்டது. அவரிடத்தில் கேட்டான். “ஐயா உங்களுடைய பணத்தை நான் கவர்ந்து விடலாம் என்று நினைத்தேன். ஆனால் நான் தேடிப் பார்க்கும்போது பையில் இல்லை. நீங்கள் எங்கே பணம் வைக்கிறீர்கள்?”

அப்பொழுது அவர் சிரித்துக் கொண்டே சொன்னார். “நீ அதற்காகத்தான் வந்திருக்கிறாய் என்று தெரிந்தது. அதனால் நான் என்ன செய்தேன் தெரியுமா? நீ தேடாத இடமாகப் பார்த்து அந்தப் பணத்தை பத்திரமாக வைத்தேன்.” “நான் தேடாத இடமா?” அது எந்த இடம்?

அப்பொழுது சொன்னார்.

“நீ எல்லா இடத்திலும் தேடினாய். ஆனால் உன் பையில் தேடினாயா? நீ உன் பையை மட்டும் தேட மாட்டாய் என்பது எனக்குத் தெரியும். அதனால் உன்னுடைய பையிலே வைத்தேன்”



இதே தான் வாழ்விலும் நடக்கிறது. எல்லா இடங்களிலும் தான் இருப்பதை காட்டிக் கொடுக்கக் கூடிய இறைவன், நாம் அறியாதவாறு நமக்குள்ளேயே வந்து நுழைந்து கொள்கின்றான். பல இடங்களில் தேடும் நாம் நம் உள்ளத்தில் உறைகின்றான் என்று உணர்ந்து தேடுவது இல்லை. அப்படித் தேட வேண்டும், தேடினால் காணலாம் என்பதைத்தான் ஆழ்வார் சொல்லுகின்றார்.

பாசுரம் அறிவோம்...

# வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்



*மஹாடவீமத்$_4$யக$_3$தஸ்ஸ ராத்ரௌ ராமாநுஜோ௨சிந்தய*
*த$_3$ார்த்தசேதா: |*
*தே$_3$வ்யா மஹத்யா ஸஹ ப$_4$ாஸமாநம் தீ$_3$நாவநம் தம்*
*வரத$_3$ம் சரண்யம் ||*

(25)



**ராத்ரியிலே நடுக்காட்டில் அகப்பட்ட இராமாநுஜரும், மிகவருந்திய நெஞ்சினராய், பெருந்தேவியோடு விளங்கும் தீனரக்ஷகனான பேரருளாளனை சரணமடைந்தார்.**

**– “ஸுதர்சனம்” ஆசிரியர் இயற்றியது**



# கல்வி வரமருளும் ஸ்ரீஹயக்ரீவ பெருமான்

**ஸ்ரீஹயக்ரீவர் குதிரை முகமும், மனித உடலும்/ ஆயிரங்கோடி சூரியர் களையும் மிஞ்சும் ஒளியும், சூரிய சந்திரர்களை இரு கண்களாகவும், கங்கை சரஸ்வதியை அந்த கண்களின் இமைகளாகவும் கொண்டு சங்கு சக்கர தாரியாக காட்சி அளிப்பார். எப்போதும் பளீர் வெள்ளை நிறத்தில் இருப்பார். சங்கு, சக்கரம், புத்தகம், மணிமாலை, சின் முத்திரை தரித்து லக்ஷ்மிதேவியோடு கூடியவராகத் திகழ்வார்.**

**நெய்வாசல் நெடுஞ்செழியன்,
சிதம்பரம்.
94422 05862**

கல்விக்கு எப்போதும் ஒரு தனிச்சிறப்புண்டு. ஒருவன் தன் வாழ்நாட்களில் சேர்க்கும் செல்வங்கள் எப்பொழுதும் அவனுடன் இருக்காது. வரும் போகும் என்ற நிலையிலேயே இருக்கும். ஆனால் கல்விச் செல்வம் மட்டும் அவன் ஆயுள் இறுதி வரை அவனுடனேயே வந்துக்கொண்டிருக்கும். அந்தக் கல்விக்கு அதிபதியாக சரஸ்வதி தேவியை வணங்குகின்றோம். ஆனால் அந்த சரஸ்வதிக்கே ஒரு குரு உண்டு. அவரே ஞானகுருவான ஸ்ரீஹயக்ரீவர். பரிமுகன் என்ற பெயராலும் இவர் அழைக்கப் படுகிறார். பரி என்றால் குதிரை என்று பொருள். குதிரையின் முகத்தைக் கொண்டதால் இப்பெயர் ஏற்பட்டது.

## ஸ்ரீஹயக்ரீவர் அவதாரம்

பகவான் விஷ்ணு பிரளய காலத்தில் உலகையும், மக்களை யும் தன்னுள்ளே தாங்கி, ஆலிலை பாலகனாய் சமுத்திரத்தில் யோகநித்திரை செய்து வந்தார். பின் உலகை படைப்பதற்காக நாபிக்கமலத்தில் இருந்து பிரம்மனை படைத்து, நான்கு வேதங் களையும் உபதேசித்தார். பிரம்மனும் படைப்புத் தொழிலை ஆரம்பித்தார்.


ஒரு முறை பெருமானின் நாபிக்கமலத்தில் உள்ள ஒரு இதழில் இரண்டு தண்ணீர் திவலைகள் தோன்றி மது, கைடபன் என்ற இரு அரக்கர்களாய் உருவாகினர். இவர்கள் பெருமாளிடமிருந்து பிறந்த தைரியத்தில் பிரம்மனிடமிருந்து வேதங்களை அபகரித்து தாங்களே படைப்புத் தொழிலை மேற்கொள்ள ஆசைப்பட்டனர். அதற்காக குதிரை வடிவமெடுத்து வந்து பிரம்மனிடம் இருந்து வேதத்தைப் பறித்துச் சென்று பாதாளத்தில் ஒளித்து வைத்தனர். வேதங்கள் இல்லாததால் சிருஷ்டி நின்றுபோய் அனைத்தும் ஸ்தம்பித்தது.

இதனால் உலகை இருள் சூழ்ந்தது. செய்வதறியாது திகைத்த பிரம்மா மஹாவிஷ்ணுவிடம் சென்று முறையிட்டார். உடனே விஷ்ணு தானும் குதிரை முகமெடுத்துச் சென்று அவர்களுடன் போரிட்டு வேதங்களை மீட்டு பிரம்மனிடம் கொடுத்தார். அசுரர்கள் கைபட்டதால் தங்களது பெருமை குன்றியதாக நினைத்த வேதங்கள் தங்களை புனிதமாக்கும்படி பெருமாளை வேண்டின. குதிரைமுகத்துடன் இருந்த பெருமாள் வேதங்களை உச்சிமுகர, அவரின் மூச்சுக்காற்றுப்பட்டு வேதங்கள் புனிதமடைந்தன. மது, கைடபர் என்ற இரு அரக்கர்களிடமிருந்து வேதங்களை மீட்டு எடுக்க, திருமால் எடுத்த இந்த திவ்ய சொரூபத்தை அவரின் பதினான்காவது அவதாரமாகக் கூறும் புராணங்கள் ஆடிமாதம் பௌர்ணமி அன்று அவரது அவதாரம் நிகழ்ந்ததாக கூறுகின்றன.

## ஸ்ரீஹயக்ரீவரின் தோற்றம்

ஸ்ரீஹயக்ரீவரை குறிப்பிடும் பரிமுகன் என்ற பெயருக்கு பரிவு காட்டுபவர் என்ற மற்றொரு விளக்கமும் உண்டு. பரிந்த முகம்,

பரியும் முகம், பரியப்போகும் முகம் என்னும் மூன்று காலத்திற்கும் பரிவைத் தரும் முகமாக அது திகழ் கிறது.




### ஸ்ரீஹயக்ரீவரின் சிறப்புகள்

சரஸ்வதிக்கே குருவான ஸ்ரீஹயக்ரீவரை ஆராதிப்பவர்கள் அனைவரும் உயர்ந்த ஞானமும், நீடித்த செல்வமும், பெரும்புகழும் பெற்று இன்பு று வார்கள் என்பது ஐதீகம். குதிரைபோல கணைத்து இவர் அசுரர்களை விரட்டியதால் திபத் நாட்டு வியாபாரிகள் ஸ்ரீஹயக்ரீவரை தங்கள் காவல் தெய்வ மாக வழிபட்டதாக புத்தமத குறிப்புகளில் இடம் பெற்றுள்ளது.

### புராணங்களில் ஸ்ரீஹயக்ரீவர்

பெருமான் பிரம்மனைப் படைத்து அவருக்கு வேதங்களை உபதேசித்தவர் ஸ்ரீஹயக்ரீவர் என்று புராணங்களில் இடம்பெற்றுள்ளது. உபநிஷத்தில் ஸ்ரீஹயக்ரீவர் பற்றி அதிகம் சொல்லப்பட்டுள்ளது. மகாபாரதம், தேவி பாகவதம், பிரம்மாண்டபுராணம், ஸ்ரீஹயக்ரீவ கல்பம் போன்ற இதிகாச புராண நூல்கள் ஸ்ரீஹயக்ரீவரின் பெருமைகளைப் பேசுகின்றன. அனுமன் சஞ்சீவி மலையைத் தூக்கிக் கொண்டு வந்தபோது ஸ்ரீஹயக்ரீவரை வணங்கினார் என்று இராமாயணத்தில் கூறப்பட்டுள்ளது.




வைணவ ஆசார்யர்களில் ஒருவரும், சுமார் 750 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவருமான வேதாந்த தேசிகர் ஸ்ரீஹயக்ரீவர் அருளால் சகல கலைகளிலும் சிறந்து விளங்கினார். ஸ்ரீஹயக்ரீவ பெருமானின் மந்திரத்தை சுவாமி தேசிகருக்கு ஸ்ரீகருடாழ்வாரே அவர் முன் தோன்றி உபதேசித்ததாக புராணம் கூறுகின்றது. ஸ்ரீமகாதேசிகனுக்கு அவர் பிரத்யட்ச மாகக் காட்சி தந்தது போலவே, ஸ்ரீவாதிராஜருக்கும் காட்சி தந்துள்ளார்.

ஸ்ரீவாதிராஜர் கி.பி. 1840ல் வாழ்ந்த மகான். ஸ்ரீஹயக்ரீவருக்கு மிகவும் உகந்த பிரசாதமாகிய வேகவைத்த கடலைபருப்பு, துருவிய தேங்காய், வெல்லம் சேர்த்து நெய்விட்டு கிளறிய ஹயக்ரீவ பண்டி என்ற பெயர்கொண்ட பதார்த்தத்தை தினந் தோறும் ஒரு தட்டில்வைத்து தலைமீது வைத்துக் கொண்டு நின்றுக்கொண்டிருப்பார். ஸ்ரீஹயக்ரீவ பெருமான் ஒரு வெள்ளை குதிரைவடிவில் இவருக்கு பின்னால் வந்து நின்று தனது இரு முன்னங் கால்களையும் தூக்கி இவரது தோள்மீது வைத்து அதை புசிப்பது வழக்கமாம். இந்த பிரசாதத்தை ஒவ்வொரு திருவோணத்தன்றும் செய்து சுவாமிக்கு நிவேதனம் செய்யும் வழக்கம் ஸ்ரீஹயக்ரீவ க்ஷேத்திரங்களில் இன்றும் நடைமுறையில் உள்ளது. சுவாமி தேசிகனுக்கும் வாதிராஜருக்கும் அருள்

பாலித்தது போல காஞ்சிபுரத்தில் தவமிருந்த அகத்தியரை பாராட்ட ஸ்ரீஹயக்ரீவ பெருமான் அவர் முன் தோன்றியதாக பிரம்மாண்ட புராணத்தில் இடம் பெற்றுள்ளது. இவர்கள் அனைவரும் ஸ்ரீஹயக்ரீவரை ஆராதித்து நீடித்த புகழ் பெற்றவர்கள்.

### லலிதா சகஸ்ரநாமம்

லலிதாதேவியின் திருஅவதாரத்தையும் திருநாமங்களையும் கூறும் இந்த மகோன்னத ஸ்தோத்திரத்தை உபதேசித்தவர் ஸ்ரீஹயக்ரீவ பெருமான். அவர் இதை ரகசியங்களில் மிகவும் ரகசியமானது என்று குறிப்பிட்டுள்ளார். பதினெட்டு புராணங்களில் ஒன்றான பிரம்மாண்ட புராணத்தில் லலிதோபாக்யானம் என்ற பகுதியில் இந்த ஸ்தோத்திரம் இடம்பெற்றுள்ளது. இதை ஸ்ரீஹயக்ரீவர் கூற அகத்தியரும் அவரது மனைவி லோபா முத்திரையும் கேட்டு அதை வழிபாட்டு நெறியாக வகுத்தனர். அபாரமான கவித்துவமும் சொல்லழகும், ஓசை நயத்துடன் அனைத்து தெய்வ சக்திகளையும் அடக்கி உள்ள லலிதா சகஸ்ர நாமத்தை கூறுவோருக்கு வாழ்வில் சகல சந்தோஷங் களும் வந்து சேரும்.

### ஸ்ரீலக்ஷ்மிஹயக்ரீவர்

மது கைடபர்களுடன் போரிட்டு வேதங்களை மீட்டபின்னரும் ஸ்வாமிக்கு உக்கிரம் குறைய வில்லை. அதை தணிவிக்க பல முயற்சிகள் செய்தும் தோல்வி அடையவே, இறுதியாக ஸ்ரீலக்ஷ்மிதேவியை அவர் மடியில் அமர்த்தினார்கள்.

இதனால் அவர் ஸ்ரீலக்ஷ்மிஹயக்ரீவர் என்றழைக்கப்பட்டார். வேதங்களை மீட்டவர் என்பதால் கல்வி தெய்வமாகிறார். ஸ்ரீலக்ஷ்மிபிராட்டி இடது தொடையில் அமர்ந்து இருப்பதால் கல்வியுடன் செல்வமும் சேர்ந்த வடிவத்தில் அருள்பாலிக்கிறார். இதிலிருந்து நமக்கு உணர்த்தப்படும் செய்தி கல்விகற்போருக்கு அனைத்து செல்வங்களும் கிடைத்துவிடும் என்பது தான்.

### ஸ்ரீஹயக்ரீவர் கோயில்கள்

ஸ்ரீஹயக்ரீவருக்கு இந்தியாவில் பல இடங்களில் ஆலயங்கள் அமைந்துள்ளன. தமிழ்நாட்டில் சென்னை நங்கைநல்லூரில் ஒரு ஆலயம் உள்ளது. இவ்வாலயத்தில் அவருக்கு வியாழக்கிழமைகளில் ஏலக்காய் மாலை சாற்றுவது வழக்கம். சுவாமி தேசிகருக்கு எந்தக் கோலத்தில் காட்சி அளித்தாரோ அதே கோலத்தில் 108 திவ்ய தேசங்களில் ஒன்றான திருவஹிந்தீரபுரத்தில் காட்சி அளிக்கிறார்.

### ஸ்ரீஹயக்ரீவ உபாஸனை

கல்விக் கடவுளான ஸ்ரீஹயக்ரீவரை,

*''ஞானானந்தமயம் தேவம் நிர்மல ஸ்படிகாக்ருதிம் ஆதாரம் ஸர்வ வித்யானாம் ஹயக்ரீவ முபாஸ்மஹே''* என்ற ஸ்ரீஹயக்ரீவ ஸ்தோத்திரத்தைப் பாடி வழிபடவேண்டும். இந்த பாடலுக்கு ஞானமும், ஆனந்த மயமானவரும், தூய்மையான ஸ்படிகம் போன்ற தேகத்தை உடையவரும், சகல கலைகளுக்கு ஆதாரமானவருமான ஸ்ரீஹயக்ரீவரை நான் உபாசிக்கிறேன் என்பது பொருளாகும்.

பக்தர்கள் கேட்பதை உடனே அளிக்கக்கூடியவர் ஸ்ரீஹயக்ரீவ பெருமான். குதிரை முகத்துடன் லக்ஷ்மிதேவியைத் தொடையில் அமர்த்திக் கொண்டு, தூய்மையான ஸ்படிகம்போன்ற உடலுடன், தாமரை மலர்மீது அமர்ந்துள்ள ஸ்ரீஹயக்ரீவரை மனதில் தியானித்துவர எல்லா கஷ்டங்களும் நீங்கி, விரும்பியது போல யாவும் கிடைக்கும். ஸ்ரீஹயக்ரீவர் ஆனந்த மயமான வாழ்வு தருபவர். அவரை ஆராதிப்பவர் அனைவரும் நிறைந்த ஞானமும் நிலையான செல்வமும், பெரும்புகழும் பெற்று இன்புறுவர் என்பது ஐதீகம்.

தாய்தந்தையரின் தலையாய கடமைகளில் ஒன்று தங்களது குழந்தைகளின் கல்விக்கு சரியான வழிகாட்டுவது. எவ்வளவுதான் செலவிட்டு நல்ல பள்ளியில் பயில்வித்தாலும் பயிலும் குழந்தைகளின் ஆர்வமும் ஈடுபாடும் உழைப்பும் எல்லாவற்றிற்கும் மேலாக இறைவன் அருளுமே அக்குழந்தையின் படிப்பை உறுதி செய்கிறது.

ஒரு குழந்தையின் ஜாதகத்தில் லக்னத்திலிருந்து நான்கு மற்றும் ஐந்தாம் வீடுகளே படிப்பு எப்படி இருக்கும் என்பதை நிர்ணயிக்கிறது. இந்த வீடுகள் சரியில்லை எனில் குழந்தையின் படிப்பும் சுமார்தான். கல்வியில் சுமாராக உள்ள குழந்தைகள் அல்லது அவர்களது பெற்றோர் கலைமகளுக்கே குருவாக விளங்கும் ஸ்ரீஹயக்ரீவரை துதித்தால் கல்வி கேள்விகளில் அவர்களது குழந்தைகள் சிறந்து விளங்குவர் என்பதில் ஐயமில்லை.



# வரம் தரும் வரலக்ஷ்மி விரதம்

### ஆன்மீக பூமி

பாரத நாடு பழம் பெரும் நாடு. நம் நாட்டின் பழக்க வழக்கங்களும், பண்பாடும் ஆன்மீகத்துடன் பின்னிப் பிணைந்து உள்ளன. பாரத நாட்டின் எப்பகுதியில் வாழ்ந்தாலும் அங்கு வாழும் மக்கள் தம் வாழ்வியல் நெறிமுறைகளை ஆன்மீகத்துடன் இணைத்தே வாழ்ந்து வருகின்றனர். அவ்வகையில் தான் இன்று உலக அரங்கில் பழமையும் பெருமையும் மிக்க உயர்ந்த பண்பாட்டைக் கொண்டு உள்ள பாரத நாடு ஆன்மீக பூமி என்று அழைக்கப்படும் பெருமையைப் பெற்றுள்ளது. பரந்த இந்த நாட்டில் பல மாநிலப் பிரிவுகள், பல மொழி பேசும் மக்கள், பல சமயப் பிரிவுகள் உள்ளன. எனவே இங்கு இறைவனைப் போற்றி வழிபடும் விழாக்களும் பல வகையே. ஒவ்வொரு விழாவும் மக்களின் வாழ்க்கையுடனும், தெய்வ நம்பிக்கையுடனும் பிணைந்திருப்பது இதன் தனிச்சிறப்பு.

இத்தகைய ஆன்மீக விழாக்கள் பண்பாட்டை செம்மையாக்குவதுடன் மக்களிடையே பக்தியையும் ஒற்றுமையையும் வளர்க்க உதவுகின்றன. மனதைத் தூய்மையாக்கி இறை சிந்தனை வளர்ந்திட உதவுகின்றன. வீடும், நாடும் வளமும் நலமும் பெற உதவுகின்றன. எனவேதான் மக்கள் தங்கள் வாழ்க்கையின் நிகழ்வுகளுடன் ஆன்மீக விழாக்களையும் இணைத்து இறை அனுபவத்தால் இன்ப வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர்.

### விரத வழிபாடு

ஆன்மீக விழாக்களில் விரதமேற்றுக் கொண்டாடுவது மிகச் சிறப்பானது. விரதங்கள் மனதை – எண்ணத்தை – செயலைத் தூய்மையாக்கி இறை அருளை எளிதில் கிடைக்க வழி செய்கின்றன. முனிவர்கள் கூட இறைவனின் அருள் பெற உறுதி யான தவம் இருந்து பலன் பெற்றனர் எனப் புராணங்கள் பேசுகின்றன. விரதம் என்பது இறைவனின் வழிபாட்டில் ஒருவகைத் தூய்மையான செயலின் வெளிப்பாடாகும்.

கீதையில் கண்ணன், **“விருப்பத்தையும், அச்சத்தையும், சினத்தையும் துறந்தோராய், என் மயமாய், என்னுள் அடைக்கலம் புகுந்து, ஞான தவத்தால் தூய்மை பெற்று, என்னியல்பு எய்தினோர் பலர்”** (பகவத் கீதை 4–10) என்று தவத்தின் மேன்மையையும் தூய்மையையும் எடுத்துக் கூறுகிறார்.

### சிவன் மொழி

தவத்தால், விரதத்தால் நாம் விரும்பிய பயனை இறைவன் அளிப்பான் என்று நம்பும் துளசிதாசர் தமது ராமசரிதமானஸில் சிவன் பார்வதியிடம், “அனைத்துப் படைப்பின் அடிப்படை தவமாகும். எனவே பார்வதி நீ தவம் செய்” என்று கூறுகிறார். எனவே விரதம் என்பது இறை சிந்தனையில் மூழ்கிய நிலை என்பதும், அது அரிய பயன்களை கிடைக்கச் செய்யும் என்பதும் மக்களின் நம்பிக்கை. தவத்தின் சிறப்பை உணர்ந்தே வள்ளுவரும்,

*வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்*
*ஈண்டு முயலப் படும்”* என்கிறார். பாரதியாரும்,

*“செய்க தவம்! செய்க தவம்! நெஞ்சே, தவம் செய்தால்*
*எய்த விரும்பியதை எய்தலாம் வையத்தில்!”*

என்று கூறி தவத்தின் தேவையையும் பயனையும் அறிவுறுத்துகிறார்.

**– திரு. இராமநாதன், சேலம்.**



## ஸ்ரீவக்ஷஸ்தல வாஸினி

ஸ்ரீமந் நாராயணனின் மார்பகத்திற்கு தன் மேனியின் ஒளியால் அழகு தருபவள் லக்ஷ்மி. மரகத மேனியில் பொன்னிற பிராட்டி அமர்ந்திருப்பது சோபையை பளிச்சென்று தருமல்லவா? பொன்னும் மணியும் ஒன்றுக்கொன்று பெருமை தருவனவாயினும் மணியின்றி பொன் நகை பூணப்படும். ஆனால் பொன் இன்றி மணி அணிதல் இயலாது. அதுபோல லக்ஷ்மி தேவியின்றி பெருமாளுக்கு சிறப்பில்லை.

"மாரவத்து மாலை நங்கை" என்று நம்மாழ்வாரும் "வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்கை" என்று பெரியாழ்வாரும் குறிப்பிட்டுள்ளனர். "முற்றாராவன முலையாள் பாவை மாயன் மொய்யகலத் துள்ளிருப்பாள்" என்கிறார் திருமங்கை ஆழ்வார்.

இதனை கம்பர்,

*''பாகத்தில் ஒருவன் வைத்தான்*
*பங்கயத்திருந்த பெண்ணை அகத்தில் ஒருவன் வைத்தான்*
*அந்தணன் நாவில் வைத்தான்''.*

என்று சூர்ப்பனகை வாயிலாக வெளிப்படுத்துகிறார்.பரமேஸ்வரன் தன் உடலில் பாதியை அம்பிகைக்கு கொடுத்து அர்த்தநாரீஸ்வரர் ஆனார். மகாவிஷ்ணு தாமரையிலிருந்த மகா லக்ஷ்மியைத் தூக்கி அகல விடாது தன் வக்ஷஸ்தலத்தில் வைத்துக் கொண்டார். அவள் காலைத் தொங்கவிட்டுக் கொண்டு சும்மா இருக்கிறாளா? உற்சாகம் வரும்போது காலை வீசி ஆட்டுகிறாள். அவள் கால்கள் மகாவிஷ்ணு மார்பை உதைக்கின்றன. அந்த உதை விழ விழ மகாவிஷ்ணு புளகாங்கிதமடைகிறார். ஸ்ரீபதந்யாஸ தந்யம் – மகாலக்ஷ்மியின் காலடிபட்டு ஐஸ்வர்யத்தை அடைந்திருக்கிற திருமார்பு என்று ஒரு பக்தர் வர்ணித்திருக்கிறார்.

**– திரு. நஜன், சென்னை.**

### ஆவணி மகிமை

ஸ்ரீகிருஷ்ண பகவான் அவதரித்த சிறப்பு மிக்க ஆவணி மாதத்தில் வளர்பிறை வெள்ளிக்கிழமை நாளில் வரலக்ஷ்மி விரதமிருந்து வழிபட எட்டு வகைச் செல்வங்களும் சேரும் என்பது மக்களின் நம்பிக்கை. மணமான சுமங்கலிப் பெண்கள் தன் குடும்பத்தினரின் நலன் வேண்டியும், குறிப்பாகத் தன் கணவனின் நலன் வேண்டியும் இவ்விழாவைத் தொன்றுதொட்டுக் கொண்டாடி வருகின்றனர்.

### வளம் தரும் விரதம்

வரலக்ஷ்மி விரதம் குறித்து நெடுங்காலமாக வழங்கி வரும் கதை ஒன்று உண்டு. வெகு காலத்திற்கு முன்பு குந்தனா என்ற கிராமத்தில் சாருமதி என்னும் பெண் தன் கணவனுடனும் குடும்பத்தாருடனும் ஒரு குடிசை வீட்டில் வாழ்ந்து வந்தாள். ஏழ்மையான குடும்பத்தில் வாழ்ந்து வந்தாலும் அவள் கடவுள் பக்தி மிகுந்தவள். பண்பின் இருப்பிடமான சாருமதி தன் கணவனுக்கும் குடும்பத்தாருக்கும் மிகுந்த விருப்புடனும் பொறுப்புடனும் பணிவிடைகள் செய்து வந்தாள்.

அவளுடைய தூய்மையான அன்பையும் கடவுள் பக்தியையும் கண்டு மஹாலக்ஷ்மி தேவி மிகவும் மனம் மகிழ்ந்தாள். அவளுக்கு அருள் செய்ய விரும்பிய தேவி ஒருநாள் விடியற்காலையில் அவள் கனவில் தோன்றி, "ஆவணி மாத வளர்பிறையன்று விரதமிருந்து என்னை வழிபட்டால் வளம் பெருகும், நலன் கிடைக்கும்" என்று கூறி மறைந்தாள்.

கனவு கண்டு வியந்த சாருமதி விடிந்ததும் குடும்பத்தாரிடமும் தன் கணவனிடமும் விடியற் காலையில் தான் கண்ட கனவு பற்றிக் கூறினாள். அதைக் கேட்டு மகிழ்ந்த அவர்கள், அவள் வரலக்ஷ்மி விரதமிருந்து வழிபாடு செய்யச் சம்மதித்து

அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தனர். சாருமதி தன் வீட்டருகே வசிப்பவர்களிடம் தான் கண்ட கனவு பற்றியும், வரலக்ஷ்மி வழி பாட்டின் சிறப்புப் பற்றியும் கூறினாள். அதைக் கேட்ட அவர்கள் அவளுடன் சேர்ந்து வரலக்ஷ்மி விரதம் இருந்து வழிபாடு செய்ய முடிவெடுத்தனர். ஆவணி வளர்பிறை வெள்ளிக்கிழமையன்று ஊரில் உள்ள அனைத்து சுமங்கலிப்பெண்களும் ஒன்றாகக் கூடி வரலக்ஷ்மி தேவியின் உருவத்தை அலங்கரித்து,



*பத்மாசனே பத்மகரே சர்வலோகைக பூஜிதே*
*நாராயண பிரியதேவி சுப்ரீதா பவ சர்வதா*

என்று கூறி மனம் ஒன்றி வழிபாடு செய்தனர். இதனால் குடிசை வீடு அழகிய மாளிகையானது. அதில் எட்டு வகைச் செல்வங்களும் நிரம்பின. சாருமதி வரலக்ஷ்மி விரதமிருந்து தேவியை வழிபட்டு வரங்கள் பெற்ற செய்தி பல திசைகளிலும் பரவியது. அது முதற்கொண்டு நாடெங்கும் இவ்விழா சுமங்கலிப் பெண்களால் ஆண்டு தோறும் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

## திருமகள் துதியும் நூல்களும்

வேள்வி, குடமுழுக்கு போன்ற சிறப்புமிக்க பெரிய வழிபாடுகளில் திருமகள் துதி எனப்படும் ஸ்ரீசூக்தம் மற்ற மந்திரங்களுடன் சேர்த்து ஓதப்படுகிறது. மேலும் ஒரு முறை ஆதிசங்கரர் தனக்கு அன்புடன் நெல்லிக்கனி தந்த பெண்ணுக்கு அவள் வறுமை நீங்கத் திருமகளை வேண்டி கனகதாரா ஸ்தோத்திரம் பாடினார். அவர் பாடியதும் திருமகள் அவள் வீட்டில் பொன் நெல்லிக்கனிகளை மழையாகப் பொழிவித்தாள்.

ஸ்ரீமத் ராமாநுஜரின் சீடரான கூரத்தாழ்வாரின் மகன் பராசர பட்டர் திருவரங்க நாயகியான திருமகளைத் துதித்து ஸ்ரீகுணரத்ன கோசம் என்ற நூலைப் பாடினார். வைணவ ஆசார்யரான ஸ்ரீநிகமாந்த தேசிகர் காஞ்சியில் வாழ்ந்தபோது தன்னிடம் திருமணத்திற்கு பொருள் கேட்டு வந்த பிரம்மசாரிக்கு அருள் செய்யும் வகையில் திருமகளைத் துதித்து ஸ்ரீஸ்துதி என்ற நூலைப் பாடினார். அதைக்கேட்டதும் ஸ்ரீதேவி அவர் முற்றத்தில் பொன்மழை பொழிந்தாள்.

கணவன் மற்றும் குடும்பத்தாரின் நலம் வேண்டி சுமங்கலிப்பெண்கள் செய்யும் வரலக்ஷ்மி விரத வழிபாடு இந்தியப் பண்பாட்டின் தனிச்சிறப்பு மிக்க அடையாளம் என்பது மிகையல்ல.



*பொன்னரசி! நாரணனார் தேவி!*
*புகழரசி!*
*மின்னுநவ ரத்தினம் போல் மேனி*
*யழகுடையாள்*
*அன்னையவள் வையமெலாம்*
*ஆதரிப்பாள், ஸ்ரீதேவி*
*தன்னிரு பொற்றாளே சரண்புகுந்து*
*வாழ்வோமே,*

–மகாகவி பாரதியார்.






# வேத ஜோதிடத்தில் 12 வீடுகள்

சென்ற இதழின் தொடர்ச்சி...

– முனைவர் ஆ.முத்து கிருஷ்ண ஆச்சாரி,
திருவல்லிக்கேணி, 9444392595

## வேத ஜோதிடத்தில் வீடுகள்

ஜோதிடத்தில், 12 ராசிகளைப் போலவே 12 வீடுகளும் ஒருவரின் வாழ்க்கைக்கு அடித்தளத்தை உரு வாக்குகின்றன என்று கடந்த இதழில் அறிந்தோம்.

இருப்பினும் அவை இராசி சக்க ரத்தைப் போலவே இல்லை. இந்த வீடுகள் அனைத்தும் வெவ்வேறு அடை யாளத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொன்றும் உங்கள் வாழ்க்கையின் ஒரு குறிப்பிட்ட கூறுகளைக் குறிக் கின்றது.

## 1வது வீடு

முதல் வீடு, “லக்னா” அல்லது “அசென்டண்ட்” என்று அழைக்கப் படுகிறது. இது உங்களைப் பிரதிநிதித் துவப்படுத்தும் வீடு மற்றும் நீங்கள் பார்க்கும் விதம் அடிப்படையில், உடல் தோற்றம், குணம், இயல்பு, உடல் அமைப்பு, குழந்தைப் பருவம், ஆரோக் கியம், ஈகோ மற்றும் சுய உணர்வு ஆகியவற்றை உள்ளடக்கிய உங்கள் உடல் ஆளுமை.

இது உங்கள் வாழ்க்கைத் தேர்வு களை பாதிக்கிறது. உங்கள் பலம், பலவீனங்களை அறியும் உணர்வு, உங்கள் விருப்பு, வெறுப்புகள் மூலம் மற்றவர்கள் உணர வேண்டும் என்று நீங்கள் விரும்பும் விதத்துடன், 1 வது வீட்டில் சித்தரிக்கப்பட்ட முக்கிய பகுதிகள் தலை மற்றும் முகம். இதில் நிறம், நெற்றி, முடி, மூளை போன்றவை அடங்கும். வேத ஜாதகத்தின்படி உங்கள் 1ஆம் வீடு பலவீனமாக இருந்தால், தலைவலி, முகப்பரு, தழும்புகள் போன்ற பிரச்சனை களை சந்திக்க நேரிடும். இந்த வீடு மேஷ சக்தியுடன் ஒத்துப் போகிறது.

## 2வது வீடு

வேத ஜோதிட சாஸ்திரத்தில் 2வது வீடு சொத்துக்களின் வீடு என்று குறிப்பிடப்படுகிறது. இது வருமானத்தைக் குறிக்கிறது. இதில் நிதி, உங்களுக்குச் சொந்தமான உடைமைகள், கார், தளவாடங்கள், முதலீடுகள் போன்றவை அடங்கும். உங்களின் பொருள் அல்லாத பொருட்கள் உட்பட உங்கள் உடைமைகள் முழுமையாகப் பயன்படுத்துவதும் 2வது வீட்டின் ஆட்சியின் கீழ் வரும் இந்த வீடு டாரஸுடன் பொருந்துகிறது. நாக்கு, பற்கள், கண்கள், வாய், மூக்கு மற்றும் பல உடல் உறுப்புகளை 2ஆம் வீடு எவ்வாறு ஆட்சி செய்கிறது என்பதை ஒரு நிபுணரான வேத ஜோதிடர் உங்களுக்குக் கூறுவார். மேலும் இரண்டாவது வீடு பொருள் வைத்திருப்பதை மட்டும் கட்டுப்படுத்தாது.

இது ஒருவரின் குரல் போன்ற அருவமான விஷயங்களையும் கொண்டுள்ளது. உதாரணமாக ஒரு நபரின் குண்டலியின் இரண்டா வது வீட்டில் வீனஸ் போன்ற ஒரு பெண் கிரகம் அமர்ந்தால், அவரது குரல் மிகவும் கவர்ச்சியாகவும், இனிமையாகவும் இருக்கும்.

## 3வது வீடு

மூன்றாவது வீடு ஜெமினியுடன் தொடர்பு உடையது. இது ஒரு நபரின் மன விருப்பத்தையும், மனப்பாடம் செய்யும் திறனையும் கட்டுப்படுத்துகிறது. இந்த வீடு பயணங்கள், சகோதரர்கள், சகோதரிகள், அண்டை வீட்டார், ஆர்வங்கள், பழக்க வழக்கங்கள், மன நுண்ணறிவு மற்றும் தொடர்பு ஆகியவற்றுடன் தொடர்புடையது. வேத ஜோதிடத்தின் 3வது வீடு, ஊடகம், தொலைக்காட்சி, தொலைபேசி, வானொலி, எழுத்து, எடிட்டிங் போன்ற பல்வேறு தொடர்பு முறைகளில் ஆட்சி செய்கிறது. தகவல் தொடர்பு போன்ற அனைத்து வகையான தொழில்களும் இந்த ஆதிக்கத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

உடல் பாகங்கள் மூன்றாம் வீட்டின் வீதிகளில் கால்கள், கைகள், தோள்கள், கால் எலும்புகள், நுரையீரல் மற்றும் நரம்பு மண்டலம் ஆகியவை அடங்கும். நரம்பு மண்டலத்தில் உள்ள ஏற்றத் தாழ்வுகள், சுவாசக் குழாயின் பிரச்சனைகள், தோள் பட்டை வலி, கால் எலும்பில் முறிவு மற்றும் காது கேளாமை. இது போன்ற பிரச்சனைகள் முக்கியமாக உங்கள் பிறப்பு அட்டவணையில் பலவீனமான மூன்றாவது வீட்டில் இருந்து எழுகின்றன.

## 4வது வீடு

வேத ஜோதிடத்தில் நான்காவது வீடு கடகத்துடன் தொடர்புடையது. இது உங்கள் வீடுகள் மற்றும் உங்கள் வேர்கள், நிலம், கட்டுமான விஷயங்கள், வாகனங்கள் மற்றும் உங்கள் தாயுடனான உங்கள் உறவை ஆளுகிறது. இந்த வீடு வேத ஜோதிடத்தில் பந்து பாவம் என்றும் அழைக்கப்படுகிறது. ஏனெனில் இது ஒரு நபரின் குடும்ப மகிழ்ச்சியுடன் தொடர்பு உடையது.

நான்காவது வீட்டால் நிர்வகிக்கப்படும் உடல் உறுப்புகள் வயிறு, மார்பகங்கள் மற்றும் செரிமான உறுப்புகள். உங்கள் ஜாதகத்தில் நான்காம் வீடு வலுவிழந்தால் கரோனரி பிரச்சனைகள், நுரையீரல் கோளாறுகள் மற்றும் மார்பகம், மார்பு போன்றவற்றில் உபாதைகள் ஏற்படலாம்.

## 5வது வீடு

வேத ஜாதகத்தில் ஐந்தாவது வீடு புத்ரா பாவம் என்றும் அழைக்கப்படுகிறது. இது படைப்பாற்றல், விளையாட்டுத்தனம், மகிழ்ச்சி, இன்பம் மற்றும் காதல் ஆகியவற்றின் வீடாகும். இது உங்கள் மன நுண்ணறிவு, உருவாக்கம் மற்றும் புதுமைப்படுத்துவதற்கான உங்கள் திறனைக் குறிக்கிறது. 5வது வீடு சிம்மத்தின் ஆற்றலுக்கு ஒத்திருக்கிறது. இராசி சுழற்சியில் ஐந்தாவது அடையாளம், நல்ல அதிர்ஷ்டம், கற்றல் மற்றும் நம்பிக்கையுடன் தொடர்பு உடையது.

5வது வீடு ஆளும் உடல் பாகங்களில் இதயம், மேல் மற்றும் நடுத்தர முதுகு, வயிறு, கணையம் மற்றும் முதுகெலும்பு ஆகியவை அடங்கும். உங்கள் ஜாதகத்தில் ஐந்தாம் வீடு வலுவிழந்தால் இதயக் கோளாறுகள், முதுகுத்தண்டு கோளாறுகள், அமிலத்தன்மை, வயிற்றுப்போக்கு, பித்தப்பையில் கல் போன்றவை ஏற்படக்கூடும். கூடுதலாக, வீடு மிதுனம் அல்லது கும்பம் போன்ற ஒரு காற்று ராசியால் ஒடுக்கப் பட்டால், அது மனநோய் அல்லது பகுத்தறிவு இன்மைக்கு வழிவகுக்கும்.

*தொடர்ந்து அலசுவோம்...*




### ஸ்நாநம் செய்யுமுன்

*கங்கே கங்கேதி யோ ப்ரூயாத்*
*யோஜநாநாம் சதைரபி ।*
*முச்யதே ஸர்வபாபேப்யோ*
*விஷ்ணுலோகம் ஸ கச்சதி ॥*

**கங்கை, கங்கை என்று நூறு யோஜனைகளுக்கப்பாலிருந்தும் எவன் சொல்லுகிறானோ, அவன் எல்லா பாவங்களிலிருந்தும் விடுபடுகிறான்; விஷ்ணுவின் உலகினை அடைகிறான்.**



# நாக சதுர்த்தியும் கருட பஞ்சமியும்

-முனைவர் பா. காயத்ரி,
அம்பத்தூர்.9744657115

நமது பாரத தேசம் பகவானை மட்டுமின்றி, அவனுக்கு வாகனமாகவும், அணிகலன்களாக வும் விளங்கும் ஜீவ ராசிகளையும் விசேஷமாக பூஜிக்கும் ஒரு சிறப்பான வழிபாட்டு முறையைக் கொண்டு உள்ளது. அங்ஙனம் ஸ்ரீமந்நாராயண னுக்கு வாகனமாக விளங்கும் பெரிய திருவடி என்று அழைக்கப்படும் “கருடாழ்வாரும்”, மஹா விஷ்ணுவின் படுக்கையாகவும், சிவனின் அணி கலனாகவும் விளங்கும் “நாகங்கள்” நமது சநாதன தர்ம வழிபாட்டு முறையில் சிறப்பான இடத்தைப் பெற்றவர்களாவார்கள். அவர்களைக் கொண்டாடும் விதமாக அமைந்திருப்பதே “நாக சதுர்த்தி” மற்றும் “கருட பஞ்சமி” என்றழைக்கப் படும் இரு தினங்கள்.

### நாக சதுர்த்தி

நாக சதுர்த்தி ஸ்ரவண மாதம், சுக்ல பக்ஷ சதுர்த்தி (நான்காம்) தினத்தில் கொண்டாடப் படுகிறது. (சில மாநிலங்களில் இது கார்த்திகை மாதம், சுக்ல பக்ஷ சதுர்த்தி அன்று கொண்டாடப் படுகிறது).

### நாக சதுர்த்தி அனுஷ்டான பலன்கள்

இத்தினத்தில் பெண்கள் தனது கணவன் மற்றும் குழந்தைகளின் நீண்ட ஆயுளுக்காக விரதத்தை கடை பிடிப்பர். இந்நாளில் நாக தேவதையை வழிபட்டால் ராகு மற்றும் கேதுவின் தோஷங்கள், சர்ப கோபம் முதலியவை நீங்கும் என்று நம்பப்படுகிறது.

மேலும் பித்ரு தோஷம் விலகவும், குழந்தை பாக்கியம் பெறவும், கல்யாணமாகவும், நோய் நொடி விலகவும், சர்பங்களால் தனக்கும் தனது குடும்பத்தின ருக்கும் எந்தவித தீங்கும் வராமலிருக்கவும், குடும்பத் தின் ஆரோக்கியம் மற்றும் ஐச்வர்யம் நீடித்து விளங்க வும், நாக தேவதையின் கருணை கடாக்ஷம் கிடைக்க வும், இத்தினத்தில் விசேஷமாக நாக தேவதையை பக்தர்கள் வழிபடுவர்.

### நாக சதுர்த்தி - புராணக்கதை

புராணத்தின்படி, தேவர்களும், அசுரர்களும் பாற்கடலை கடைந்தபோது அதிலிருந்து ஹாலகாலம் என்னும் கொடிய விஷம் தோன்ற, அது உலகத்தையே அழிக்க முற்பட்டபோது பரமசிவன் அதனைக் குடித்தாராம். அப்போது அவ்விஷத்தின் சில துளிகள் பூமியில் விழ, அதனை நாகங்கள் பருகினவாம். எனவே சர்ப்பங்களின் விஷக்கடி மற்றும் கோபத்திலிருந்து தப்ப, நாகங்களின் அருளை வேண்டி, “நாக சதுர்த்தி” தினம் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

### நாக சதுர்த்தி - விசேஷ கோயில்கள் மற்றும் வழிபாட்டு முறை

நாக சதுர்த்தியன்று சுமங்கலி பெண்கள் விரதம் மேற்கொண்டு நாக தேவதையை வழிபடுவர். அத்தினம் பாம்பு புற்றிற்கு பால் சமர்ப்பிப்பது மிகவும் விசேஷம் ஆகும். மேலும் இத்தினத்தில் சர்ப்பத்தை வழிபடுவது நன்மை பயக்கும் என்று நம்பப்படுகிறது. இந்நாளில் நிலத்தை உழுவதோ, தோண்டுவதோ கூடாது என்று சொல்லப்படுகிறது.

கோயில்களிலுள்ள நாக மூர்த்திக்கு நீர் மற்றும் பசும்பாலால் அபிஷேகம் செய்து, மஞ்சள் பூசி, குங்கும மிட்டு, தூபம், ஆரத்தி முதலியவைக் காட்டி நைவேத்தி யம் படைத்து நாக தேவதைகளை வழிப்படுவது சிறப்பு.

மேலும் பிரசித்தி பெற்ற நாக க்ஷேத்திரத்தினை தரிசனம் செய்வது மிகவும் உத்தமம். சில பிரசித்தி பெற்ற நாக க்ஷேத்திரங்கள் : மன்னார்சாலை நாகராஜ

கோயில் (ஹரிபத்), ஸ்ரீஅனந்தன்காடு கோயில் (திருவனந்தபுரம்), நாகர்கோயில் – நாகராஜ கோயில் மற்றும் வெட்டி கோட்டு நாகராஜ கோயில் (ஆலப்புழா) ஆகும். அன்றைய தினம் திருமலையில் திருமலையப்ப ஸ்வாமி சேஷ வாகனத்தில் எழுந்தருள்வார்.

## கருட பஞ்சமி – புராணக் கதை

புராணத்தின்படி, கஷ்யப முனிவரின் மனைவியரான கத்ரு மற்றும் விநதை தங்களுக்குள் ஒரு பந்தயம் வைக்கின்றனர். அதாவது "உச்சைஸ்ரவஸ்" என்னும் குதிரையின் வாலின் நிறம் யாது?" பந்தயத்தின் விதி யாதெனில் தோற்பவர் ஜெயிப்பவரின் அடிமையாக வாழ வேண்டும். விநதை "வெள்ளை" என்றாள். கத்ரு "கருப்பு" என்றாள். விநதையின் பதில் சரியாக இருந்த போதும், கத்ரு வஞ்சகமாக தன் பிள்ளைகளான சர்ப்பங்களை அக்குதிரையின் வாலில் தொங்கச் சொல்லி தான் ஜெயித்ததாகக் கூறி, விநதையை தனது அடிமையாக்கினாள். நாளடைவில் விநதைக்கு அருணன் மற்றும் கருடன் என்று இரு பிள்ளைகள் பிறந்தனர். கருடன் தனது தாயின் அவல நிலையைக் கண்டு கத்ருவிடம் தன் தாயை விடுவிக்குபடி வேண்டினான். அவளோ கருடனிடம் ஒரு நிபந்தனை வைத்தாள். "இந்திரலோகத்திலிருக்கும் அமிர்தத்தை கொண்டு வந்தால் உன் தாயை விடுவிக்கிறேன்'' என்றாள். தனது வேகத்தினாலும், பலத்தினாலும், புத்தியினாலும் கருடன் அமிர்த்தத்தை கொண்டு வந்து தன் தாயை விடுவித்தான். மேலும் மஹாவிஷ்ணுவின் வாகனமாகும் வரத்தினையும் பெற்றான்.

எனவே, தன் தாயின் மீதுள்ள பக்தி மற்றும் அன்பிற்கு இலக்கணமாகத் திகழும் கருடனைப் போற்றும் விதத்தில் இத்தினம் "கருட பஞ்சமி" என்று கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்நாளில்தான் கருடாழ்வார் பிறந்தார் என்றும் நம்பப்படுகிறது.

## கருட பஞ்சமி அனுஷ்டான பலன்கள்

இத்தினத்தில் தாய்மார்கள் தங்களுடைய குழந்தைகளின் நலன் மற்றும் ஆரோக்கியத்திற்காக விரதம் மேற்கொள்வர். மேலும் சுமங்கலி பெண்கள் நல்ல இல்வாழ்க்கைக்காகவும், மாங்கல்ய பலத்துக்காகவும் இந்நாளில் விரதம் இருப்பர். தங்கள் சகோதரர்களின் நலனுக்காகவும் பெண்கள் விரதம் இருப்பர். இந்நாளில் கருடனை தரிசித்தால் மோட்சம் கிடைக்கும் என்றும், எல்லா வேண்டுதல்களும் நிறைவேறும் என்றும் நம்பப்படுகிறது. பெண்கள் இந்நாளில் கருடனைப் போன்ற வீரம் மற்றும் பக்தி நிறைந்த பிள்ளை வரம் வேண்டி விரதம் இருப்பர்.

### கருட பஞ்சமி

பெரிய திருவடி, பக்ஷிராஜா, வைணதேயா, சுபர்னா, கருத்மான், விஷ்ணுவாஹனா, விநதசுதா, நாகாந்தகா, காஷ்யபேயா எனப் பல பெயர்களால் அழைக்கப்படும் மஹாவிஷ்ணுவின் வாகனமான கருடாழ்வாரை கொண்டாடும் விதமாக ஸ்ரவண மாதம் சுக்ல பக்ஷ பஞ்சமி திதியில் "கருட பஞ்சமி" அனுஷ்டிக்கப்படுகிறது.




கருட பஞ்சமியன்று கருடரை வழிபட்டால் நாக தோஷம், ராகு–கேது தோஷம் நீங்கும் என்றும், பக்தி, அறிவு, பலம், தைரியம் மற்றும் அனைத்து நலன்கள் உண்டாகுமென்றும், நோய்கள் தீருமென்றும் கூறப்படுகிறது.

## கருட பஞ்சமி விசேஷ கோயில்கள் மற்றும் வழிபாட்டு முறை

கருடரை வழிபட்டால் வெற்றி என்பது நிச்சயம். அஷ்ட சித்திகளும் கைகூடும் என்றும் கூறப்படுகிறது. இத்தினத்தில் கருடாழ்வாருக்கு சிறப்பு அபிஷேகம் செய்யப்படும். மேலும், கோயில்களில் பகவான் ஸ்ரீமந்நாராயணன் தன் வாகனமான கருடன் மீது திருவீதி உலா வருவார்.

## கண்ணன் கருத்துரை



*பத்ரம் புஷ்பம் பலம் தோயம் வோ மே பக்த்யா ப்ரவச்சதி ।*
*ததஹம் பக்த்யுபஹ்ருதமச்னாமி ப்ரயதாத்மன: ॥*

(9-26)

**நல்ல மனத்தோடு, பக்தியோடு சின்ன இலையோ, மலரோ, பழமோ, இறுதியில் ஒன்றும் இல்லை என்றால் நீரோ எவன் எனக்கு அளித்தாலும் பக்தியோடு கொடுத்த அதனை நான் தவறாமல் ஏற்றுக் கொள்கிறேன்.**




தொகுப்பு:
பேராசிரியர் அமரர் பொன் சௌரிராஜன்,
திருப்பதி.


அத்தரிசனத்தை கண்டால் வைகுண்ட பிராப்தம் கிடைக்கும் என்று நம்பப் படுகிறது.

இந்தியாவில் கருடாழ்வாருக்கென்று சிறப்பு வாய்ந்த ஒரு கோயில்தான் கேரள மாநிலம் மலப்புரம் மாவட்டத்தில் த்ரிப்ரன்கோடு என்னுமிடத்தில் அமைந்துள்ள “வெல்லமாசேரி கருடன் காவு” கோயில். இந்தியாவிலேயே, கருடன் பறக்கும் உருவத்தில் காட்சியளிக்கும் ஒரே ஒரு கோயிலாகும். மேலும் கர்நாடக மாநிலம், கோலார் மாவட்டம், கோலாதேவி ஊரிலுள்ள கருடன் கோயிலும் பிரசித்தி பெற்ற ஒன்றாகும். திருமலையில் ஏழு மலைகளுள் சேஷாத்ரி மற்றும் கருடாத்ரி என்ற பெயர் கொண்ட இரு மலைகள் உள்ளன. பகவான் திருமலையப்ப ஸ்வாமி நாகாபூஷணங்களுடன் காட்சியளிக்கிறார். மேலும் கருட பஞ்சமி அன்று இரவில், பகவான் கருட வாகனத்தில் திரு வீதி உலா வருவார். இக் கருட சேவையை தரிசித்தால் மோட்சம் நிச்சயம் என்று புராணங்கள் கூறுகின்றன.

நாமும் நாக சதுர்த்தி, கருட பஞ்சமி ஆகிய இவ் விரு திதிகளில் கோயிலுக்குச் சென்று நாக தேவதை மற்றும் கருட ஆழ்வாரை வணங்கி, அனைத்து தோஷங்களும் விலகப்பெற்று, அனைத்து நலன்களையும், வளங்களையும் பெறுவோம்! அவர்களைப் போற்றி வணங்குவோம்!!

### ஸப்தகிரி வினாடி வினா போட்டி எண்.11 ஜுன் 2023 விடைகள்

1. ஸ்ரீபத்மாவதி சிறுவர் இருதய மையம்.
2. திருக்குறள்.
3. வைகாசி மாதம், ஸ்வாதி நட்சத்திரம்.
4. ஸ்ரீஆண்டாள் நாச்சியார்.
5. அலர்மேல் மங்கை, பத்மாஸனி.
6. மகாபலி சக்கரவர்த்தி.
7. நம்மாழ்வார்.
8. உஜ்ஜைனி மங்களநாதர் திருக்கோயில்.
9. வைத்தீஸ்வரன் திருக்கோயில்.
10. விபீஷணன்.
11. ஜுன் 21.
12. சஞ்சயன்.
13. கருடாழ்வான்.
14. திருஅட்டபுயகரம்.
15. ஆனி மாதம்.



### போட்டி எண். 11




**சரியாக பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றி பெற்றவர்கள்**

1. செல்வி ராஜஸ்ரீ பிரபு,
   பழைய சீவரம், காஞ்சிபுரம்.
2. செல்வன் ஜெகதீஸ்வரன்,
   சிங்கபெருமாள் கோவில்,
   செங்கல்பட்டு.
3. செல்வி அனுஷிகா,
   ராமன் புதூர் ஜங்சன், நாகர்கோயில்.

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 85

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | 3 | | | | | 4 | |
| | | | 2 | | 5 | | | | | | |
| | | | | 6 | | 7 | | | | | |
| 8 | 9 | | | | | | 10 | 11 | 12 | | |
| | | | | | | | | | 13 | | 14 |
| | | 15 | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | 16 | 17 | | | |
| | 18 | | | | 19 | 20 | | | | | |
| | | | 21 | | | | | | | | |
| 22 | | | | 23 | | | | | | | |
| | | | 24 | | | | | | | | 25 |

### இடமிருந்து வலம்

1. சீதையின் கருணையால் ஸ்ரீராமபிரானிடமிருந்து காக்கப் பட்டவன்....(5)
3. ஸ்ரீரங்கம் காவேரித்துறையின் பெயர்....(3)மண்டபம்
5. இரண்யகசிபுவின் மனைவி.....(3)
8. சீதையின் பெயர்களுள் ஒன்று....(3)
20. துரியோதனனின் மாமன்....(3)
21. மணவாள மாமுனிகளால் அருளிச் செய்யப்பட்டது...(8) மாலை
23. அரங்கனுள் ஐக்கியமான திருப்பாவை தந்த திருமகள்....(4)

### வலமிருந்து இடம்

24. தன் கணவரான இலட்சுமணனின் தூக்கத்தை ஏற்று தூங்கிவள்..(4)
25. திருப்பாணாழ்வார் அருளிச்செய்த பிரபந்தம் ....(8)

### மேலிருந்து கீழ்

1. வேதாந்த கருத்துக்களை மகரிஷி களுடன் விவாதித்த பெண் வேதாந்திகள்....(7)
2. வடுகநம்பி அருளிச்செய்தது....(8)
3. இராமரின் பாதம் பட்டுப் பெண்ணாய் மாறி சாபவிமோசனம் பெற்றவர்.....(4)
4. பிதாமகர் பீஷ்மரின் தாயார்....(5)
6. ஆதிசங்கரர்....(6) தாயாரைப் போற்றி ஸ்ரீகனகதாரா ஸ்தோத்திரம் பாடினார்
7. சூரியனின் மகனாகக் கருதப்படும் வானர வீரன்...(5)
9. அக்னியில் தோன்றிய பாண்டவரின் பத்னி.....(4)
10. பெரியாழ்வார் அவதரித்த நட்சத்திரம்....(3)
13. கங்கை நதி மேலுலகத்தில் பாயும்போது ....(5) என்று பெயர்.
14. தன் கணவருக்காக தன் கண்களை துணி யால் மறைத்துக் கொண்டு வாழ்ந்தவர்...(4)
15. மாமல்லபுரத்தில் அவதரித்த ஆழ்வார்.....(7)

### கீழிருந்து மேல்

11. இராமபிரானின் தாயார்.....(4)
12. கூரத்தாழ்வானின் திருக்குமாரர்....(4)
14. அத்திவரதர் கொலுவீற்றிருப்பது....(3)நகரம்
16. பஞ்ச கன்னிகைகளில் ஒருவர்....(2)
17. வீரன் அபிமன்யுவின் மனைவி....(4)
18. கருடனுடைய சகோதரி.....(3)
19. இலட்சுமணனிடம் மூக்கறுபட்ட அரக்கி.....(6)
22. அனுமனின் தாயார்......(4) தேவி.
25. ஸ்ரீராமபக்தன்....(4)

தொகுப்பு :
எம். இராஜகுமாரி வெங்கடேசன்,
ஆரணி, 9976238430

புதிருக்கு விடை அறிய
33ம் பக்கம்
பார்க்கவும்...

*அலசுவோம்... அறிவோம்... ஆதிகாவிய நாயகர்களை...*

# அகஸ்தியர்

## (மூர்த்தி சிறியது கீர்த்தி பெரியது)

வசிஷ்டர், விசுவாமித்திரர், கௌதமர், பாரத்வாஜர் போன்ற தலைசிறந்த தவசீலர்களின் வரிசையில் வைத்துப் போற்றத் தகுந்தவர் அகஸ்திய மகரிஷி ஆவார்.

தாம் இருந்த இடத்திலேயே சிவன் பார்வதி திருமணத்தைப் பார்க்கும் பேறு பெற்றவர். விந்திய மலையின் கர்வத்தை அடக்கியவர். ஸ்ரீராம பிரானுக்கு ஆதித்திய ஹ்ருதயத்தை போதித்தவர். தமிழ் இலக்கணம் வகுத்த தொல்காப்பியரின் ஆசிரியர். இப்படி அகஸ்தியரின் பெருமைகளைப் பற்றி இன்னும் எவ்வளவோ சொல்லிக் கொண்டு போகலாம்.

மகாபாரதத்திலும் அகஸ்திய மகரிஷியின் கதை வருகிறது.

சூதாட்டத்தில் தோற்ற பாண்டவர்கள் வனவாசத்தைத் தொடங்கிய சிறிது காலத்தில் வேத வியாசருடைய உபதேசத்தின் பேரில் அர்ச்சுனன் சிவபெருமானிடமிருந்து பாசுபதாஸ்திரத்தைப் பெறுவதற்காகத் தவம் புரியச் சென்று விட்டார். இந்நிலையில் லோமசர் என்ற முனிவர் கூறியபடி ஓரிடத்தில் தங்காமல் வனத்தினுள்ளே இருக்கின்ற பல புண்ணியத் தீர்த்தங்களை நாடி தருமர், பீமன், நகுலன், சகாதேவன், திரௌபதி ஆகியோர் தொடர்ந்து பயணித்தனர். ஆங்காங்கே உள்ள பெரியவர்களும், தபஸ்விகளும் கூறிய கதைகள் சிலவற்றைக் கேட்டனர். அதில் ஒன்றுதான் அகஸ்திய மகரிஷியின் சரித்திரமாகும்.

அகஸ்தியர் பிரம்மச்சாரியாக இருந்த காலத்தில் தலைகீழாகத் தொங்கியபடி மிகவும் சிரமப்பட்டுத் தவம் செய்து கொண்டிருந்த பித்ரு தேவதைகளைப் பார்த்தார். அவர்களிடம் "யார் நீங்கள்? ஏன் இவ்வாறு தலைகீழாகத் தொங்குகின்றீர்கள்?" என்று அகஸ்தியர் ஆச்சரியத்துடன் வினவினார்.

அதற்கு அவர்கள், "அகஸ்தியரே, நாங்களெல்லாம் இறந்துபோன உன்னுடைய முன்னோர்கள். நீ திருமணம் செய்து கொண்டு ஒரு சத்புத்திரனைப் பெற்று, அவன் மூலம் பிண்டம் அளிக்கப்பட்டால் மட்டுமே எங்களுக்கு மோட்சம் கிடைக்கும்!" என்றனர்.

இதைக் கேட்ட அகஸ்தியர் கிருகஸ்தாசிரமம் என்னும் திருமண வாழ்வில் இறங்க முடிவு செய்தார். தமக்கு ஏற்ற குணவதியான பெண் ஒருத்தி கிடைக்க வேண்டுமே என்ற எண்ணம் அவரது மனதில் குடியேறியது.

அச்சமயம், விதர்ப்ப தேசத்தினை ஆண்ட மன்னன் அகஸ்தியரை அணுகி, "ஸ்வாமி, நீண்ட நாளாகப் புத்திர பாக்கியம் இல்லாமல் இருக்கிறேன். விரைவில் அடியேனுக்கு ஒரு குழந்தை பிறக்க நீங்கள்தான் ஆசீர்வதிக்க வேண்டும்!" என்று வேண்டினான்.

அவனை ஆசீர்வதித்த அகஸ்தியர், "அரசனே! விரைவில் உனக்கு அழகியதொரு பெண் குழந்தை பிறக்கும். அக்குழந்தை வளர்ந்து பெரியவள் ஆகிய பின்பு அவளை எனக்கே மணம் முடித்துக் கொடுக்க வேண்டும்!" என்று கூறிவிட்டுத் தவம் புரியச் சென்று விட்டார்.




– திரு.எஸ்.ஸ்ரீதுரை,
காஞ்சிபுரம், 9486139685



அகஸ்தியர் கூறியபடியே உரிய காலத்தில் பெண் குழந்தையும் பிறந்தது. விதர்ப்ப தேசத்து அரசனும் அரசியும் அக்குழந்தைக்கு லோபமுத்திரா என்ற பெயரிட்டுச் சீரும் சிறப்புமாக வளர்த்து வந்தனர்.

லோப முத்திராவுக்குத் திருமணப்பருவம் வந்த பொழுது, அரண்மனைச் சுகபோகங்களை அனுபவித்து வளர்ந்த தன் மகளைக் காட்டில் தவம் செய்யும் முனிவராகிய அகஸ்தியருக்குத் திருமணம் செய்து வைக்க விதர்ப்ப மன்னன் தயங்கினான். அதே சமயம், அகஸ்தியர் சாபம் கொடுத்து விடுவாரோ என்று பயப்படவும் செய்தான். ஆனால் லோப முத்திரா மன உறுதியுடன் அகஸ்தியரை மணந்து கொள்ளத் தயாராக இருந்ததால் அவ்விருவருக்கும் சிறந்த முறையில் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்குப் பின்பு, எளிமையான உடைகளை அணிந்து கொண்டு புகுந்த வீட்டுக்குக் கிளம்பினாள் லோபமுத்திரா. அகஸ்தியருடைய தவநெறி மிக்க வாழ்க்கை முறையை ஒட்டித் தானும் வாழப் பழகிக் கொண்டாள்.

அந்தக்கால தவமுனிவர்கள் இல்லற வாழ்வில் இருந்தாலும் கூட, நினைத்த பொழுதெல்லாம் சிற்றின்பத்தில் ஈடுபடமாட்டார்கள். சிறந்த குழந்தைகளைப் பெறுவதற்கேற்ற நல்ல காலம் கனிந்து வந்தால் மட்டுமே தம்பதியர் இணைவது வழக்கம்.

அகஸ்தியரும் தம் முன்னோர்களாகிய பித்ருக்களைக் கடைத்தேற்ற வல்ல சத்புத்திரன் பிறக்கின்ற காலம் கனிந்ததை முன் கூட்டியே உணர்ந்து தம் மனைவியாகிய லோபமுத்திராவின் சம்மதத்தை நாடினார். ஆனால் அச்சமயம் லோபமுத்திரா ஒரு வேண்டுகோளை அகஸ்தியரிடம் வைத்தாள்.

"ஐயனே நாம் இருவரும் உயர்ந்த ஆடை அணிகலன்களை அணிந்து ஒன்று சேர வேண்டும்

## வாமனர்



**ஆழ்வார்களால் அனுபவித்த வாமனனை, திருவிக்ரமனை காஞ்சிபுரத்தில் உலகளந்தப் பெருமாளாக தனது வலது கரத்தால் ஒரு விரலைக் காட்டியபடியும், வலது காலை மாவலி தலைமேல் வைத்த படியும், இடது காலை உயரத் தூக்கியபடியும் இருப்பதை சேவிக்க லாம்.**

**நடுநாட்டு திவ்ய தேசமான திருக்கோவலூரில் தனது வலது காலை உயரத் தூக்கியபடியும், இடது திருவடியை பூமியில் பதித்தும், வலது கரத்தில் சங்கும், இடது கரத்தில் சக்கரமும் கொண்ட பெருமாளை சேவித்து மகிழலாம். சோழ நாட்டு காழிச்சீராம விண்ண கரத்தில் சிறிய திருமேனியாய் இடது காலை தூக்கியும், வரம் தரும் வரத ஹஸ்தத்துடன் சேவித்து அருள் பெறலாம். மேலும், திருநீர் மலையில் உலகளந்த பெருமாளாகவும், திருவரங்கத்தில் சிறிய மூர்த்தியாக வாமன வடிவில் கையில் குடையுடன் திருக்குறளப்பனா கவும் சேவித்து மகிழலாம்.**

**திருவோண பண்டிகை நன்னாளில் ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி வணங்கி, அனைவரும் நீங்காத செல்வமும் நிறைந்து வாழ்வர் என்பது அசைக்க முடியாத உண்மை!**

என்று ஆசைப்படுகிறேன். தாங்கள் அதற்குச் சம்மதிக்க வேண்டும்!". சற்றே திகைத்த அகஸ்தியர் "லோபமுத்திரா, அரச குலத்தில் பிறந்தவளாகிய உன் ஆசை நியாயமானதுதான். ஆனால், ஆடை அணிகலன்களை வாங்கும் அளவுக்கு நம்மிடம் செல்வம் இல்லையே?" என்றார்.

"தங்களின் தவவலிமையால் அவற்றைப் பெறலாம் அல்லவா?" என்று கேட்ட லோபமுத்திரா விடம், "வேண்டாம், சிற்றின்பம் பெறுவதற்காக எனது தவ வலிமையை இழப்பது சரியாகாது!" என்று பதிலளித்தார் அகஸ்தியர். அதன் பின்னர், பிறரிடம் யாசகம் செய்து உயர்ந்த ஆடை அணிகலன்களைப் பெறலாம் என்று தீர்மானித்து, அரசன் ஒருவனிடம் சென்ற அகஸ்தியர், அந்த அரசனின் நிர்வாகத்தில் வரவும் செலவும் சமமாக இருப்பதை அறிந்து கொண்டார். இதனால், அவ்வரசனிடம் தாம் யாசகம் பெற்றால் அதன் காரணமாகக் குடிமக்களுக்கு வசதிக்குறைவு ஏற்படும் என்று முடிவு செய்தார்.


பின்னர், தனது இல்லத்தில் திதி கொடுக்க விரும்பிய இவ்வலன் என்ற அசுரனின் வீட்டில் உணவு அருந்தி அவன் அளிக்கக் கூடிய தக்ஷிணையைக் கொண்டு ஆடை அணிகலன்களை வாங்கிக் கொள்ளலாம் என்று தீர்மானிக்கின்றார்.

அசுரனாகிய இவ்வலன் தன்னுடைய சகோதரன் வாதாபி என்பவனை உணவாக மாற்றி, அந்தணர் களுக்கு உணவிடுவான். பின்னர், அந்த இவ்வலன் தான் பெற்ற வரத்தின் காரணமாக "வாதாபி, வெளியில் வா!" என்று அழைத்தவுடன், வாதாபி அந்தணரின் வயிற்றைக் கிழித்துக் கொண்டு வெளியே வந்து விடுவான். இவ்வாறு அந்தணர் களை விருந்துக்கு அழைத்துக் கொல்வது அவ்விரு வருக்கும் ஒரு பொழுது போக்காக இருந்தது.

ஆனால், இம்முறை, அகஸ்தியர் உணவு உண்ட அடுத்த நொடியில் அவருடைய வயிற்றுக்குள் சென்ற வாதாபி செரிமானாகிவிட்டான். இதன் மூலம் அகஸ்தியரின் தவவலிமையை உணர்ந்து அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்ட இவ்வலன், அவர் தக்ஷிணையாகக் கேட்ட பொற்காசுகளைச் சமர்ப் பித்துத் தனது உயிரைக் காப்பாற்றி கொண்டான்.

அகஸ்தியரும் இவ்வலன் கொடுத்த பொற் காசுகளைக் கொண்டு தமக்கும் லோப முத்திரா வுக்கும் வேண்டிய ஆடை அணிகலன்களை வாங்கி, அதன் பின்னர் ஒரு சத்புத்திரனைப் பெறும் முயற்சி யில் ஈடுபட்டார் என்ற கதையைக் கேட்டு தருமரும் மற்றவர்களும் வியப்பில் ஆழ்ந்தனர்.

தொடர்ந்து அலசுவோம்...



**அகஸ்தியர் லோபமுத்திராவின் இந்தக் கதையானது உயர்ந்த வாழ்வியல் நெறிமுறைகள் சிலவற்றை நமக்கு உணர்த்துகின்றது.**

1) இல்லறத்தில் ஈடுபடுபவர்கள் சிற்றின்ப வேட்கைக்காக வாழாமல், சிறந்த புதல்வர்களைப் பெற்று அவர்கள் மூலம் தம்முடைய பித்ருக்களைக் கடைத்தேற்ற வேண்டும்.


2) தெய்வ வழிபாட்டினைப் போலவே, பித்ருக்கள் வழிபாடும் மிகவும் முக்கியமானது.

3) விசுவாமித்திரர், துர்வாசர் போன்றவர்கள் கடும்தவம் புரிந்தாலும், அதன் மூலம் கிடைத்த சக்தியைக் காமம், கோபம் ஆகியவற்றால் இழந்து மீண்டும் தவம் செய்ய நேர்ந்தது. ஆனால், அகஸ்தியரோ அற்ப சுகங்களுக்காகத் தம்முடைய தவத்தினால் கிடைத்த சக்தியை இழக்கத் துணியவில்லை.

4) ஒருவர் தம்முடைய சக்திக்கு மிஞ்சி அளிக்கும் தானத்தை நாம் ஏற்றுக் கொள்ளக் கூடாது.

மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா அருளிய

# ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம்





*சென்ற இதழின் தொடர்ச்சி...*

“சுவாமி புஷ்கரணியைக் காட்டிலும் சிறப்பும் பெருமையும் வாய்ந்தது வேங்கடாசலம். இந்த இடம் பாவங்களை அழித்து விடும். மிகவும் புனிதமானது அந்தத் திருமலை. பொன்னொளி வீசும் அத்திருத்தலம் வேதபண்டிதர்களுக்கு வாழ்க்கையின் அடிநாதமாக விளங்குகிறது. இவ்விடம் தவச்சீலர்களுக்குத் தவப்பயன். மேலும், படைப்புக் கடவுளான பிரம்மாவும், ருத்ரரும், தேவேந்திரனும் எப்பொழுதும் எல்லா வேளைகளிலும் வந்து இறைவனை சேவித்துச் செல்லும் புண்ணியத் திருத்தலம் இவ்விடம். திருக்கண்ணனின் திருக்கல்யாண குணங்களுக்கு அடையாளத் திருச்சின்னம் இத்திருமலை. வேங்கடநாதனின் திருக்கல்யாண குணங்களைக் கண்டுகளிக்கக்கூடிய இடம் வேங்கடாத்ரி. இதைவிட சிறந்த ஒன்று வேறொன்றும் இல்லை.

வேங்கடாசலம் சாமான்யமானவர்களின் பார்வையில் கல்லும் முள்ளும் மேடும் பள்ளமும் நிறைந்த ஒன்றாகக் காணப்படலாம். ஆனால், பவித்திரமானவர்களுக்கு இம்மலை ராஜ மலை. இவ்வளவு மகிமைகளைக் கொண்ட இம்மலையில் முதல் முதலாக வந்து நின்று நிவாசம் செய்தவர் ஸ்ரீவராஹ மூர்த்தியே ஆவார். அந்த ஸ்வாமி சாமானியவர்கள் கண்களுக்கு அகப்பட மாட்டார். புண்ணியவான்களின் கண்களுக்கு விருந்தாவார். இம்மலையை ஒரு முறை தரிசனம் செய்தாலே போதும் பிறப்பு, இறப்பு அற்ற உயர்ந்த நிலையான மோட்சம் சித்திக்கும். இதில் எள்ளளவும் ஐயப்பாடு என்பதே இல்லை. இவ்வாறாக சூதர் பரவசத்தோடு சொல்லிக் கொண்டிருக்க, அதைக் கேட்டுக் கொண்டிருந்த முனிவர்கள்,

ஸ்வாமி, வேங்கடாத்ரியை வாழும் இடமாகக் கொண்டு, வசித்து வரும் வராஹ ஸ்வாமி இம்மலையில் என்ன செய்து கொண்டிருக்கிறார். யார் யாருக்கெல்லாம் அருள்பாலிக்கின்றார் என்பதையெல்லாம் அறிய நாங்கள் மிகவும் ஆவலுடன் உங்களிடம் இருந்து எதிர்பார்க்கிறோம். எனவே தயவு கூர்ந்து எடுத்துக் கூறுவீர்களாக என மிகவும் பணிவோடு முனிவர்கள் கேட்க, அவர்களுடைய ஆவலை நன்றாக அறிந்தவரான சூதர்,

முனிவர்களே! நீங்கள் கேட்ட இக்கேள்வி மிகவும் சரியானதே. எவருக்கும் இவ் ஐயம் ஏற்படுவது என்பது இயல்பே. ஸ்ரீவராஹ ஸ்வாமி இம்மலையில் இருந்தும், ஏழுமலையினுடைய எழிலிலே திளைத்து, வெறுமனே பொழுது போக்கிச் சுற்றித் திரிந்தவர் அல்ல. அதர்ம செயலிலே ஈடுபடுகின்ற



## பவித்ரோத்ஸவம்



| தேதி | கிழமை | உத்ஸவம் |
| --- | --- | --- |
| 26-08-2023 | சனி | அங்குரார்ப்பணம் |
| 27-08-2023 | ஞாயிறு | பவித்ர பிரதிஷ்டை |
| 28-08-2023 | திங்கள் | பவித்ர சமர்ப்பணம் |
| 29-08-2023 | செவ்வாய் | பூர்ணாஹுதி பவித்ரோத்ஸவம் நிறைவு |

திருமலையப்ப ஸ்வாமிக்கு பவித்ரோத்ஸவம் ச்ராவண மாதத்தில் நடைபெறும்.



பாவிகளை அழித்தும், தர்ம சிந்தையோடு வாழ்ந்து வருபவர்களுக்குத் தர்மத்தின் மேல் நம்பிக்கை உண்டாகுமாறும் செய்து வந்தார். இவைகள் அனைத் தும் ஸ்வாமியின் இயல்பான குணங்களாகும். அதாவது, தீமையை அழித்து நன்மையை நிலைநாட்டுவது என்பது. அவருடைய தர்ம செயலாகும்.

மஹாவிஷ்ணு ஆள்பவராகவும் காப்பாளராகவும் திகழ்கிறார். பிரம்மா படைப்புத் தொழில் செய்து வரும் வேளையில் சற்று ஓய்வெடுக்கும் தருணத்தில் நம்மை எல்லாம் கட்டிக் காப்பவர் விஷ்ணுவே. மீண்டும் பிரம்மா தன் படைப்புத் தொழிலை தொடங்கும் வேளையில் காக்கும் பொறுப்பையும் அவரிடம் தந்து விடுகிறார் விஷ்ணு. அந்தந்த காலங்களில், சூழ்நிலைக்கு ஏற்ப வெவ்வேறு வடிவம் தாங்கி தீமைகளை அழித்து நன்மைகளை நிலைப்பெறச் செய்கிறார். இவ்வாறாக வராஹ கல்பம் கடந்து போக, பிரம்ம தேவர் ஒரு கேள்வி எழுப்புகிறார்.

தெலுங்கு மூலம் : பேராசிரியர் கே சர்வோத்தம ராவ்,
தமிழாக்கம் : டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர்.

*பெருமை அறிவோம்...*

### வால்மீகிபுரம் ஸ்ரீபட்டாபிராமஸ்வாமி பட்டாபிஷேக உத்ஸவம்

| | | |
| --- | --- | --- |
| 21-08-2023 | திங்கள் | ஸ்ரீபட்டாபிராம ஸ்வாமிக்கு |
| 22-08-2023 | செவ்வாய் | ச்ராவண மாதத்தில் சுக்ல பஞ்சமியிலிருந்து |
| 23-08-2023 | புதன் | சப்தமி வரை நடைபெறும். |



### கார்வேடி நகரம் ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி தெப்போத்ஸவம்

| | | |
| --- | --- | --- |
| 28-08-2023 | திங்கள் | ஸ்ரீவேணுகோபாலஸ்வாமிக்கு |
| 29-08-2023 | செவ்வாய் | ச்ராவண பௌர்ணமியில் |
| 30-08-2023 | புதன் | நடைபெறும். |





# ஸ்ரீநிவாச சதுர்வேத ஹவனம்

யாகம் என்பது ஒரு புகழ் பெற்ற இந்து சமய பாரம்பரிய மாகும். புராண காலம் முதற்கொண்டே இந்திய தேசத்தில் இந்த யாகத்தினை நடத்தி வருகின்றனர். அந்தந்த தேவதைகளை மகிழ் விக்க சில பொருட்களை அக்னிக்கு உரித்தாக்குவதே யாகமாகும். இந்த யாகத்தை யக்ஞம், க்ருதுவு, ஹவனம் என்றும் கூறுவர். இந்த யாகத்திற்கு பல நியமங்களும் சம்பரதாயங்களும் உள்ளன. இந்த யாகங்களை நம் முன்னோர்கள் நடத்துவதற்கான பின்னணியில் பல அறிவியல் காரணங்களும் அடங்கி உள்ளன. இன்றைய காலகட்டத்தில் பலர் பல துன்பங்களுக்கும் ஆட்பட்டு, மன அமைதிக்காக பலவிதமான யாத்திரைகளை மேற்கொள்கின்றனர். அதேபோன்று ஆரோக்கியமான வாழ்க்கைக்கு ஆரோக்கியமான உணவுகள், யோகா, உடல் உழைப்பு உதவியாக அமைகின்றன. இதேபோன்று மற்றொரு வழிமுறை யாகம் ஆகும். இந்த யாகம் செய்யும் போது ஓதப்படும் மந்திரங்களால் நன்மைகள் பல உண்டு.

உலக நன்மைக்காக திருப்பதியில் தி.தி.தே. நிர்வாகக் கட்டிட வளாக மைதானத்தில் ஸ்ரீநிவாச சதுர்வேத ஹவணம் நடைபெற்றது. இந்த ஹவனத்தில் உலகில் உள்ள அனைத்து உயிரினங்களும் ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியுடனும் இருக்க வேண்டுமென ஸ்வாமியை வேண்டிக் கொண்டு நான்கு வேதங்களில் உள்ள மந்திரங்களை பாராயணம் செய்தனர். இவ்விதமாக தேவதைகளுக்கு யாகம் செய்வதினால் அனைத்தும் வெற்றியாகும் என்பது வேத வாக்கு.

சாக்ஷாத் பிரம்ம தேவனால் படைக்கப்பட்ட வேதஹவனத்தினால் மானிடர்கள் தர்ம நெறியில் செல்வதற்கான வழியாக அது அமைகின்றன. இறைவனால் படைக்கப்பட்ட வேதங்கள் செவிவழியாக கேட்கப்பட்டு வந்ததாகவும், பின்னர் குரு சீடன் பரம்பரை வாயிலாக அவை பரப்பப்பட்டன என்பது ஆன்மீகச் சான்றோர்களின் திருவாக்கு.

லிங்க புராணம், காசி புராணம், வராஹ புராணம் கூட உலக நன்மைக்காக இவ்விதமான யாகங்களை நடத்தியதாக கூறியுள்ளன. இந்த ஹவனம் மக்களுக்கு அமைதி, பொறுமை, புகழ், சக்தி அளிப்பதாக புராணங்கள் கூறுகின்றன. இவ் வகையில் தி.தி.தேவஸ்தானம் தன் மேற்பார்வையில் பல யாகங்கள் நிர்வகித்து நடத்தியுள்ளன. அவ்வரிசையில் ஸ்ரீநிவாச சதுர்வேத ஹவனம் என்கிற யாகமும் அண்மையில் நிர்வகிக்கப்பட்டது. இந்த யாகத்தில் கலந்து கொள்ள பல்வேறு பகுதிகளிலிருந்தும் பக்தர்கள் திரளாக வந்திருந்து ஸ்வாமியின் அருளைப் பெற்றனர்.



லோகம் ஸமஸ்தா
ஸுகினோபவந்து
ஸ்ரீஸ்ரீநிவாசார்ப்பணமஸ்து

# ஸ்ரீநிவாச சதுர்வேத ஹவனம்

புனிதமான திருத்தலமான திருப்பதியில் முதன் முறையாக தி.தி.தே. நிர்வாக கட்டிட வளாக மைதானத்தில் நடைபெற்ற ஸ்ரீஸ்ரீநிவாச சதுர்வேத ஹவனம் 29–06–2023 முதல் 05–07–2023 வரை மிக விமர்ச்சையாக நடைபெற்றது. இந்த ஹோமம் சாஸ்திர முறைபடி உலக நன்மைக்காக முதன்முறையாக திருப்பதியில் நடைபெற்றது. வேதவிற்பன்னர்கள் கலச ஸ்தாபனம், கலச ஆவாஹனம், சங்கல்பம், கணபதி பூஜை மற்றும் அக்னி பிரதிஷ்டை போன்ற நிகழ்வுகளுடன் இந்த ஹோமத்தினை ஆரம்பித்தனர்.













# ஸ்ரீநிவாச சதுர்வேத ஹவனம்

காஞ்சி காமகோடி மடாதிபதி சுவாமிகளின் வழிகாட்டுதலின்படி இந்த நிகழ்ச்சியில் 32 வேதவிற்பன்னர்களைக் கொண்டு நான்கு வேதங்களிலிருந்து மந்திரங்கள் பாராயணம் செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தி.தி.தே. செய லாட்சித்தலைவர் திரு. ஏ.வி. தர்மாரெட்டி ஐ.டி.இ.எஸ். தம்பதியினர் மற்றும் திருப்பதி இணைச்செயலாட்சித் தலைவர் திருமதி சதா பார்கவி ஐ.ஏ.எஸ். (எச்.&இ.) அவர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் பங்கு கொண்டனர். இவ்விழாவின் போது ஒவ்வொரு நாளும் மாலை நேரத்தில் பக்தி சங்கீர்த்தனை மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

















22–06–2023 அன்று திருவேங்கடமுடையானை தரிசிக்க வருகை புரிந்த உச்ச நீதிமன்ற நீதிபதி உயர்திரு. வி. ராமசுப்ரமணியன் அவர்களின் குடும்பத்தினரை வரவேற்று ஸ்வாமி பிரசாதங்களை வழங்கும் தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள்





07–06–2023 அன்று மஹாராஷ்டிர மாநிலம், நவிமும்பையில் தி.தி.தே. சார்பில் புதிதாக கட்டவிருக்கும் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலய பூமி பூஜையில் பங்கு கொண்ட மாண்புமிகு மாஹாராஷ்டிர மாநில முதல்வர், துனை முதல்வர், தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர், செயலாட்சித்தலைவர் மற்றும் உயர் அதிகாரிகள்





14–06–2023 அன்று திருமலை மலைவழிச்சாலை 7வது மைலில் அமைந்து உள்ள ஸ்ரீபிரசன்ன ஆஞ்சநேய ஸ்வாமி கொலுவிருக்கும் இடத்தில் சாலை விபத்துகளை தடுக்க தி.தி.தே. "ஸ்ரீமஹா சாந்தி ஹோமம்" மிக சிறப்பாக நடத்தியது. இந்நிகழ்ச்சியில் தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு.ஏ.வி. தர்மாரெட்டி ஐ.டி.இ.எஸ். அவர்கள் பங்கு கொண்டபோது





30–06–2023 அன்று திருப்பதியில் அமைந்துள்ள தி.தி.தே. ஸ்விம்ஸ் பல்நோக்கு மருத்துவமனையின் இயக்குநர் மற்றும் துணைவேந்தராக பொறுப்பேற்ற தி.தி.தே. இணைச்செயலாட்சித் தலைவர்(திருப்பதி) (எச்.&இ.) திருமதி சதா பார்கவி ஐ.ஏ.எஸ். அவர்கள்.







# ஸ்ரீ சுதர்சன சக்கரம்

-திரு. ஏ.கே. கோபி,
கள்ளக்குறிச்சி, 9443879592.

விரோதிகளை அழிப்பதில் எம்பெருமான் பிரயோகிக்கும் அனைத்து ஆயுதங்களிலும் சுதர்சனத்தின் சக்தி செறிந்துள்ளதாக ஆழ்வார் ஆசாரியர்கள் திருவுள்ளம். சுதர்சனத்தின் மேன்மையினை ஆழ்வார்கள், "சுடராழி, பொன்னாழி, சுழலாழி, செஞ்சுடராழி, நெய்யாராழி, திருச்சக்கரம், கூராழி, கனலாழி, ஒண்சுடராழி, அஞ்சுடராழி, மின்னுநேமி, வட்டவாய்நேமி, பேராழி, விறலாழி, அடலாழி, கொலையாழி, அறமுயலாழி" என திவ்ய தேச அர்ச்சாவதார எம்பெருமான்களின் வலது திருக்கையில் ஒளிரும் சக்கரத்தாழ்வாரின் பொலிவிலும், மேன்மையிலும் எதிரிகளை அழிப்பதில் காட்டும் வல்லமையிலும் உள்ளம் பறிகொடுத்து அனுபவித்துப் பாசுரங்களை இயற்றியுள்ளனர்.

வாமன அவதாரத்தில் மகாபலியிடம், தானம் பெறும்போது, சுக்ராசாரியார் வண்டு வடிவத்தில் கமண்டலத்தின் துவாரத்தினை தண்ணீர் வராமல் அடைத்துக் கொண்டார். வாமனச் சிறுவனான எம்பெருமான் தம்முடைய திருக்கையில் அணிந்திருந்த தர்ப்பைப்புல் பவித்திரத்தினை கழற்றி கமண்டலத்தின் வாய்ப்புறத்தில் நுழைத்தார். சுதர்சனர் தர்ப்பையின் நுனியில் உடனே ஆவேசித்து சுக்ராசாரியாரின் கண்ணைத் துளைத்து எரியூட்டி பொசுக்கியதால் சுக்ராசாரியார் கமண்டலத்தில் இருந்து தப்பித்து வெளியேற, மகாபலியும் பூமிதானம் செய்து திரிவிக்கிரமனாய் எம்பெருமான் வளர்ந்து மகாபலியினை தம் திருவடியால் பூமிக்குள் அழுத்தி சம்ஹாரம் செய்தருளினார். இதனையே பெரியாழ்வார் திருமொழியில் அச்சோ பருவத்தில் பாசுரமிடுகிறார்.

*"மிக்கப் பெரும்புகழ் மாவலி வேள்வியில்*
*தக்கதி தன்றென்று தானம் விலக்கிய*
*சுக்கிரன் கண்ணைத் துரும்பால் கிளரிய*
*சக்கரக்கையனே"*

### கஜேந்திரன்

காட்டில் வாழ்ந்த யானை ஒன்று முற்பிறவியில் செய்த நற்செயல்களின் விளைவாக தினமும் குளங்களில் பூத்த தாமரை மலர்களை துதிக்கை



யினால் பறித்து வந்து எம்பெருமான் திருவடிகளில் சமர்பித்து அர்ச்சனை செய்து வந்தது. ஒருநாள் ஒரு குளத்தில் தாமரை மலரினைக் கொய்து கொண்டு கரையேறும் சமயத்தில், கொடிய முதலை ஒன்று யானையின் கால் ஒன்றினைக் கவ்விக் கொள்ள, யானை கரையேற முடியாமல் துன்புற்றது. தம்முடைய பலம் முழுவதும் பிரயோகித்தது.

பலம் முற்றும் இழந்த யானை பக்தியில் எம்பெருமானே ஆதிமூலமே என்னைக் காப்பாற்று என துதிக்கை உயர்த்தி பிளிறி சரணாகதி செய்தது. உடனே எம்பெருமான் கருடப் பறவையின் மீது ஆரோகணித்து குளத்தின் அருகே விரைந்து வந்து சுதர்சனத்தினை பிரயோகித்து, முதலையின் கழுத்தினை துண்டித்து, யானையினைக் காப்பாற்றி, தாமரை மலரினையும் ஏற்றருளினார். திருமங்கை ஆழ்வார் திருக்கண்ணங்குடி திவ்ய தேசத்தில் இவ்வைபவத்தினை அனுபவிக்கிறார்.

*''கவளமா கதைத்த கரியுய்யப் பொய்கைக்*
*கராம்கௌக் கலங்கி உள்நினைந்து*
*துவளமேல் வந்து தோன்றி வன்முதலை*
*துணிபடச் சுடுபடை துரந்தோன்''.*

## நரகாசுரன்

பிரோக்ஜோதிஸ்புரத்தினை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த நரகாசுரனின் அட்டகாசங்களை தாங்கமுடியாத தேவேந்திரன் துவாரகைக்கு விரைந்து நரகாசுரனை வதம் செய்து தேவர்களைக் காத்து அருளுமாறு கண்ணபிரானிடம் பிரார்த்தித்தான்.

கண்ணபிரான் மனமிரங்கி சத்யபாமையோடு கருடாழ்வார் மேல் ஆரோகணித்து சென்று நரகாசுரனை வளைத்து சக்கரத்தாழ்வாரை அவன் மேல் பிரயோகம் செய்து அழித்து தேவர்களைக் காத்தருளினார். சிறை வைக்கப்பட்டிருந்த கன்னிகைகள் அனைவரையும் அவர்களின் வேண்டுகோளின்படி திருமணமும் செய்து கொண்டார். திருமாலிருஞ்சோலை கள்ளழகரை அனுபவிக்கும் பெரியாழ்வாருக்கு எம்பெருமான் இவ்வைபவத்தினை காட்டுகிறார்.

*''மன்னு நரகன் தன்னைச் சூழ்போகி வளைத்தெறிந்து*
*கன்னிமகளிர் தம்மைக் கவர்ந்த கடல் வண்ணன் மலை''*

திருவேங்கடத்தில் நம்மாழ்வாருக்கும் இவ்வைபவம் அனுபவமாகிறது.

*''வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்*
*வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும் - வேங்கடமே*
*தானவரை வீழத் தன்னாழிப் படைதொட்டு*
*வானவரைக் காப்பான் மலை''.*

வராக அவதாரத்தில் பூமியினைச் சமுத்திரத்திலிருந்து மேலே தூக்குகையில் வராகத்தின் கொம்புகளிலும், நரசிம்ம அவதாரத்தில் இரணியனின் மார்பினைப் பிளந்து வதம் செய்கையில் நரசிம்மத்தின் கைகளின் நகங்களிலும் சக்கரத்தாழ்வார் பிரவேசித்திருந்ததாக பூர்வர்கள் திருவுள்ளம். சிசுபாலனின் தாய்க்கு அளித்த வாக்கின்படி, சிசுபாலனின் தவறை நூறு முறை மன்னித்துவிட்டார் கிருஷ்ணர். அவனது நூற்றியோராவது தவறைக் கண்டு கொதித்த சுதர்சனச் சக்கரம் சீறி எழுந்து சிசுபாலனை அழித்தது.

## சக்கரத்தாழ்வார் வழிபாடு

பிரசித்தி பெற்ற பெருமாள் கோயில்களில் சக்கரத்தாழ்வாருக்கென்று தனி சந்நிதிகள் உருவாக்கப்பட்டு பிரத்யேகமான பூஜைகளும், அர்ச்சனை ஆராதனைகளும் நடைபெறுகின்றன. சுதர்சன யாகங்களும், ஹோமங்களும் பல்வேறு பிரார்த்தனைகள் நிறைவேறும் பொருட்டு மிகுந்த நம்பிக்கைகளுடன் செய்யப்படுகின்றன.

பொதுவாக 8 அல்லது 16 கரங்களுடன் வீறு கொண்டு எழும் தோற்றத்துடன் அறுகோண

சக்கரத்தில் சக்கரத்தாழ்வார் காட்சி தருகிறார். "ஷட்கோண சக்கரம்" என்னும் ஆறுகோணத்தின் மத்தியில் உக்கிர வடிவ சுதர்சனரும், "திரிகோண சக்கரம்" எனும் முக்கோணத்தில் பின்புறம் யோக நரசிம்மரும் அருள்பாலிக்கின்றனர்.

சுதர்சனர் திருக்கரங்களில் சக்கரம், மழு, ஈட்டி, தண்டு, அங்குசம், அக்னி, கத்தி, வேல், சங்கம், வில், பாசம், கலப்பை, வஜ்ரம், கதை, உலக்கை, சூலம் என 16 திருக்கரங்களில் 16 வகையான ஆயுதங்களுடன் ஜுவாலா கேசமும், திரிநேத்ரமும் உடைய மகா சுதர்சன மூர்த்தியாகக் காட்சி தருகிறார்.

பக்தர்களுக்கு வரும் பகையை அழித்து, பயத்தைப் போக்கி, கடன், வியாதி, கல்வி மற்றும் திருமணத் தடைகள் இவற்றை முற்றிலும் நீக்கி, சந்தோஷத்தை அளித்து யோக போகங்களைத் தரவல்லது சுதர்சனர் வழிபாடு. சனிக்கிழமைகளில் சக்கரத்தாழ்வாருக்கு துளசி சாற்றி, துளசியால் அர்ச்சனை செய்து 12,24,48 முறை வலம் வந்து வழிபட்டால் பிரார்த்தனைகள், வேண்டுதல்கள் நிறைவேறும் என்பது ஆழமான நம்பிக்கை. சுதர்சன சக்கர எந்திரங்கள் மிகவும் பய பக்தியுடனே பூஜை அறையில் வைக்கப்பட்டு ஆராதிக்கப்படுகின்றன.

ஸ்ரீவைணவ ஆசாரியரான ஸ்ரீவேதாந்த தேசிகர் சுதர்சன கவசம், சுதர்சன அஷ்டகம் எனும் சுலோகங்களால் ஸ்ரீசக்கரத்தாழ்வாரை துதி செய்கிறார். பத்ராசலம் ஸ்ரீராமர் கோயிலின் மூலவர் கர்ப்பகிரகத்தின் கோபுரத்தில் கலசத்திற்குப் பதிலாக சக்கரம் காணப்படுகிறது. திருக்கண்ணபுரம் சௌரிராஜ பெருமாளும், திருமாலிருஞ்சோலை கள்ளழகரும் சுதர்சனத்தினை பிரயோகிக்கத் தயார் நிலையில் உள்ளவாறு வலது திருக்கரத்திலே செங்குத்தாக தாங்கியருளுகின்றனர். நடுநாட்டு திவ்ய தேசமான திருக்கோவலூரில் திருவிக்கிரமன் இடக்கையிலே சக்கரத்தாழ்வாரை தாங்கியுள்ளார்.

பெரியாழ்வார் அருளிய திருப்பல்லாண்டில் ஆழிவல்லானான எம்பெருமானை மங்களாசாசனம் செய்யும்போது, *"வடிவார் சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு"* என்றும், வாணன் என்ற அசுரனின் ஆயிரம் தோள்களை சக்கரத்தினால் அறுத்ததை

*"மாயப் பொருபடை வாணனை ஆயிரம் தோளும் பொழிகுருதி*
*பாய சுழற்றிய ஆழிவல்லானுக்குப் பல்லாண்டு கூறுதுமே"*

என்றும் மங்களாசாசனம் செய்தருளுகிறார்.

சனி மற்றும் வியாழக்கிழமைகளிலும், மாதந்தோறும் வரும் சுதர்சனாழ்வாரின் நட்சத்திரமான சித்திரையிலும் அனைத்து பெருமாள் கோயில்களிலும் சுதர்சனர் சந்நிதியில் சிறப்பு வழிபாடுகளும் திருவாராதனைகளும் பக்தி சிரத்தையுடன் பாகவதோத்தமர்களால் செய்யப்படுகின்றன.

*"ஓம் சுதர்சனாய வித்மஹே மகாஜ்வாலாய தீமஹி*
*தந்நோ சக்ர பிரசோதயாத்"* –சுதர்சன காயத்ரி

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

## வைணவ குறுக்கெழுத்துப்புதிர் 85க்கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 கா | கா | சு | ர | ன் | 3 அ | ம் | மா | யா | ர் | 4 க | |
| ர் | | | 2 ய | | 5 க | யா | து | ல் | ட | ங் | |
| கி | | | தி | 6 ஸ்ரீ | லி | 7 சு | | ச | ட் | கா | சி |
| 8 மை | 9 தி | லி | ரா | ம | கை | க் | 10 ஸ் | 11 கௌ | 12 ப | தே | ஞ் |
| த் | ரௌ | | ஜ | கா | ன | ரீ | வா | ரை | 13 வி | வி | 14 கா |
| ரே | ப | 15 பூ | வை | ல | ப | வ | தி | தி | ர | | ந் |
| யி | தி | த | ப | க்ஷ் | ப் | ன் | ரை | த் | ஜா | | தா |
| ணா | ம | த் | வ | மி | ர் | | 16 தா | 17 உ | ந | | ரி |
| ச | 18 சு | தா | ம் | | 19 சூ | 20 ச | கு | னி | தி | | ன் |
| ஞ் | | ழ் | 21 உ | ப | தே | ச | ர | த் | தி | ன | ம |
| 22 அ | | வா | | 23 ஆ | ண் | டா | ள் | | ர் | | னு |
| ளை | மி | ர் | 24 ஊ | ன் | ரா | பி | தி | ணா | ல | ம | 25 அ |



# திருவேளுக்கை (சின்ன காஞ்சிபுரம்)

– உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

**புராண வரலாறு :**

வேகவதியாற்றங்கரையில், திருவேளுக்கையில், அர்ச்சாவதாரத்தில் விளங்குவதைக்கண்டு, "ஒப்பற்ற அற்புத சிங்கம்" என்ற பொருளில் "கச்சித் அத்புத கேஸரீ" (காமாஸிகாஷ்டகம்.சு.1) என்று ஸ்வாமி தேசிகன் கூறுகிறார்.

கச்சியம்பதியில் ஹஸ்தி சைலம் என்ற மலையின் அடியில் அமைந்த பெரிய குகையில் இருந்து, அசுரர்களை அழிக்கப் புறப்பட்டதாகத் தல வரலாறு கூறுகிறது. அப்படிப்பட்ட சிங்கத்தின் பீடுநடை கண்டு, அசுரர்கள் அனைவரும் ஓடி ஒளிகின்றனர். நரசிங்கத்தின் சீற்றம், அசுரர்களுக்கு அச்சத்தைக் கொடுத்தாலும், ஏன், அப்பெருமானைக் கண்ட தேவர்களும், திருமகளும் கூடப் பயந்தனர்.

ஞானச் செல்வனாய் விளங்கும் பிரகலாதனைக் கண்டபோது, அச்சீற்றம், சூரியனைக் கண்ட பனி போல் மறைந்து விடுகின்றது. அந்த நிலையில் சீற்றம் மறைந்து, அருள் நிறைந்த நிலையில் எம்பெருமானைக் கண்ட பிரமன், இதே நிலையில் இத்தலத்தில், நிலையாய் எழுந்தருளவேண்டும் என்று வேண்டவே, அப்படியே எழுந்தருளி உள்ளான். தாம் மிக விரும்பும் சூழ்நிலை, அவ்விடத்தில் இருந்ததாலும், அங்கேயே, யோக நிலையில், பர்யங்காஸனத்தில் எம்பெருமான் எழுந்தருளி விட்டான் என்று புராணம் கூறுகிறது.

பிருகு முனிவருக்கு, நின்ற திருக்கோலத்தில், கிழக்கு நோக்கிய நிலையில், கனக விமானத்தின் அடியில் முகுந்த நாயகன் என்ற திருப்பெயரில் காட்சி கொடுத்தான் என்று வரலாறு கூறினாலும், தற்போது மேற்கு நோக்கிய நிலையில் அமர்ந்த திருக்கோலத்தில் சிங்கப்பிரானாக எம்பெருமான் காட்சி அருள்வதற்குக் காரணம் எம்பெருமானின் அருட்செயலே. இத்தகைய அருளை நன்கு உணர்ந்த ஸ்வாமி தேசிகன் இப்பெருமானிடம் அடைக்கலம் அடைந்தவராய்,

*"த்வயிரக்ஷதிரக்ஷகை: கிமந்யை:*
*த்வயிசா ரக்ஷதி ரக்ஷகை: கிமந்யை:"*

– காமாஸிகாஷ்டகம் அ.8

என்று ஸ்தோத்ரம் இடுகிறார்.

**சிறப்புகள் :**

ஸ்ரீநரசிம்மம் தானே விரும்பி எழுந்தருளியிருக்கும் தனிச் சிறப்பைப் பெற்றது இந்த திவ்யதேசம். அமர்ந்திருந்த நிலையைக்கண்டு உருகுகிறார் பேயாழ்வார் இங்கே. இதனை *''அன்று இவ்வுலகம் அளந்த அசைவே கொல்? நின்று இருந்து வேளுக்கை நீள் நகர்வாய்''* என்ற அவரது பாசுரத்தில் பார்க்கலாம். எம்பெருமான் திருவேளுக்கையில் சிங்கப்பிரானாக அமர்ந்து இருந்த இருப்பே, ஆழ்வாரின் நெஞ்சை உருக்கியது. இது இத்தலத்தின் தனிச்சிறப்பாகும்.

பெருமாள் : அழகிய சிங்கர், நரசிம்மன் ஆள்அரி, முகுந்த நாயகன், முசுகுந்த நாயகன் என்பர். (கிழக்கு நோக்கிய நின்ற திருக்கோலம்)

| | | |
|---|---|---|
| தாயார் | : | வேளுக்கைவல்லித்தாயார், அம்ருதவல்லித்தாயார் (தனிக்கோயில் நாச்சியார்) |
| தீர்த்தம் | | கனக ஸரஸ், ஹேம ஸரஸ். |
| விமானம் | : | கனக விமானம். |
| தல வ்ருக்ஷம் | : | பிரகலாததீர்த்தம். |
| ப்ரத்யக்ஷம் | : | பிருகு முனிவர். |
| ஆகமம் | : | வைகானஸம். |
| மங்களாசாஸனம் | : | 1) பேயாழ்வார், 2) திருமங்கை ஆழ்வார். |

**விசேஷம் :**

"வேள்" என்ற சொல், "விருப்பம்" என்று பொருள்படும். "இருக்கை" என்பது "இருப்பிடம்" என்று பொருள்படும்.

எம்பெருமான் விரும்பி இருக்கும் இடம் என்னும் பொருளில் "வேள் இருக்கை" என்று இவ்வூருக்குப் பெயர் அமைந்து, அதுவே காலப்போக்கில் "வேளுக்கை" என்று மாறியது என்பர். இதனை ஸ்வாமி தேசிகன் அருளிய ஸ்தோத்திரம் – காமாஸிகாஷ்டகம்: காம=தனது விருப்பத்தால், ஆஸிகா= எழுந்தருளியுள்ள என்று பொருள். "வேள்" என்ற சொல்லுக்கு மன்மதன் என்றும் அர்த்தம். "ஸாக்ஷாத் மன்மத மன்மத" என்றபடி. மன்மதனுக்கும் மன்மதனாய் நின்ற எம்பெருமானின் இருப்பிடம் இது.

ஸ்ரீபெரியவாச்சான் பிள்ளை, "இன்பத்தில் குறைவு இல்லாத ஊர்" என்ற பொருளில் "போக்யதை (இனிமை) குறைவற்ற கோயில்" என்று கூறுவதையும், அப்பிள்ளை என்பார் "வைகுந்த மாநகர்போல் அவனுக்குப் போகஸ்தானமான திவ்ய நகரமாய்" என்று கூறுவதையும் நோக்கினால், இத்திவ்ய தேசத்தின் சிறப்பு நன்கு விளங்கும்.

இத்திவ்ய தேசத்தின் மீது கொண்ட பெருவிருப்பத்தால் ஸ்ரீவைகுண்டத்தின் மீது தான் கொண்டிருந்த பெருவிருப்பத்தையும் எம்பெருமான் கைவிட்டான் என்றாராய்,

*"வேக உபகண்டட ஸங்காத் விமுக்த*
*வைகுண்ட பஹுமதிம்"*

–காமாஸிகாஷ்டகம். சு.3

என்கிறார் சுவாமி தேசிகன். இப்பெருமானிடம் வீரத்தைக் காட்டிலும், அழகே முதன்மையாகத் தென்பட்டதால், இவ்வழகிற்கு ஏதேனும் ஆபத்து வராவண்ணம் மதில் இட்டுக் காக்கும்படி இருப்பவன்" என்று இவ்விடத்திற்கு ஸ்ரீபெரியவாச்சான் பிள்ளை அருளிய உரை இங்கே குறிப்பிடத்தக்கது.

அவ்வாறு இடப்பெற்ற மதில், "பிரளயத்திலும் அழியாத மதில்" என்று ஸ்ரீஅழகிய மணவாளப் பெருமாள் நாயனார் கூறுகிறார். இத்தகைய பெருமானை "ஆள்அரி" என்கிறார் திருமங்கை ஆழ்வார். லீலா விபூதி, நித்ய விபூதி என்று இரண்டு வகை உலகங்களையும் ஆள்பவன் அவனே என்பது கருத்து.

**த்யானச்லோகம் :**

*ஸ்ரீபாஹ்வா புரி தேவநாயகதிசா வக்த்ரோப்ருகு ப்ரார்த்தித:*
*தத்ரஸ்ரீ முசுகுந்த நாயக ஹரி: பாஹ் வாக்யயா ப்தமயா ।*
*யுக்தோ ஹேம ஸரஸ்தடேச கநக ஸ்ரீமத்விமாநோத்தமே.*
*திஷ்டந் அர்த்த ஸமூஹ கல்பகதரு: காருண்யவாராந்நிதி: ॥*

– ஸ்ரீவிஷ்ணு ஸ்தலாதர்சம்

**பாசுரம் :**

*"அன்று இவ்வுலகம் அளந்த அசைவே கொல்?*
*நின்று இருந்து வேளுக்கை நீள் நகர்வாய் அன்று*
*கிடந்தானை கேடில் சீரானை முன்கஞ்சைக்*
*கடந்தானை நெஞ்சமே! காண்"*

– பேயாழ்வார்

*"தனக்கு உரியனாய் அமைந்த தானவர் கோன் கெட்டான்*
*உனக்கு உரியனாய் மைந்தன் உய்ந்தான் - நினைக்குங் கால்*
*வேளுக்கை ஆளரியோ! வேறுஉதவி உண்டோ*
*உன் தாளுக்கு ஆளாகாதவர்க்கு?"*

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

**நாமாக்கள்**

*731. ஓம் நைக: நம:*

அனேகமாகவும் இருப்பவன்.

*ஓம் மதுரா: நம:*

ஆராதன வேளையிலும் அன்பர்க்கு இனிமையை அருளுபவள்.



732. ஓம் ஸ: நம:

அவ்வாறே போற்றத்தக்கவன்.

ஓம் ஸ்ரீதா: நம:

செல்வத்தை அளிப்பவள்.

733. ஓம் வ: நம:

எல்லா ஜீவன்களிலும் வசிப்பவன்.

ஓம் தேவராதி: நம:

பகவானால் தனம் பாதுகாக்கப்படுபவள்.

734. ஓம் க: நம:

எங்கும் விளங்குபவன்.

ஓம் மஹா மநா: நம:

அபசாரங்கள் செய்தாலும், பெருந்தன்மையுடன் மன்னிப்பவள்.

735. ஓம் கிம் நம:

எவன் என்று தேடத்தக்கவன்.

ஓம் ஸ்தூலா: நம:

எங்கு இருந்தாலும் நேரிலேயே எல்லா வற்றையும் அனுக்ரஹிக்கச் சக்தி உள்ளவள்.

736. ஓம் யத் நம:

எப்போதும் பக்தர்களைக் காப்பாற்ற முயல்பவன்.

ஓம் ஸர்வாச்ருதி: நம:

எல்லாவற்றிலும் வ்யாபித்து, நிர்வகித்து எல்லாவற்றையும் சரீரமாக உடையவள்.

737. ஓம் தத் நம:

பக்தர்கட்குப் பக்தியை வளர்ப்பவன்.

ஓம் ஸ்தேமா: நம:

அசேதன, சேதன சரீரங்கள் அழிந்தாலும் பிறகு வந்தாலும், தான் அழியாது ஸ்திரமாக இருப்பவள்.

738. ஓம் அநுத்தமம் பத: நம:

தனக்கு மேற்பட்ட புகலிடமில்லாமல், தானே புகலிடமாக இருப்பவன்.

ஓம் நிம்நகர்ப்பா: நம:

ப்ரளயங்களில் உலகங்களை உள்ளடக்கும் திரு உதரம் உடையவள்.

739. ஓம் லோகபந்து: நம:

லோகத்தில் உள்ள எல்லாரிடமும் உறவாக இருப்பவன்.

ஓம் தமோநுதா: நம:

ச்ருஷ்டி ஸமயத்தில் தமஸ்ஸை ச்ருஷ்டிக்குப் பிரேரிப்பவள்.

730. ஓம் லோகநாத: நம:

எல்லா உலகங்களுக்கும் நாதன்.

ஓம் துஷ்டி: நம:

உலகங்களைப் படைத்து, ஜீவன்களின் ஜன்மங் களைக் கழிக்க உதவி, மகிழ்ச்சி அடைபவள்.

ஸ்ரீமதே அம்ருதவல்லீ (காமாஸிகாவல்லீ) வேளுக்கைவல்லீ ஸமேத ஸ்ரீஸுந்தர யோக நரஸிம்ஹ (அழகிய சிங்கர்) பர ப்ரம்மணே நம:

**குறிப்பு :**

தேவப்பெருமாள் ஸந்நிதியிலிருந்து சுமார் 3 கி.மீ., அஷ்டபுயகரம் பெருமாள் கோயிலில் இருந்து 1 கி.மீட்டரிலும் இவ்வாலயம் அமைந்துள்ளது.

திவ்யதேச வைபவம் வளரும்...

## ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

# திருவரங்கப் பெருமாள் அரையர்

– ஸ்ரீ உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,
சென்னை, 9841884972



இராமாநுசர் அவதரித்த பிங்கள வருடத்தில், 1017இல், வைகாசி மாதம் கேட்டை நக்ஷத்ரத்தில், யாமுன ஆசார்யரான ஆளவந்தாருக்கும் ஸ்ரீரங்க நாச்சியாருக்கும் முதல் குமாரராய், ஸ்ரீரங்கநாதன் கருணையாலே அவதரித்தவர் திருவரங்கப்பெருமாள் அரையர். இவர் சங்கு கர்ணர் என்னும் நித்ய ஸூரியின் அம்சமாவர். ஆழ்வார் திருவரங்கப் பெருமாள் அரையர் என்றே பிரசித்தி பெற்றவர்.

நாதமுனி குலந்திகழ நன்கு
உதித்தோன் வாழியே
நற்றமிழின் மறைக்கு இசையை
நவின்று உரைப்போன் வாழியே
காதல் அரங்கேசர் இருகழல்
பணிவோன் வாழியே
கானவர நயவிசையால்
களிப்பிப்போன் வாழியே
ஏதமில் வண் கச்சியனை ஏத்தி
இசைப்போன் வாழியே
எதிபதியைப் பரிசாகவேற்று
வந்தோன் வாழியே
தீதில் யமுனைத்துறைவன்
சேவடியோன் வாழியே
திருவரங்கப்பெருமாளரையர்
திருவடிகள் வாழியே

### பதவுரை

நாதமுனி குலம் திகழ – நாதமுனிகளின் வம்சம் விளங்க, நன்கு – நன்மை பயக்க, உதித்தான் வாழியே – உதித்தவர் வாழ வேண்டும். நற்றமிழின் மறைக்கு – நல்ல தமிழ் வேதமாகிற திவ்யப்ரபந்தத்துக்கு, இசையை – இசையை, நவின்று – ஆராய்ந்து, உரைப்போன் – சொல்லுவர். காதல் பக்தியுடன், அரங்கேசர் – திருவரங்க நாதன், இருகழல் – இரண்டு திருவடிகள், பணிவோன் – பணியுமவர். கானவர – இசைப் பாட்டை அழகிய, நயவிசையால் – இனிய இசையால் களிப் பிப்போன் – மகிழ்ச்சி அடையச் செய்பவர். ஏதமில் – குற்றமற்ற, வண் – வள்ளலான, கச்சியனை – காஞ்சியிலுள்ள பேரருளாளனை, ஏத்தி – தோத்திரம் செய்து, இசைப்போன் – பாட்டு பாடுபவர். எதிபதியை – யதிகளுக்குத் தலைவரான இராமாநுசரை, பரிசாக ஏற்று – பரிசாகப்பெற்று, வந்தோன் – வந்தவர். தீதில் – குற்றமற்றவரான, யமுனைத்துறைவன் – ஆளவந்தாருடைய, சேவடியோன் – செம்மையான திருவடியைப் பற்றினவர். திருவரங்கப்பெருமாளரையர் திருவடிகள் வாழ்க.

### சிறப்புரை

(நாதமுனி குலந்திகழ நன்கு உதித்தோன் வாழியே) நாதமுனி – ரங்கநாதமுநி என்பது இவரது திருநாமம். ஸத்யபாமா என்பதை பாமா என்று வழங்குவதுபோல, “ரங்கநாதமுனி” என்பதை “நாதமுனி” என்று சொல்லுவர். நாமைகதேசம். ஈச்வர முனிகள் “ஸ்ரீரங்கநாதர்” என்று திருநாமம் சாற்றுகையாலே, “நாதர்” என்று திருநாமமாகிறது. “முனி” – எம்பெருமானை நினைக்கையினால் உண்டான ஆனந்தத்தினால் நிலைநின்றவராய், பார்த்துக் கொண்டிருந்தபோதும் பார்க்கவில்லை என்னும்படி தான் நினைத்த வஸ்துவான எம்பெருமானை எப்போதும் மனக்கண்ணால் காண்கையாகும். நம் தர்சனத்து “நாதர்”

என்றும் "மதுசூதனையன்றி மற்றிலேன்" என்றிருக்கும் மஹாத்மாக்களாலே கொண்டாடப் படுபவர். அளவற்ற பகவத் பக்தி என்ன, உண்மை அறிவு என்ன, இவற்றின் அமுதக்கடலின் போக்கு வீடாயிருக்கும் சுபமான வார்த்தைகளாலே இந்த உலகில் அவதாரம் செய்த பரம ப்ரயோஜனமாயும் பூர்ணமாயுமிருக்கும் பக்தியின் சேர்த்தியை உடையவராய், பகவத் ஞான நிதியாயுள்ளவர். யோகிகளில் மேலானவருமானவர் நாதமுனிகள் என்பர். இப்படிப்பட்ட நாதமுனிகளை நெஞ்சால் நினைந்து நினைந்து அவரை அள்ளிப்பருகுகிறார் இராமாநுசர். பருகவே அவர் நீராயுருகினார். இவர்தான் மதுரகவிகளினுடைய திவ்ய ப்ரபந்தமான கண்ணிநுண் சிறுத்தாம்பை அநுஸந்தித்து ஆழ்வாருடைய அருள் பெற்ற நாதமுனியானார். அந்த நாதமுனி அருளாலேயன்றோ ஆளவந்தார் அவதரித்து தர்சனத்தை ஆளவந்தாரானது.


மேலும் கூரத்தாழ்வானும் வரதராஜஸ்தவத்தில் (102) *''ஸ ச நாதவம்ச்ய:''* என்கிறபடியே அந்த யாமுநாசார்யரும் ஸ்ரீமந்நாதமுனிகளுடைய திருவம்சத்திலவர். இங்கு வம்ச சப்தத்தாலே *''பிதாமஹம் நாதமுநிம் விலோக்ய ப்ரஸீத மதவ்ருத்தமசிந்த்ய்யித்வா''* (ஸ்தோ.ர.) என்னும்படிக்கு ஈடான உறவைச் சொல்லலாமாயினும் வித்யா ஸம்பந்தமே இங்கு கொள்ள வேணும் என்பர். அந்த ஆளவந்தாருக்கு திருக்குமாரராய் அவதரித்து நாதமுனி குலம் திகழச் செய்தவர் திருவரங்கப் பெருமாள் அரையர் என்றபடி. நாதமுனி குலத்தை விளங்கச் செய்தலாவது *''அத்யாபயத்யதீந்த்ராய... நாதவம்சம்... தேசிகம்''* என்ற தனியனுக்கு ஏற்ப இராமாநுசருக்கு நம்மாழ்வார் அருளிய ஆயிரம் பாசுரங்களான திருவாய் மொழியைச் சந்தை சொல்லி வைத்தவராய் ஸ்ரீமந்நாதமுனிகளின் வம்சத்தவரான திருவரங்கப்பெருமாள் அரையரை வணங்குகிறேன் என்று அருளியது காண்க.

*(நற்றமிழின் மறைக்கு இசையை நவின்று உரைப்போன்)* நற்றமிழாவது சிறந்ததான தமிழ்மொழியாலே மற்றுமுண்டான பிரபந்தங்களுக்கும் பிரிதொன்றுக்கில்லாச் சிறப்பாம்படி தமிழ் வேதமான திவ்யப்ரபந்தங்கள் என்றபடி. தமிழ் மறை – த்ராவிட ரூபமான வேதம். நம்மாழ்வார் தாம் அருளிய திருவாய்மொழியில் *''பாலேய் தமிழர் இசைகாரர்''* (1–5–11) என்பதற்குச் சேர எம்பெருமான் திருமுன்பே ஆழ்வார் அருளிச் செய்த பாசுரங்களை இனிய இசையோடு நவின்று பாடும் ஆழ்வார் திருவரங்கப்பெருமாள் அரையர் போல்வாரை "இசைகாரர்" என்று கூரத்தாழ்வான் குறிப்பிடுவர். இசை நயத்தை விளக்கும் வகையில் திருமங்கையாழ்வார் அருளிய பெரிய திருமொழியில் *''அரிய இன்னிசை''* (1–2–10) என்பதற்குச்சேர ஆழ்வார் திருவரங்கப் பெருமாள் அரையர் சிலரோடு கருத்து வேற்றுமை கொண்டபோது, தம் கையில் தாளத்தைப் போட்டு *''வாலிமா வலத்து''* (1–2) என்னும் திருமொழியை தம்மோடு பாட முடியுமாயின் பாடுங்கள் பார்க்கலாம் என்று கூறினாராம். இசையை நவின்று உரைப்பதற்குச் சான்றாக அதனால் இந்த பதிகத்தை இசை குறித்து வாது பாட்டாகப் பாடும் பதிகம் என்பர்.

அரையர் நம்பெருமாள் திருமுன்பே பாசுரங் களைப் பாடும்போது அப்பாசுரங்களின் கருத்திலே ஈடுபட்டு விடுவார். ஒரு சமயம் திருவாய்மொழி திருவேங்கட பதிகப்பாசுரமான *''ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்''* (3–3–1) என்ற பாசுரத்தைப் பாடும்போது *''ஒழிவில் காலமெல்லாம்...ஒழிவில் காலமெல்லாம்''* என்று கண்ணும் கண்ணீருமாய் பாடிக் கொண்டிருப்பாராம். இதனால் அரையர் இசையை நவின்று உரைத்தபடி. திருவாய்மொழியில் *''அன்னை என் செய்யிலன்''* (5–3–6) என்ற பாசுரத்தில் *''வாசுதேவன் வலையுளே''* என்பதற்கு அரையர் தன் மேலாடையை வலையாக வளைத்துக் காட்டினார். அப்போது கோஷ்டியில் இருந்த இராமாநுசர், தம்முடைய திருக்கண்களைச் சுட்டிக் காட்டி *''கமலக் கண் என்னும் நெடுங்கயிறு''* (நாச்.திரு.14–4) என்று காட்டினார். அவ்வாறு அபிநய திருத்தத்தை மகிழ்ச்சியுடன் ஏற்றார் என்பர். அரையர் ஒரு முறை திருவாய்மொழியில் *''கெடுமிடர்....''* (10–2–1) என்ற பாசுரத்தில் *''நடமினோ நமர்கள் உள்ளீர் நாம் உமக்கு அறியச் சொன்னோம்''* என்ற அடியை தம் தந்தையான ஆளவந்தார் திருமுகத்தைப் பார்த்துக் கொண்டே பல கால் பாடினார். ஆளவந்தார் குறிப்பறிந்து உடனே திருவனந்தபுரம் புறப்பட்டார் என்ற நிகழ்ச்சி வாயிலாக அரையர் நவின்று உரைப்பதைக் காணலாம்.

வாழித்திருநாம உரை தொடரும்....

# பதஞ்சலியின் யோக சூத்திரங்கள்



– திரு.எம்.எஸ்.சுகுமார்,சென்னை,
8838252312.

சென்ற இதழின் தொடர்ச்சி...

**சூத்திரம் 11 :** *“அனுபூதவிஷயாஸம் ப்ரமோஷ: ஸ்ம்ருதி:”*

முன் அனுபவித்த விஷயம் (சித்தத்தில்) மீண்டும் வெளிப்படுவது நினைவு என்பதாகும். சூழ்நிலை வரும் போது மீண்டும் அனுபவித்த உணர்வு வருவதை நினைவு (ஸ்மிருதி) என்று கூறுகிறார்கள்.

**சூத்திரம் 12 :** *“அப்யாஸ வைராக்யாப்யாம் தன்னிரோத:”*

சித்தத்தில் எந்தவித சலனமும் இல்லாமல் மனம் அமைதியாக இருக்க வேண்டும். அதற்கு பயிற்சி என்கிற அப்யாசத்தையும், வைராக்கியத்தையும் கடைபிடித்தால் மனத்தில் எந்தச் சலனமும் இருக்காது.

**சூத்திரம் 13 :** *“தத்ர ஸ்திதௌ யத்னோ அப்யாஸ:”*

மனத்தின் வசம் குடி கொண்டுள்ள சித்தமானது இந்திரியங்களில் சலனமில்லாமல் ஸ்திரப்படுத்துவதற்காக எடுக்கப்படும் முயற்சியே அப்யாசம் என்பதாகும். சித்தத்தில் அலைபாயும் எண்ண ஓட்டங்களானது சஞ்சலத் தன்மை உடையது. மனத்தை மீண்டும் முயற்சி செய்து பயிற்சியின் மூலம் ஒழுங்குப்படுத்த வேண்டும்.

**சூத்திரம் 14 :** *“ஸது தீர்ககால நைரந்தர்ய ஸ்த்கரா ஸேவி தோத்ருடபூமி”*

இடைவிடாத யோகப் பயிற்சியினால் அப்யாசம் உறுதிப்படுகிறது. யோகப் பயிற்சி செய்து கொண்டிருக்கும் போது சரியான பலன் கிடைக்கவில்லை என்று மனம் தளர்ந்து போய் விடக்கூடாது. நம்பிக்கையுடன் தொடர்ந்து முயற்சி செய்து வெற்றி கிட்டும் வரையில் ஓய்ந்து விடாமல் அதை வாழ்வின் ஒரு அங்கமாக கருத வேண்டும்.

**சூத்திரம் 15 :** *“த்ருஷ்டானுச்ரவிக விஷய வித்ருஷ்ணஸ்ய வசீகாரஸக்ஞா வைராக்யம்”*

இம்மண்ணுலகில் நுகரும் இன்பங்கள் யாவும் பிரத்யட்சமாகக் காணப்பட்டாலும் அவை போலியானவை. யோக சாதனையினால் கிடைக்கக்கூடிய அற்புத சித்திகள் மேற்சொன்ன எல்லாவிதமான பிரத்யட்சமாகக் கண்ட, கேள்விப் பட்ட விஷயங்களின் மேல் ஆசை வைக்காமல், இறையருளே சாஸ்வதமானது என நினைத்து ஒதுக்கி தள்ளிவிட வேண்டும். மனத்தில் அலைபாயும் ஆசைகளை விலக்கி வைத்து, பற்றற்ற நிலையில் வாழ்ந்தால், வைராக்யம் தன்னால் வரும்.

**சூத்திரம் 16 :** *“தத்பரம் புருஷக்யாதேர் குண வைத்ருஷ்ண்யம்”*

சாதகனின் மனத்தில் ஆசைகள் முற்றிலும் ஒழிந்த பின் எண்ணங்கள் சலனமில்லாமல் சித்தம் சமநிலைபட்டு ஐம்புலன்கள் ஒருங்கிணைந்த ஏகாக்ரக சித்தத்தில் “சமாதி” அடைவதற்குரிய பக்குவ நிலை ஏற்படும். முக்குணங்களின் வேற்றுமைகள், பிரக்ருதி சக்திக்கும் ஆத்ம புருஷனுக்கும் பேதம் தெரிந்து விவேக ஞானம் உண்டாகும். சாதகன் தன்னிறைவு பெற்றவுடன் “பர வைராக்யம்” உண்டாகும்.

தொடர்ந்து அறிவோம்...



# ஏகாதசி

திரு.துளசி கிருஷ்ணா, சென்னை.

### அஜா ஏகாதசி

புரட்டாசி மாத கிருஷ்ண பக்ஷத்தில் வரும் ஏகாதசியின் பெயர் அஜா என்பது. அதன் மகிமையைக் கூறுகிறேன் கேள் என்பதாக மாதவன் சொல்லலுற்றான். இந்த ஏகாதசிக்கு அஜா என்று பெயர். இது சர்வ பாபங்களையும் போக்க வல்லது. என்னைப் பூஜித்து விரதம் இருப்பவன் என்னையே அடைவான். இம்மை மறுமை நலன்களுக்கு இதைக்காட்டிலும் வேறு ஓர் உபாயம் இல்லை. அரிச்சந்திரன் இந்த விரதத்தால் கஷ்டங்கள் நீங்கப் பெற்று சொர்க்கம் அடைந்தான்.

அரிச்சந்திரன் சூரிய வம்ச அரசன். சத்திய சந்தன், குணசாலி, கீர்த்திமான். ஒரு சமயம் பாப விசேஷத்தால் ராஜ்யமிழந்தான். மனைவியையும் மகனையும் விற்கும் நிலையும் ஏற்பட்டது. ஒரு வெட்டியானிடத்தில் அடிமையாக இருக்கும் நிலையும் ஏற்பட்டது. மேலும் மேலும் துன்பமடைந்தான். ஆயினும் வாய்மை பிறழாமல் இருந்தான். ஏதோ ஒரு ஜன்மாந்தர பாப விசேஷத்தால்தான் தனக்கு இக்கஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதைப்போக்கும் உபாயம் யாது என சிந்திக்கலானான். அப்பொழுது கௌதம மகரிஷி அவன் முன் தோன்றினார். அரிச்சந்திரன் கௌதமரை அடி வணங்கி கைகளால் ஆரத்தொழுது தன் கஷ்டங்களைக் கூறி, இக்கஷ்டங்களைப் போக்கும் உபாயம் ஒன்றினைக் கூற வேண்டும் என்று விண்ணப்பித்தான்.

“அரசே! இன்னும் ஒரு வாரத்தில் புரட்டாசி மாத கிருஷ்ண பக்ஷ ஏகாதசி வருகிறது. அது மங்களமானது. அஜா என்ற பெயர் உடையது. பாவங்களைப் போக்கும் சக்தி வாய்ந்தது. அன்று உபவாசம் இரு. இரவில் ஜாகரணம் இருந்து பகவானைத் துதி என்றார். அரிச்சந்திரன் உபவாசம் இருந்தான். அவனும் அவன் மனைவியும் அடிமைத் தனத்திலிருந்து மீண்டனர். இறந்த மகன் உயிர் பெற்றான். வானோர் மலர் மழை பொழிந்தனர். இழந்த அரசை மீண்டும் பெற்று, இனிது ஆண்டு இறுதியில் சொர்க்கமடைந்தான். இந்த ஏகாதசி நெடியாய கொடு வினைகள் யாவற்றையும் ஒரு நொடியில் ஒழிக்கவல்லது. இவ்வரலாற்றினைக் கேட்பவர்க்கும் படிப்பவர்க்கும் அஸ்வமேத பலன் கிடைக்கும்.

### பத்மா ஏகாதசி

பாண்டுநந்தன! பத்மா என்கிற புரட்டாசி மாத சுக்லபக்ஷ ஏகாதசியின் பெருமையைக் கூறுகிறேன் கேள். இந்த ஏகாதசி பத்மா எனப்படும். விவஸ்வானுடைய வம்சத்தில் தோன்றிய மாந்தாதா வீரம், கொடை முதலிய நற்குணங்கள் செறிந்து விளங்கினான். வாய்மையைப் பேணினான். ஜனங்களைப் பரிவுடன் காத்து வந்தான். அவனுடைய அரசில் மக்கள் மன நோயாலோ, உடல் நோயாலோ துன்புற்றதில்லை. அறவழியில் நியாயமாக சம்பாதித்த பொருட்களால் அரசர் கஜானா நிரம்பி வழிந்தது. நான்கு வருணத்தினர் தத்தம் குடி வழுவாது இருந்தனர். பூமி காமதேனுவைப் போல் மிகுதியாக வழங்கியது. மாதம் மும்மாரி பொழிந்தது. இவ்வாறு பல ஆண்டுகள் கழிந்தன. ஒரு சமயம் ஏதோ ஒரு வினைப் பயனால் மூன்று ஆண்டுகளுக்கு நாடு மழையற்று வறண்டது. மக்கள் துன்புற்றனர்.

மக்கள் அரசனிடம் இந்த பஞ்சத்தைத் தீர்க்க ஏதாவது பிராயச்சித்தம் உளதா? என்று கண்டறிந்தால் நலம் என்று



ஜாடையாக தங்கள் துன்பத்தை உணர்த்தினர். அரசன் நான் செய்த பாபத்தினால்தான் வானம் வறண்டு பஞ்சமேற்பட்டுள் உள்ளது. நான் மனமறிந்து ஒரு பாபமும் செய்யவில்லை. இருப்பினும் இதற்குப் பரிகாரம் தேடுகிறேன் என்று கூறி மக்களைத் திருப்பி அனுப்பினான். பகவானை வணங்கினான். வனம்புக்கண் துறவோர்களையும், முனிவர்களையும் வணங்கி னான். ஒரு நாள் ஆங் கிரஸ முனிவரை அவன் காண நேரிட்டது. ஆனந்தம் அடைந் தான். வீழ்ந்து வணங்கினான். கைகளால் ஆரத் தொழுதான். மகரிஷி அவனுக்கு ஆசி கூறி ஆசனம் கொடுத்து அமரச் செய்து குசலம் விசாரித்தார்.

அரசன் தன் நிலைமையை எடுத்துரைத்தான். பஞ்சத்தைப் போக்கியருள வேண்டினான். மகரிஷி அரசனைப் பார்த்து, அரசே இது கிருத யுகம். இது யுகங்களுக்குள் உயர்ந்தது. இந்த யுகத்தில் நடக்கும் தர்மம் நான்கு காலங்களையும் நன்கு பதித்து நடக்கிறது. நான்கு வருணத்தவரும் அவரவருக்கு உரிய தருமத்தையே செய்வர். மாற்றி செய்யகில்லார். ஆனால் உன் ராஜ்யத்தில் நான்காம் வருணத்தவன் ஒருவன் தனக்குரிய தர்மமல்லாத தவத்தை செய்கின்றான்.

அதனால் மழை பொழியவில்லை. அவனை தவம் செய்வதிலிருந்து விலக்கு. இன்றேல் அவனை மாய்த்து விடு. துர்பிக்ஷம் விலகும். நாடு செழிக்கும் என்று கூறினார். அதனைக்கேட்ட அரசன் "தவம் செய்யும் அவனை கொல்லவோ தடுக்கவோ எனக்கு மனம் வரவில்லை. வேறு உபாயம் கூறி அருள வேண்டும்" என்று பிரார்த்தித்தான். அதனை கேட்ட ரிஷி "அப்படியானால் நீ பத்மா ஏகாதசியில் உபவாசம் இருந்து இரவில் கண் விழித்து, பகவானைத் துதித்து வழிபட்டால் வானம் பொழியும். இந்த ஏகாதசி சர்வ சித்தியைக் கொடுக்கும். எல்லா இன்னல்களையும் போக்கும்" என்று கூறினார்.

அரசன் சந்தோஷத்துடன் முனிவரை வணங்கி வழிபட்டு ஊர் வந்து விரத மனுஷ்டித்தான். நாடு நலமடைந்தது. நீர்வளம் நிறைந்தது. இந்த ஏகாதசி யில் பூர்ணகும்பத்தில் புதிய வஸ்த்ரத்தை அணிவித்து (ஓர் குடத்தில் இதைச் சுற்றி) தயிர் சாதத்தையும் ஓர் அந்தணனுக்கு ***"நமோ நமஸ்தே கோவிந்த புதஸ்ரவண ஸம்ஜ்ஞக! அகௌகஸம் க்ஷயம் க்ருத்வா ஸர்வஸௌக்ய ப்ரதோ பவ!''*** என்று சொல்லி தானம் செய்தால் புண்ணியம் கிடைக்கும் என்று கிருஷ்ணன் தர்மபுத்திரருக்குக் கூறினான்.

தொடரும்....



## திருமலையில் விகனச ஜெயந்தி

**விகனச மஹரிஷி வைகானச பகவத் சாஸ்திரங்களை அவருடைய சீடர்களான பிருகு மஹரிஷி, அத்ரி மஹரிஷி, கஸ்யப மஹரிஷிகளுக்கு திருமலையில் போதித்தார். திருமலையில் அனைத்து பூஜைகள் மற்றும் உற்சவங்கள் இந்த வைகானச ஆகம சாஸ்திரபடி நடைப்பெற்று வருகின்றது. திருமலையில் வடக்கு மாட வீதியில் ஸ்வாமி புஷ்கரணி அருகில் ஸ்ரீ விகனசாசார்யர் சன்னதி அமைந்துள்ளது. திருமலையப்ப ஸ்வாமி விகனச ஜெயந்தி அன்று விகனசாசார்யர் சன்னதிக்கு எழுந்தருளுவது சிறப்பான விஷயமாகும்.**



# தரணி போற்றும் தணிகைவேலன்

-திரு. குடந்தை ப.சரவணன்

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்தகுடி மக்களாகிய நமது முன்னோர் கள் பிறந்து வாழத் தொடங்கிய நிலம் மலையும் மலை சார்ந்த இடமான குறிஞ்சி நிலமாகும். இவர் கள் வழிபட்ட இந்நில தெய்வம் முருகப் பெருமான் ஆவார்.

ஒளி வடிவில் ஒன்றான ஈசனின் மறு வடிவான தமிழ்க் கடவுள் திருமுருகப் பெருமான் எழுந்தரு ளியுள்ள ஆறுபடை வீடுகளை பற்றி திருமுருகாற்றுப் படை எனும் நூலில் சங்க காலத்தைச் சேர்ந்த நக்கீரர் பெருமான் எழுதியுள்ளார். அது முதலே ஆறுபடை வீடுகள் என்ற வரையறை வழக்கில் வந்தது. இம் மரபினைப் பின்பற்றிக் குமர குருபரர் **“ஆறு திருப்பதி கண்டு ஆறெழுத்தும் அன்பினுடன் கூறும் அவர் சிந்தை குடி கொண் டோனே”** என்கிறார். இந்த ஆறுபடை வீடுகள் என்பது நமது உடலிலுள்ள ஆறு குண்டலினி சக்தி ஆதாரங்களின் மறு வடிவங்களாகும். அவை கள் 1)திருப்பரங்குன்றம் (மூலாதாரம்), 2) திருச் செந்தூர் (சுவாதிஷ்டானம்), 3) திரு ஆவினன் குடி (மணி பூரகம்), 4)திருஏரகம் (அநாகதம்), 5) குன்று தோராடல் (விசுத்தி), 6)பழமுதிர்ச்சோலை (ஆக்ஞை) ஆகும்.

“ஏறு மயிலேறி விளையாடு முகம் ஒன்றே” என்று ஐந்து ஆதாரங்களிலும் உள்ள முருகனின் குணங் களைக் கூறிக் கொண்டே வரும் அருணகிரி யார் ஆறாவது ஆதாரத்தில் வந்ததும் வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே என்கிறார். இதன் வழியாக திருத்தணிகை முருகப் பெருமா னின் அருளின் சிறப்பை மிக எளிமையாக எடுத்துரைக் கிறார்.

திருவாரூரில் பிறந்த சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துசாமி தீக்ஷிதர் சுமார் 200 ஆண்டு களுக்கு முன்பு வாழ்ந்தவர். தணிகை மலையில் வந்து தமக்கு சங்கீத ஞானம் வேண்டி தணிகை முருகனிடம் அழுது தொழுதபோது முருகப் பெருமான் வயோதிக வடிவம் கொண்டு அவர் நாவில் அக்ஷர ஆசி அருளி அவருக்கு பாடும் திறனை வழங்கினார். அது சமயம் தனது முதல் பாட்டில் *“ஓம் குரு குஹாய நம”* என்று முதல் அடி எடுத்துப் பாடலைத் தொடுத்துள்ளார் முத்துசாமி தீக்ஷிதர்.

திருவருட்பா அருளிய இராமலிங்க அடிகளார் சுவாமிகள் தமது பால பருவத்தில் திருத்தணிகை முருகனின் திருக்காட்சியினை தமது இல்லத்தில் கண்ணாடியில் கண்டு தரிசித்து அருள் பெற்றவர் ஆவார். இதுபோல் பல அதிசய நிகழ்வுகள் தணிகை மலையில் எழுந்தருளியுள்ள தணிகாசலமூர்த்தி திருவடியை சரண் அடைந்த பலருக்கும் கிடைத்து உள்ளது என்பதும் கூடுதல் சிறப்பாகும். இப்படி பல சிறப்புகள் கொண்ட ஆறுபடை வீடுகளில் ஐந்தாம் படைவீடான குன்றுகள் நிறைந்து இருக்கும் குன்று தோராடல் என அழைக்கப்படும் திருத் தணிகை திருத்தலம் தொண்டை மண்டலம் திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது.

## தலச்சிறப்பு

இத்தல முருகப்பெருமானின் வலக்கையில் சக்தி ஹஸ்தம் எனப்படும் வஜ்ரவேலுடன் இடக் கையை தொடையில் வைத்து ஞான சக்திதரராக காட்சி தருகிறார். இவரிடம் மற்ற கோயில்களில்

காணப்படுவது போல் வேல் கிடையாது. முருகன், கோபம் தணிந்து காட்சி தரும் தல மென்பதால் இங்கு சூரசம்ஹார விழாவும் கிடையாது. முருகன் இங்கு யானை வாகனத்துடன் காட்சி தருவதும், யானை வாகனம், சன்னதியின் வாயிலை பார்த்த படி இருப்பதும் குறிப்பிடத்தக்க தாகும்.

அமுதவல்லி, சுந்தரவல்லி இருவரும் முருகனை மணக்க வேண்டி தவமிருந்தனர். இவர்களின் கிரியா சக்தியான அமுதவல்லி, தெய்வானை என்ற பெயரில் இந்திரனிடமும், இச்சா சக்தியான சுந்தரவல்லி வள்ளி யாக நம்பிராஜனிடமும் வளர்ந்து முருகனை மணந்தனர். சகோதரிகளான இவ்விருவரும் வேறில்லை என்பதன் அடிப்படையில் இங்கு வள்ளி தெய்வானை அம்சத்துடன் ஒரே அம்பிகையாக கஜ வள்ளி என்னும் பெய ரில் அருள்கிறாள். இவள் வலது கையில் வள்ளிக் குரிய தாமரையும், இடக்கையில் தெய்வானைக்கு உரிய நீலோத்பவ மலரும் வைத்திருக்கிறாள்.



### திருவிழாக்கள்

சித்திரை பிரம்மோத்ஸவத்தில் தெய்வானை திருமணமும், மாசியில் வள்ளி திருமணமும் நடக்கிறது. பள்ளியறை பூஜையின் போது ஒரு நாள் தெய்வானையும் ஒரு நாள் வள்ளியுமாக முருகனுடன் அருள் செய் கின்றனர்.

### தரணி போற்றும் தணிகை வேலன் சிறப்பு

சூரர்படை வென்று சீற்றம் தணிந்து வள்ளியை மணந்து தங்கிய இடமாதலால் "தணிகை" என்ற பெயர் பெற்றது. ஒரு முறை முருகப்பெருமானை தணிகை மலையின் சிறப்புகளைக் கூறுமாறு வள்ளியம்மை வேண்ட "மலர்களுக்குள் தாமரை மலர் உயர்ந்தது, நதிகளில் கங்கைநதி சிறப்பு மிகுந்தது. புண்ணிய தலங்களுள் காஞ்சித்தலம் சிறப்பு வாய்ந்தது போல் மலைகளில் இந்தத் தணிகை என்ற பெருமலை சிறந்தது" என்று முருகக் கடவுள் திருவாய் மலர்ந்தருளினார்.

திருத்தணிகை என்ற பெயரைத் தொலைவிலிருந்து கேட்டாலும், சொன்னாலும், நினைத்தாலும், திசை நோக்கித் தொழுதாலும் அவர் தம் பழவினைகள் யாவும் போம் என்று தணிகைப் புராணம் கூறுகின்றது. இக் கருத்தையே அருணகிரி நாதர் *''தூரத் தொழுவார் வினை சிந்திக்கும் தணிகையம்பதி''* எனக் குறிப்பிடு கின்றார்.

### திருவிழாக்கள்

தணிகாசல மூர்த்தியை ஆடி கிருத்திகை அன்று இந்திரன் கல்ஹார புஷ்பம் என்னும் மலரைச் சூட்டி வழிபட்டு பேறு பெற்ற தலம் என்பதால் வருடம் தோறும் ஆடி மாதம் கார்த்திகையில் மூன்று நாட்கள் இவ்விழா மிக விமரிசையாக நடைபெறுகிறது. இவ்விழாவின் போது மலை அடிவாரத்திலுள்ள சரவணப் பொய்கைக்கு சுவாமி எழுந்தருளுகிறார்.

இப்பெருவிழாவில் தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா என பல மாநிலங்களில் இருந்தும் லக்ஷக்கணக்கில் பக்தர்கள் அதிக அளவில் கலந்து கொண்டு, தங்களது வேண்டு தல்கள் நிறைவேற தணிகை முருகப் பெருமா னுக்கு மலர்க்காவடி செலுத்தி வழிபாடுகள் நடத்தி மகிழ்கிறார்கள்.

### தமிழ்ப்புத்தாண்டில் 1008 பால் குட அபிஷேகம்

1917 ஆம் ஆண்டு முதல் ஆங்கில புத்தாண்டில் டிசம்பர் 31 ஆம் நாள் இரவு முன்னூற்று அறுபத்தைந்து படிகள் ஒவ்வொன் றுக்கும் மஞ்சள், குங்குமம் வைத்து கற்பூரம் ஏற்றி பூஜித்து, 365 திருப்புகழ் பதிகங்கள் பாடப்படு கிறது. படிபூஜை செய்து 12 மணிக்கு முருகனுக்கு விசேஷ பூஜை நடைபெறுகிறது.

வேடுவனாகவும், வேங்கை மரமாகவும் வேதியராகவும், வேலனாகவும் வடிவங்கள் பல கொண்டு வள்ளியை ஆட்கொண்டதைப் போல், தம்மை நாடி வரும் அடியார்களுக்கு அருள ஸ்ரீகஜ வள்ளி சமேத ஸ்ரீதணிகாசல மூர்த்தி எவ்வேடத் தில் வருவானோ காத்திருப்போம் அவன் காலடியில் காலம் கனியும் வரை. இத்தல தீர்த்தங்களில் ஏதாவது ஒரு தீர்த்தத்தில் நீராடி இத்தலத்திலுள்ள செங்கழுநீர் விநாயகர் மற்றும் வள்ளி மனத்தலைவனை வழிபட அனைத்து உடல் மற்றும் உள்ளப் பிணிகள் அகலும் என்பது திண்ணம்.




தெலுங்கு மூலம்:
டாக்டர். சி.மதுசூதன சர்மா,90007 61390.
தமிழாக்கம்: திருமதி வி.உஷா, திருப்பதி.

இயற்கை அன்னை வழங்கிய கிழங்கு வகையைச் சார்ந்த பீட்ரூட்டின் மருத்துவ குணங்களை அறிந்து கொண்டு பயன் பெறுவோம்.

## இரத்தம் குறைவு நீங்க

நாள்தோறும் ஒரு முறை 100 மி.லி. பீட்ரூட் இரசத்தில் அரை டீஸ்பூன் முதல் 1 டீஸ்பூன் வரை நெல்லிக்காய் பொடி, அரை டீஸ்பூன் வெல்லம் சேர்த்து உட்கொண்டால் உடலில் இரத்தத்தின் சதவீதம் அதிகமாகும்.

## நினைவாற்றல் பெருக

நினைவாற்றல் பெருக 200 மி.லி. நீரில் ஒரு டீஸ்பூன் அரைத்த பீட்ரூட் பேஸ்ட், 10 இடித்த மிளகு, அரை டீ ஸ்பூன் சீரகம், கால் டீஸ்பூன் உப்பு கலந்து இவற்றை 100 மி.லி. ஆகும் வரை நன்கு கொதிக்க வைத்து ஆறியபின் வடிகட்டி குடித்து வந்தால் நினைவாற்றல் அதிகரிக்கும். மறதி நீங்கும்.

## தோல் வறட்சிக்கு

சில நாட்கள் நாள்தோறும் வெறும் வயிற்றில் 50 மி.லி. பீட்ரூட் இரசத்தை எடுத்துக்கொண்டு, அதனுடன் தேங்காய் பால், பனங்கற்கண்டு சேர்த்துக் குடித்து வந்தால் உலர்ந்த சருமம் நீங்கி நல்ல பளபளப்புடன் காணப்படும். மேலும் பீட்ரூட் இரசத்துடன் தேங்காய் பால் சேர்த்து உலர்ந்த இடத்தில் பூசிக் கொண்டு அரை மணி நேரம் கழித்து குளித்தால் இப்பிரச்சனை நீங்கும்.

## சிறு வயதில் ஏற்படும் நரை முடி குறைய

வாரத்திற்கு ஒரு முறை 100 கிராம் பீட்ரூட் பேஸ்டில் கருஞ் சீரகத்தை வறுத்து பொடி செய்து, மருதாணிப் பொடி, நெல்லிக்காய் பொடி ஆகியவற்றை 15 கிராம் வீதம் எடுத்துக் கொண்டு நன்கு கலந்து தலைமுடிக்கு பூசிக்கொண்டு, இரண்டு மணி நேரம் கழித்து தலைக்குளியல் செய்தால் இந்த பிரச்சனை குறையும்.

## முகத்தில் கருமச்சங்கள் குறைய

நாள்தோறும் ஒரு முறை 2 டீஸ்பூன் பீட்ரூட் இரசம், இரண்டு டீஸ்பூன் கடலை மாவு, ஒரு டீஸ்பூன் தயிர், ஒரு டீஸ்பூன் எலுமிச்சை இரசம், ஒரு டீஸ்பூன் தேன் ஆகிய வற்றை நன்கு கலந்து முகத்தின் மேல் உள்ள கருமச்சங் களுக்கு பூசிக் கொண்டு ஒரு மணி நேரம் கழித்து கழுவிக் கொண்டால் நற்பலன் உண்டாகும்.

## தாய்ப்பால் அதிகரிக்க

நாள்தோறும் 100 மி.லி. பீட்ரூட் இரசம், 100 மி.லி. கேரட் இரசம், ஒரு டீஸ்பூன் வெல்லம் அல்லது கால் டீஸ்பூன் மிளகுப்பொடி சேர்த்துக் குடித்து வந்தால் தாய்ப்பால் அதிகரிக்கும். குழந்தையும் ஆரோக்கியமாக இருக்கும்.

## கொழுப்பு சக்தி அதிகரிக்காமல் இருக்க

தினமும் ஒரு முறை 100 மி.லி. பீட்ரூட் இரசத்தில் அரை டீஸ்பூன் சீரகப்பொடி, கால் டீஸ்பூன் மிளகுப்பொடி, ஒரு கிராம் மஞ்சள் கலந்து கொதிக்க வைத்து ஆறியபின் குடித்து வந்தால் உடலுக்கு தேவையான நல்ல கொழுப்பு சத்து அதிகரித்து, வேண்டாத கொழுப்பு சத்து குறையும். இதனை நாள்தோறும் குடித்து வந்தால் இரத்தக்கொதிப்பு வராமல் தடுக்கலாம்.

## இரத்தம் தூய்மையாக

கால் கிலோ பீட்ரூட் இரசம், முக்கால் கிலோ கேரட் இரசம், 1 கிலோ கற்கண்டு பொடி ஆகியவற்றை இளம்பாகு வரும்வரை சூடு செய்து, வெதுவெதுப்பான பின் ஒரு கிராம் பச்சைக்கற்பூரம் சேர்த்து, ஆறியபின் ஒரு கண்ணாடி பாட்டிலில் எடுத்து வைத்துக் கொண்டு நாள்தோறும் இரு வேளை 10 மி.லி. மருந்தை 50 மி.லி. நீருடன் சேர்த்துக் குடித்து வந்தால் இரத்தம் சுத்தமாகி பலவிதமான தோல் சம்பந்தப்பட்ட வியாதிகள் குறைய வழிசெய்யும்.



# ஆகஸ்ட் 2023
# ராசி பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.

### மேஷம்

வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. மனைவியின் ஆரோக்யத்திலும், குழந்தைகளுக்கும் நல்ல முன்னேற்றம் உண்டு. தாய்-தந்தை ஆரோக்யம் நன்றாக இருக்கும். தனவரவு உண்டு. யாத்திரை வெற்றி தரும். தொழில் துறையில் லாபம் உண்டு. மாதக் கடைசியில் ஆரோக்யத்தில் கவனம் தேவை. மாணவர்கள் எதிர்பார்த்த மதிப்பெண்கள் பெறுவர். மொத்தத்தில் யோகமான மாதமிது.

### ரிஷபம்

வேலை பளு அதிகமாகும். எதிர்பார்த்த லாபம் கிடைப்பதில் தாமதம் உண்டாகும். அலைச்சல் அதிகரிக்கும். தக்க சமயத்தில் நண்பர்கள் உதவி கிட்டும். போட்டிகளில் வெற்றி கிடைக்கும். செலவினங்களுக்கு ஏற்ற வருமானம் கிடைக்கும். சேமிப்பு குறையும். கணவன்-மனைவி அன்யோன்யம் உண்டு. மாணவர்களுக்கு முயற்சி திருவினையாக்கும். மொத்தத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய மாதமிது.

### மிதுனம்

ஆரோக்யத்தில் அக்கறை தேவை. தொழில் துறையில் அலைச்சலும், நல்ல லாபமும் உண்டு. தந்தை ஆரோக்யத்தில் கவனம் தேவை. மனைவியால் தனலாபம் உண்டு. குழந்தைகளுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. சகோதரர்களுடன் கருத்து வேற்றுமைகள் உண்டு. பூர்வீக சொத்துக்கள் பற்றி பேசாமல் இருப்பதும், கடன் கொடுப்பதை தவிர்ப்பதும் நல்லது. மாணவர்களுக்கு நல்ல மதிப்பெண்கள் கிட்டும்.

### கடகம்

தொழில் துறையில் முயற்சிகள் செய்யலாம். மனைவி ஆரோக்யத்தில் அக்கறை தேவை. கணவன்-மனைவி கருத்து வேறுபாடு உண்டாகும். குழந்தைகளுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. மூட்டு வலி, ஜீரண உறுப்பில் கோளாறு உண்டு. உணவில் உப்பினை குறைக்கவும். தாய்-தந்தை ஆரோக்யம் மேம்படும். சகோதர வழியில் தனலாபம் உண்டு. நன்மையும் தீமையும் கலந்த மாதமிது.

### சிம்மம்

மனக்குழப்பங்கள் தீரும். செலவினங்கள் அதிகமாகும். வெளிநாடு செல்லும் யோகம் உண்டு. கணவன்-மனைவி கருத்து வேற்றுமைகள் சரியாகும். தந்தை ஆலோசனை உதவும். யாத்திரை வெற்றியைத் தரும். தொழில் வளர்ச்சிக்காக செலவினங்கள் அதிகமாகும். கூட்டு வியாபாரத்தில் குழப்பம் உண்டாகும். திருஷ்டி அதிகமாகும். செலவினங்களுக்கு ஏற்ற வருமானம் தரும் மாதமிது.

### கன்னி

தொழில் ரீதியாக செலவினங்கள், அலைச்சல் அதிகமாகும். திருமண ஏற்பாடுகள் தடைபடும். தொழில் துறையில் பழைய பாக்கிகள் வசூலாகும். ஆரோக்யத்தில் அக்கறை தேவை. அஜீரணக் கோளாறுகள் உண்டாகும். மாணவர்கள் முயற்சி திருவினையாக்கும். முடிந்த வரை குடும்ப உறுப்பினர்களுடன் விவாதத்தைத் தவிர்க்கவும். உங்கள் ஜாதகத்தில் உள்ள தோஷ பரிகாரங்களைச் செய்ய வேண்டிய மாதமிது.

### துலாம்

திருமணம் கைகூடும் மாதமிது. தொழில் துறையில் புதிய முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள். குழந்தைகளின் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. கடுமையாக உழைத்து நல்ல லாபத்தைப் பெற்றுத் தரும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவார்கள். வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. நண்பர்கள், உறவினர்களின் உதவி கிடைக்கும். மொத்தத்தில் நன்மை பெறும் மாதமிது.

### விருச்சிகம்

தொழில்துறை வளர்ச்சிக்காக மாற்றங்கள் செய்ய வேண்டியிருக்கும். குடும்பத் தேவைக்காக கடன் வாங்க வேண்டி இருக்கும். நண்பர்கள்-உறவினர்கள் பிரச்சனை சரியாகும். பெற்றோரின் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெற முடியும். நல்ல லாபம், முன்னேற்றம் உண்டு. நன்மையும் தீமையும் கலந்த மாதமிது.

### தனசு

தெய்வ கடாக்ஷம் நிரம்பிய மாதமிது. திருமணம் கை கூடும். குழந்தைகளின் ஆரோக்யம் நன்றாக இருக்கும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். தாய்மை வரம் கிட்டும். பூர்வீக சொத்துக்கள் கிட்டும். தொழில் துறையில் இருந்த பிரச்சனைகள் தீரும். மாதத்தின் பிற்பகுதியில் தந்தை ஆரோக்யம் மேம்படும். தொழில் போட்டியில் வெற்றி கிட்டும் உன்னத மாதமிது.

### மகரம்

தொழில்துறையில் வேலைப்பளு அதிகமாகும். குடும்பத்தில் மருத்துவச் செலவுகள் கட்டுக்குள் இருக்கும். நண்பர்கள், உறவினர்கள் உதவி கிட்டும். கணவன்-மனைவி கருத்து வேறுபாடுகள் சரியாகும். பேச்சு வார்த்தைகளில் எச்சரிக்கை தேவை. பிடிவாதத்தை கைவிடவும். தொழிலாளர்களால் நன்மை உண்டு. வருமானம் அதிகமாகும். யோகமான மாதமிது.

### கும்பம்

பிடிவாதமாகக் காரியங்களைச் செய்து சாதித்துக் கொள்வீர்கள். சகோதரர்களுக்கு நன்மையுண்டு. கணவன்-மனைவி பிரச்சனைகள் தீரும். ஆரோக்யம் மேம்படும். தொழில் வளர்ச்சி நன்றாக அமையும். நல்ல லாபம் கிட்டும். புதிய முயற்சிகள் வெற்றி தரும். திட தேக ஆரோக்யம் உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். சகல துறைகளிலும் வெற்றி பெறும் மாதமிது.

### மீனம்

குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். செலவினங்களுக்கு ஏற்ற வருமானம் உண்டு. தொழிலில் தனலாபம் உண்டு. வீடு, மனை வாங்குவதில் சிரமம் தீரும். புது வாகனங்கள், ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டு. ஆரோக்ய குறைபாடுகள் நீங்கும். மேல்படிப்புக்கு அதிக வாய்ப்புண்டு. புதிய தொழில் முயற்சிகள் வெற்றி தரும். சகல துறைகளிலும் வெற்றி பெறும் மாதமிது.



# சந்தேகம் தெளிவோம்


–நாவல்பாக்கம்
ஸ்ரீஉ.வே. வாஸுதேவாசார்யார்,
திருவனந்தபுரம்


**கே: தக்ஷிணாயனம், உத்தராயணம் என்பது என்ன?**

ப : சூரியன் கிழக்கு–மேற்காக சுற்றுகிறான். அல்லது பூமி சுற்றுகிறது. அதே சமயம் ஆறு மாதங்கள் சற்றே தெற்கு பக்கம் மெதுவாக போகிறான். அதுவே தக்ஷிணா யனம். தக்ஷி ணம் என்றால் தெற்கு. அயனம் என்றால் செல்லுதல். உத்திரம் என்றால் வடக்கு. பின் ஒரு ஆறு மாதம் வடக்கு பக்கம் மெதுவாக செல்கிறான். அது உத்தராயணம் ஆகும்.

**கே : ஆடி மாத அமாவாஸ்யைக்கு என்ன சிறப்பு? அதை ஏன் விசேஷமாக சொல்கிறார் கள்?**

ப : அடி மாதம் என்பது தக்ஷிணாயனம் ஆரம்பிக்கும் மாதம் ஆகும். தக்ஷிணாயனம் என்பது பித்ருக்களுக்கு உகந்த மாதம். ஏனெனில் தெற்கு திசை என்பது பித்ருக்களின் திசை ஆகும். அத னால் தக்ஷிணாயன ஆரம் பத்தில் முதல் அமாவாஸ்யை ஆடி அமாவாஸ்யை என்பதால், அதில் பித்ருக் களைக் குறித்து தர்ப்பணமோ அல்லது பிண்டபலியோ கொடுத்தல் விசேஷம் ஆகும்.

**கே : திருமலை அப்பனை த்யானை செய்யும்போது என்ன மந்த்ரம் சொல்ல வேண்டும்?**

ப : “நமோ வேங்கடேசாய” என்று சொல்லிக் கொண்டு த்யானம் செய்யலாம். நம்மாழ்வார் அதனைத் தமிழில் “வேங்கடத் துறைவார்க்கு நம:” என்று அருளிச் செய்துள்ளார்.

**கே : ஆண்டாள் என்ற திருநாமத்திற்கு என்ன அர்த்தம்?**

ப : கண்ணனை ஆண்டவள், தமது அன்பினால், கண்ணனைக் கட்டிப் போட்டு அவனையே ஆண்டவள் என்று அர்த்தம். ஆண்டாள் தமிழை ஆண்டாள் என்று கவியரசர் கண்ணதாசன் குறிப்பிடுகிறார்.

**கே : மனிதன் எப்போது கண்மூடித்தனமாக மஹாபாபம் செய்ய ஆரம்பிக்கிறான்?**

ப : இந்த கேள்விக்கு கீதையில் கண்ணன் சொல்லும் பதில் – கோபம் வரும்போது மனிதன் அறிவை இழக்கிறான். அப்போது அவன் மஹாபாபம் செய்கிறான். அப்பாவி குழந்தைகளை அடிப்பான். ஆசானான குருவுடன் சண்டை இடுவான். என்ன செய்கிறோம் என்கிறதே தெரியாமல் பாபங்கள் பல செய்வான். அதனால், மஹாபாபத்துக்கு மூலம் கோபமே ஆகும்

**கே : திரு ஆடிப்பூரம் எதனால் விசேஷம் ஆனது?**

ப : ஆடி மாதத்தில் பூரம் நக்ஷத்ர நன்னாளில் ஆண்டாள் அவதாரம் செய்தார்; சாதாரண மனிதப் பிறவியாக இல்லாமல், தெய்வத் தோற்றமாக ஸ்ரீவில்லிபுத்தூர் என்னும் ஊரில், பெரியாழ்வாருடைய பூந்தோட்டத்தில் துளசி செடியில் தோன்றினார். “வேயார்புகழ் வில்லிபுத்தூர் ஆடிப்பூரம் மேன்மேலும் மிக விளங்க விட்டு சித்தன் தூய திருமகளாய் வந்து” என்று அவரது அவதாரப் பெருமையை, ஸ்ரீவேதாந்த தேசிகன் குறிப்பிட்டுப் பாடி அருளுகிறார்.

**கே : ஸ்ரீராமன், க்ருஷ்ணன் முதல் எல்லா அவதாரங்களிலும் பகவான் அசுரர்களைக் கொல்கிறான்; இதன் உள் கருத்து என்ன?**

ப : பகவான் அவதாரம் செய்வதே தீய சக்திகளை ஒழித்து நல்ல பக்தர்களைக் காத்து, அறத்தை நிலை நாட்டுவதற்காகத்தான்; நம்மிடம் உள்ள கெட்ட குணங்களே தீய சக்திகள்; பகவானின் துணை கொண்டு அவற்றை நாம் ஒழிக்க வேண்டும் என்பதை இது உணர்த்துகிறது; அசுரர்களில் கூட விபீஷணன், ப்ரஹ்லாதன் முதலிய நல்லவர்களை பகவான் அரவணைத்து அருள் செய்கிறான் என்பதையும் ஆலோசிக்க வேண்டும்.



# மகிழ்ச்சி பொங்கும்

- திரு.ரா.அருண்குமார், புதுச்சேரி.9944802769

கோயில் வாசலில் யாசகம் செய்து பிழைத்து வந்தான் ஒருவன். தீவிர கடவுள் பக்தனான அவன் இனிமையான குரலில் தான் பாடும் பக்திப் பாடல்களில் நெகிழ்ந்து போய், மக்கள் அவனுக்குப் பணம் தருவார்கள்.

அதனால் அவன் பசியில் தவித்ததில்லை. ஒரு நாள் வழக்கம் போல பக்திப் பாடல்களை உருக்க மாகப் பாடிக் கொண்டிருந்தான். பாடல்களில் உருகி, கடவுள் அவன் முன் தோன்றினார். கடவுளைக் கண்டதும் பிச்சைக்காரன் வியந்தான். “உன் பக்தி என்னைக் கவர்ந்தது உனக்கு என்ன வேண்டும் கேள்” என்றார் கடவுள். அந்த நிமிடம் வரை பக்தி மட்டுமே இருந்த அவன் மனதுக்குள் சுயநலம் புகுந்தது. “கடவுளே! எனக்கு இரண்டு வரங்கள் அளிக்க வேண்டும். யாசகம் செய்து பிழைக்கும் இந்த வாழ்க்கை எனக்கு வெறுத்துப் போய் விட்டது. அதனால் முதல் வரத்தின் மூலம் என்னை இந்த ஊரிலேயே பெரிய பணக்காரனாக ஆக்கி விடுங்கள்” என்று கேட்டான். “அப்படியே ஆகட்டும். இரண்டாவது வரம் கேள்” என்றார் கடவுள். “கடவுளே! இவ்வளவு நாட்கள் எல்லோரும் பணக்காரர்களாக இருந்தார்கள். நான் ஏழையாக இருந்தேன். இப்போது நான் பணக்காரனாக ஆகும்போது, அவர்களும் பணக்காரர்களாக இருக்கக் கூடாது. அதனால் ஊர் மக்கள் அனைவரையும் ஏழையாக்கி விடுங்கள்” என்று கேட்டான்.

கடவுள் அவன் எண்ணம் புரிந்து சிரித்தார். “சரி, அப்படியே ஆகட்டும். ஆனால் இந்த வரங்கள் ஒரு வாரம் மட்டுமே நீடிக்கும். நாளை பொழுது விடியும்போது நீதான் இந்த ஊரில் பெரிய பணக்காரன்” என்று சொல்லி விட்டு மறைந்தார்.

“ஒரு வாரத்துக்கு மட்டும்தான் வரம் தருகிறார் இந்தக் கடவுள். கிடைக்கும் பணத்தை வைத்து அதற்குள் நிறைய சொத்துகளை வாங்கிப் போட்டு விட வேண்டும்” என்று திட்டமிட்டபடி படுத்தான். அவனுக்கு தூக்கம் வரவில்லை. தன் கைவசம் இருக்கும் பெட்டியைத் திறந்து பார்த்தான். சில்லரை நாணயங்களாக 50 ரூபாய் இருந்தது. “விடிந்ததும் இந்தப் பெட்டி பெரியதாக ஆகி விடும். பெட்டி நிறைய பணம் கட்டுக்கட்டாக இருக்கும்” என்றெல்லாம் நினைத்தான். எப்போது தூங்கினான் என்று தெரியவில்லை.

எழுந்தபோது விடிந்து வெளிச்சம் வந்திருந்தது. பெட்டியைப் பார்த்தான். அப்படியே இருந்தது. பெட்டியைத் திறந்து பார்த்தால் உள்ளே அதே 50 ரூபாய் மட்டுமே இருந்தது. வீட்டில் எதுவுமே மாறி இருக்க வில்லை. “கடவுள் நம்மை ஏமாற்றி விட்டாரா? என்று யோசித்தவாறு வெளியே வந்தான். ஊரெங்கும் ஒரே பரபரப்பு. எல்லோர் வீட்டிலும் இருந்த பணம், நகைகள் எல்லாமே காணாமல் போயிருந்தன. பிச்சைக்காரனுக்கு விஷயம் புரிந்தது.

ஊரில் யாரிடமும் ஒரு பைசா கூட இல்லை. அதனால், 50 ரூபாய் வைத்திருக்கும் நான்தான் ஊரிலேயே பெரிய பணக்காரன். இந்தப் பணக்காரத் தகுதியால் அவனுக்கு எந்தப் பயனும் இல்லை. கோயில் வாசலுக்குச் சென்று யாசகம் செய்யவும் முடியாது. காரணம், ஊரில் யாரிடமும் பணம் இல்லை. “நல்ல வேளை, ஒரே வாரத்தில் நிலைமை மாறிவிடும்” மக்களிடம் பணம் வந்து விடும்” என நிம்மதி அடைந்தான். சுயநலம் இல்லாத இடத்தில் மகிழ்ச்சியும் நிறைவும் பொங்கும்.

# पाठ :सप्त विंश: ஸம்ஸ்க்ருதம் அறிவோம் பாடம்-27

| | | | | | |
|---|---|---|---|---|---|
| तक्रम् | = மோர் | गन्तुम् | =போவதற்கு | वदति | = சொல்கின்றான் |
| क्षीरम् | = பால் | नेतुम् | =எடுத்துக் கொண்டு போவதற்கு | आह्वयति | = கூப்பிடுகின்றான் |
| पानीयम् | = தண்ணீர் | आनीय | =எடுத்து வந்து | आह्वास्यति | = அழைக்கக்கடவன் |

## வினாக்கள்

1. अद्य क्षीरं सम्यगस्ति।
2. त्वं गत्वा क्षीरमानीय क्षीरान्नं कुरु।
3. वयं सर्वे पानीयमानेष्यामः।
4. तक्रमानेतुं कः अगच्छत्?
5. ते बालकाः घृतार्थमागच्छन्।
6. गृहे किञ्चिदपि लवणं नास्ति।
7. यूयं मम जनकम् आनयथ।
8. युष्मत्कूपे जलं लवणम् अस्ति।
9. त्वं स्नानं कृत्वा शीघ्रमागच्छ।
10. यूयं ममानुजं झटिति भोजनार्थं वदतावयं गत्वा तथैव वदिष्यामः।

1. அவன் அங்கு இருந்தால் கூப்பிடு.
2. எங்கள் தந்தை எங்கிருந்தாலும் சற்று (கொஞ்சம்) கூறு.
3. நம் வீட்டில் மோர் கொண்டு வர யார் போனார்கள்?
4. நாமே போக வேண்டும்.
5. நீங்கள் அது வரை எங்கும் போக வேண்டாம்.
6. நாங்கள் எங்கும் போக மாட்டோம்.
7. இங்கேயே இருக்கிறோம் அல்லவா.
8. அங்குக் கிணறு இருப்பதால் மெதுவாகப் போ.
9. பிள்ளைகளைச் சாப்பிடுவதற்குக் கூப்பிடு.
10. இங்குப் பிள்ளைகள் இல்லை. அவர்கள் எங்கிருக்கிறார்களோ நீயே சென்று அழைத்து வாரும்.

## விடைகள்

1. இன்று பால் நன்றாக இருக்கிறது.
2. நீ போய் பால் கொண்டு வந்து பால்சாதம் செய்.
3. நாம் எல்லோரும் தண்ணீர் கொண்டு வருவோம்.
4. மோர் கொண்டு வருவதற்கு எவன் வந்தான்?
5. அந்தச் சிறுவர்கள் நெய்யிக்காக வந்தார்கள்.
6. வீட்டில் கொஞ்சம் கூட உப்பு இல்லை.
7. நீங்கள் எங்கள் தந்தையை அழைத்துக் கொண்டு வாருங்கள்.
8. உங்கள் கிணற்றில் தண்ணீர் உப்பாக இருக்கிறது.
9. நீ குளித்து விட்டு விரைவாக வா.
10. நீங்கள் என்னுடைய தம்பியை உடனே சாப்பிடுவதற்கு வரச் சொல்லுங்கள். நாங்கள் போய் அதே விதமாகச் சொல்லுக் கடவோம்.


1. सः तत्र भवति चेत् आह्वयतु।
2. मम पिता कुत्र अस्ति इति किञ्चित् वदत।
3. अस्माकं गृहे तक्रम् आनेतुं के अगच्छन्?
4. अस्माभिरेव गन्तव्यम्।
5. यूयं तावत् पर्यन्तं कुत्रापि मा गच्छतु।
6. वयं कुत्रापि न गच्छामः।
7. अत्रैव स्मः खलु।
8. तत्र कूपः अस्ति शनैः गच्छत।
9. बालकान् अन्नं खादितुम् आह्वय।
10. अत्र बालकाः न सन्ति। ते कुत्र सन्ति वा त्वमेव गत्वा आनय।

தெலுங்கு மூலம் : மகாமகோபாத்யாய காசி கிருஷ்ணாசாரி,
தொகுப்பு : திரு.கே. சூர்ய நாராயணா, தமிழாக்கம் : டாக்டர் கே.கே.ஏ.ரங்கராஜன்

பல்சுவைப் பகுதி

சித்திரப் பகுதி

எண்களை இணைத்து வண்ணம் தீட்டுங்கள்




படத்தைப் பாருங்கள்






வண்ணம் தீட்டுங்கள்



சித்திரம் ஏற்புடைய சொல்லை இணைக்க...

1. புத்தகம்
2. மயில்
3. வேதம்
4. பாம்பு
5. வெண்ணெய்
6. ஆலகாலவிஷம்
7. வில்லம்பு
8. கதை





| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |

மாறி மாறியுள்ள எழுத்துக்களைச் சரியாக கண்டுபிடித்து, மேலே உள்ள சித்திரத்திற்கு நேரே உள்ள கட்டத்தில் எழுதுவோமா!

*லிபு, தாரைம, சரகக்ம், சூம்ல, பாபும், தம்ன, ள்வா, ங்சகு*

## வார்த்தைகளைச் சரியாக எழுதி ஆத்திசூடியைப் படிப்போமா!

செய அறம் விரும்பு, சினம் ஆறுவது

அறம் செய விரும்பு, ஆறுவது சினம்.

பாதையைக் கண்டுபிடி



எண்களின் கூட்டு எண்ணிக்கை 15 வரும் பாதையில் இந்தச் சிறுமி சென்று தாயாரை சேவிக்கவேண்டும். அந்தச் சிறுமிக்கு உதவுவோமா!




கதக்களி நடனம், படகுப் போட்டி, அதிக யானைகள் நிறைந்த இந்த மாநிலத்தில் ஓணம் பண்டிகை சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

மாநிலம் : ...............

கேரளா

வினாடி வினா

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி போட்டி எண்-13

**ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!**

1. திருவரங்கப்பெருமாள் அரையர் அவதரித்த நட்சத்திரம், மாதம் ...................................................
2. வெள்ளத்தின் உள்ளானும் வேங்கடத்து மேயனும் எனப் பாசுரமிட்டவர் ...................................................
3. ஸ்ரீதேசிகனுக்கு ஸ்ரீஹயக்ரீவ மந்திரத்தை அருளியவர் ...................................................
4. ஸ்ரீஹயக்ரீவரை தரிசித்த கன்னட ஹரிதாசர் ...................................................
5. “செய்க தவம், செய்க தவம் நெஞ்சே தவம் செய்” எனக் கூறியவர் ...................................................
6. வரலக்ஷ்மி விரதம் மேற்கொள்ளப்படும் மாதம், கிழமை ...................................................
7. “ஸ்ரீகுணரத்ன கோஷம்” இயற்றியவர் ...................................................
8. காஷ்யப முனிவரின் மனைவியர் ...................................................
9. அகத்தியர் எந்த மலையின் கர்வத்தினை அடக்கினார் ...................................................
10. லோபமுத்ரா மணந்த மகரிஷி ...................................................
11. வாமன அவதாரத்தில் சுதர்ஷனர் ஆவேசித்த இடம் ...................................................
12. திருவேளிக்கை திவ்ய தேச விமானத்தின் பெயர் ...................................................
13. புரட்டாசி மாதத்தில் வருகின்ற ஏகாதசிகளின் பெயர்கள் ...................................................
14. ஏறு மயில் ஏறி விளையாடும் முகம் ஒன்று எனக் கூறியவர் ...................................................
15. நரசிம்ம அவதாரத்தில் சுதர்சனர் ஆவேசித்த இடம் ...................................................

## போட்டிக்கான நிபந்தனைகள்



- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்குட் பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்திய குடிமக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்த பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, T.T.D. Press Compound, K.T. Road, Tirupati-517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியை குறித்து எவ்வித தகவல்களும் தொலைபேசி வாயிலாக தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலைபேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.08.2023.

| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |

**விடையை எழுதுங்கள்!**
**திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்!!**

# இதில் பொருந்தாதது எது?



..................................



..................................



..................................




..................................

குறிப்பு : அஷ்டலக்ஷ்மி, லக்ஷ்மி குடி கொள்பவை , விரதத்திற்கு பயன்படுபவை, ஆவணி மாதத்தில் விசேஷமாக வழிபடும் தெய்வங்கள்இவற்றிற்கு தொடர்பு இல்லாதவற்றை எழுதவும்.



இரண்டு சித்திரங்களுக்கு இடையே உள்ள ஏழு வித்தியாசங்களைக் கண்டு பிடியுங்கள்



1) மேகம்
2) சாமரம்
3) பட்டாடை
4) பெண்
5) ஸ்வஸ்திக் கோலம்
6) தாமரை மலர்
7) விளக்கு

# பகாசுரன் வதம்

சித்திரக் கதை

கதை மூலம் :திரு. டி. ஸ்ரீநிவாச தீக்ஷிதலு
சித்திரம் :திரு. டி. துவரகநாத்





குந்தி தேவி அவர்களை தேற்றி சம்மதிக்கச் வைத்தாள். மேற்படி ஏற்பாடுகளை அக்குடும்பமே செய்தது. பகாசுரனின் குகைக்கு உணவுடன் குந்தி புத்திரர் பீமன் சென்றான்.
பசியாக உள்ளது. விரைவாக வாடா! மானிடா!
ஐயோ! பகாசுரா! உன் உணவினை நானே உண்டு விட்டேனே.
உன்னை கரகரவென்று மென்று விடுகிறேன் பார்.
என் தொண்டைக்கு இடையூறாக இருக்கின்றாயா? வாவா யுத்தத்திற்கு...
பீமனுக்கும் பகாசுரனுக்கும் இடையே பயங்கரமான யுத்தம் ஏற்படுகிறது.
காத்திரு அசுரா!
காத்திரு மானிடா!
ஹா...
ஹூ...
இறுதியில் பீமனால் தாக்கப்பட்டு இரத்தம் சிந்தி பகாசுரன் மடிந்தான். வண்டியினை திருப்பி பீமன் அக்ரகாரத்திற்கு வந்தான்.
ஜயம்! ஜயம்!
சுபம்... சுபம்...
மக்கள் பீமனை போற்றி புகழ்ந்தனர்.
முற்றும்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

(சமய மாத இதழ்)

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : ________________
(பெரிய எழுத்துக்களில்) ________________
________________
________________

அலைபேசி எண் ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ.240/- ☐ ரூ.2,400/-(12 வருடங்கள்)

4. சந்தா புதுப்பித்தல் :
(அ) சந்தா எண். :
(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :
பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ஐ.பி.ஓ)
ரசீது எண் : தேதி:
வங்கி கேட்பு வரைவோலை/காசோலை
எண். : தேதி:
இடம் :
நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி
தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்சென்டர்

உங்களுக்காக

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும்*
*பணிபுரியும் எப்பொழுது*
*வேண்டுமானாலும்*
*நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-**
**2233333**
**2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/- ஆயுள்சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள்) காசோலை, இ.எம்.ஓ.,ஐ.பி.ஓ., டி.டி. -யை பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ அல்லது வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
தி.தி.தேவஸ்தான அச்சக வளாகம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி - 517507.

Printed by Sri P. Ramaraju, M.A., and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Phd., on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.



## திருமலையப்ப ஸ்வாமி வருடாந்திர பிரம்மோத்ஸவம் 2023 செப்டம்பர் 18 முதல் 26 வரை

18-09-2023
திங்கட்கிழமை
பகல்:துவஜாரோஹணம்
இரவு:
பெரிய சேஷ வாகனம்

19-09-2023
செவ்வாய்க்கிழமை
பகல் : சிறிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ஸ வாகனம்

20-09-2023
புதன் கிழமை
பகல் : சிம்ம வாகனம்
இரவு :
முத்துப்பந்தல் வாகனம்

21-09-2023
வியாழக்கிழமை
பகல் : கல்பவிருக்ஷ வாகனம்
இரவு : சர்வபூபால வாகனம்

22-09-2023
வெள்ளிக்கிழமை
பகல் : மோகினி அவதாரம்
இரவு : கருட வாகனம்

23-09-2023
சனிக்கிழமை
பகல் : ஹனுமத்வாகனம்
இரவு : யானை வாகனம்

24-09-2023
ஞாயிற்றுக்கிழமை
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

25-09-2023
திங்கட்கிழமை
பகல் : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்

26-09-2023
செவ்வாய்க்கிழமை
பகல் : சக்ரஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம்

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## திருமலையப்ப ஸ்வாமி நவராத்ரி பிரம்மோத்ஸவம் 2023 அக்டோபர் 15 முதல் 23 வரை



15-10-2023
ஞாயிற்றுக்கிழமை
பகல்:தங்க திருச்சி உத்ஸவம்
இரவு:
பெரிய சேஷ வாகனம்

16-10-2023
திங்கட்கிழமை
பகல் : சிறிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ஸ வாகனம்

17-10-2023
செவ்வாய்க்கிழமை
பகல் : சிம்ம வாகனம்
இரவு :
முத்துப்பந்தல் வாகனம்

18-10-2023
புதன் கிழமை
பகல் : கல்பவிருக்ஷ வாகனம்
இரவு : சர்வபூபால வாகனம்

19-10-2023
வியாழக்கிழமை
பகல் : மோகினி அவதாரம்
இரவு : கருட வாகனம்

20-10-2023
வெள்ளிக்கிழமை
பகல் : ஹனுமத்வாகனம்
இரவு : யானை வாகனம்

21-10-2023
சனிக்கிழமை
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

22-10-2023
ஞாயிற்றுக்கிழமை
பகல் : தங்கத்திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்

23-10-2023
திங்கட்கிழமை
பகல் : சக்ரஸ்நானம்
இரவு : திருச்சி உத்ஸவம்

SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-07-2023 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No. APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2021-2023 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No. PMGK/RNP/WPP-04(5)/2021-2023" Posting on 20th of Every month.

